Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

ஞாயிற்றுக்கிழமை | புரட்டாதி 03 ஆம் நாள் 19 செப்ரெம்பர் 2021 | சுடர் : 36 கதிர் : 293 வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 28 (12+16)
விலை : ரூ.40

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

# கொரோனாச் சாவு திடீரெனச் சரிவு!!!

**தொற்றாளர்கள் எண்ணிக்கையும் 51 நாள்களின் பின்னர் வீழ்ச்சி!!**

கொழும்பு, செப்ரெம்பர் 19
இலங்கையில் 40 நாள்களின் பின்னர் முதல் தடவையாக கொரோனாத் தொற்றாளர்களின் உயிரிழப்பு எண்ணிக்கை நூறை விடக் குறைவாகப் பதிவாகியுள்ளது. 11

## வீதியில் நடமாடியோருக்கு திடீர் அன்டிஜென் சோதனை

5பேருக்குத் தொற்று (விரிவு -பக்.05)

## தனிமைப்படுத்தப்பட்ட 'பார்' அனுமதியின்றி திறப்பு

வவுனியா, செப். 19
வவுனியாவில் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்ட மதுபானசாலை சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலை மீறி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. மதுபானசாலைகளை திறப்பதற்கு மதுவரி திணைக்களம் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கி 11

## 29 வயதுக்கு உட்பட்டோருக்கு செவ்வாய் முதல் தடுப்பூசி

யாழ்ப்பாணம், செப். 19
யாழ். மாவட்டத்தில் 20 வயது தொடக்கம் 29 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார். (ஒ,159)

## சிறுவனின் சடலம் மீட்பு கொலையா? தற்கொலையா?

**பொலிஸார் தீவிர விசாரணை**

மன்னார், செப். 19
மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரி 11

## கோப்பாயில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 19
இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான ஹன்டர் வாகனம் முச்சக்கரவண்டியைப் பந்தாடியதில், முச்சக்கரவண்டிச் சாரதி சம்பவ இடத்தில் உயிரிழந்தார். கோப்பாய் இராசவீதியில் இந்தச் சம்பவம் நேற்றுக் 11

## பெண் பிரதேச செயலர்களுக்கு 'மர்ம ஆசாமிகள்' தொந்தரவு!!! பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 19
யாழ்ப்பாண மாவட்டத்தில் பணியாற்றும் பெண் பிரதேச செயலர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலர்களுக்கு·கடந்த இரு நாள்களாக தொலைபேசியூடாக 'மர்ம ஆசாமிகள்' தொந்தரவு 11

## வவுனியாவிலும் முதியோர் காப்பகத்தில் தொற்றுப் பரவல் 6பேர் உயிரிழப்பு 50பேருக்குத் தொற்று

வவுனியா, செப். 19
கைதடி அரச முதியோர் இல்லத்தில் கொரோனாத் தொற்று ஏற்பட்டதன் காரணமாக 6பேர் உயிரிழந்திருந்த நிலையில், வவுனியா பம்பைமடு முதியோர் காப்பகத்திலும் தொற்றுப் பரவல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக 50 பேருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளதுடன் இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர். (ஒ,18,110)

## மதுபானசாலைகள் திறப்பு ஆரம்பித்த இடத்துக்கே நாம் மீளப்போகிறோம்!

**சுகாதாரப் பணிப்பாளர் கவலை**

கொழும்பு, செப். 19
மதுபானசாலைகள் திறக்கப்படுவதால் அதன்மூலம் மக்களுக்கு கொரோனா பரவும் அபாயம் உள்ளது. எதிர்காலத்திலும் இந்நிலைமை தொடர்ந் 11

## பால்மா விலை 200 ரூபாவால் அதிகரிப்பு?


கொழும்பு, செப். 19
ஒரு கிலோகிராம் பால்மாவின் விலையை 200 ரூபாவால் அதிகரிப்பதற்கு நிதியமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. 11

## ஆலயத்தில் தொற்றுப் பரவல் கும்பாபிசேகமும் நிறுத்தம்

வவுனியா, செப். 19
சுகாதாரத் தரப்பினர் வழங்கிய அனுமதிக்கு முரணாக செயற்பட்ட ஆலயத்தின் கும்பாபிசேகத்தில் கலந்துகொண்ட 7 பேருக்கும் அவர்களுடன் தொடர்புடைய 5 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 11

## அதிக விலையில் சிமெந்து முகவர் மீது வழக்குத்தாக்கல்

வவுனியாவில் சில மூடைகள் பறிமுதல்



வவுனியா, செப். 19
வவுனியாவில் கட்டுப்பாட்டு விலையை மீறி சிமெந்தினை அதிக விலையில் விற்பனை செய்த நிலையில், ஒரு தொகை சிமெந்து மூடைகள் வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல் 11

## 3 வாள்கள் மீட்பாம்

யாழ்ப்பாணம், செப். 19
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுவில் கிழக்குப் பகுதியிலுள்ள தோட்டக் காணியொன்றில் இருந்து 3 வாள்கள் நேற்றுக் காலை 10 11

## அநு. சிறைச்சாலைச் சம்பவம் அரசுக்கு சார்பாக சாட்சிகளை தயார்ப்படுத்தும் கைங்கரியம்

அம்பலப்படுத்துகிறார் மனோ. எம்.பி.



கொழும்பு, செப். 19
அநுராதபுரம் சிறைச்சாலையில் லொஹான் ரத்வத்த துப்பாக்கியை லோட் செய்து தமிழ் அரசியல் கைதிகள் மீது அடாவடித்தனத்தை பிரயோகித்தது உண்மையே. ஆனால் அதை மூடிமறைக்கும் வகையில் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐ.நா.சபையின் 76ஆவது தொடரில் பங்கேற்க

# அமெரிக்கா புறப்பட்டார் ஜனாதிபதி கோத்தாபய

**கொழும்பு, செப். 19**

**அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நேற்று அதிகாலை, நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.**

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், சர்வதேச மாநாடொன்றில் பங்கேற்பதற்காக நாட்டை விட்டுப் புறப்பட்டுச் செல்லும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும் என்பதோடு, ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடரில் அரச தலைவராக உரையாற்றவுள்ள முதல் சந்தர்ப்பமும் இதுவாகும். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையில், எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்த முறைக்கான கூட்டத்தொடர், 'கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலில் இருந்து மீள்வதற்கான நம்பிக்கையின் மூலம் நெகிழ்ச்சியை வளர்த்தல், நிலைத்தன்மையை மீளக் கட்டியெழுப்புதல், பூமியின் தேவைகளுக்கு பதிலளித்தல், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மறுமலர்ச்சி' என்ற தொனிப்பொருளிலேயே நடைபெறவுள்ளது.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தொடரில், எதிர்வரும் 22ஆம் திகதியன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உரையாற்றவுள்ளார் என்பதுடன், இதற்கிடையே, கூட்டத்தொடரில் பங்கேற்றுள்ள அரச தலைவர்களுடன், இரு தரப்புக் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் ஜனாதிபதியுடன் இந்தக் கூட்டத் தொடரில் பங்கேற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-22)



20 முதல் 29 வயதுடையவர்களுக்கு

## கிளிநொச்சியில் நாளை தொடக்கம் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி, செப். 19

கிளிநொச்சியில் நாளை திங்கட்கிழமை தொடக்கம், 20 இல் இருந்து 29 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு முதற்கட்ட தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பமாகவுள்ளது என்று மாவட்ட தொற்றுநோயியல் மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட 20 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்ட 28 ஆயிரத்து 482 பேர் உள்ளனர். அவர்களுக்கான முதற்கட்டத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், தருமபுரம் மத்திய கல்லூரி, முழங்காவில் ஆதார மருத்துவமனை, பூநககரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன. நாளைமறுதினம் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், உருத்திரபுரம் பிரதேச மருத்துவமனை, அக்கராயன் மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மகா வித்தியாலயம், முழங்காவில் ஆதார மருத்துவமனை, தருமபுரம் மத்திய கல்லூரி, பளை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் என்பவற்றிலும் தடுப்பூசி ஏற்றும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. - என்று தெரிவித்தார். (த-214)

## அமெரிக்காவுக்கான தூதராக மஹிந்த சமரசிங்க எம்.பி.



கொழும்பு, செப். 19

அமெரிக்காவுக்கான புதிய இலங்கைத் தூதுவராக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க பொறுப்பேற்கவுள்ளார்.

இதற்காக அவர் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்யத் தீர்மானித்துள்ளார். மேலும், மெக்ஸிக்கோ நாட்டுக்கும் மஹிந்த சமரசிங்கவையே தூதுவராக நியமிப்பதற்கும் ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தனது அமெரிக்கப் பயணத்தை ஆரம்பிப்பதற்காக நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன்னர் மஹிந்த சமரசிங்கவுடன் கலந்துரையாடினார் எனவும், அமெரிக்கத் தூதுவர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி கோரினார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவைக் கையாள அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவையென்ற அடிப்படையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்த விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆர்யசிங்கவின் ஓய்வு அறிவிப்பு வெளியான நிலையில், அந்தப் பதவியை ஏற்க மஹிந்த சமரசிங்கவே சரியான நபர் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ஆட்சியின்போதும், நல்லாட்சியின்போதும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை சார்பாக மஹிந்த சமரசிங்க செயற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில் அமெரிக்காவைக் கையாள அவர் பொருத்தமானவர் என அரசு தீர்மானித்துள்ளது. (த-22)

## வல்வெட்டித்துறையில் இன்று குருதிக்கொடை

யாழ்ப்பாணம், செப். 19

வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனையின் சிகிச்சை நிலையத்தில், இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் குருதிக்கொடை நடைபெறவுள்ளது.

தற்கால சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெறும் குறித்த குருதிக்கொடை முகாம், மறைந்த சமூக சேவையாளரும் வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளருமான அமரர் கோ.கருணானந்தராசாவுக்குச் சமர்ப்பணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைப் பிரதேச நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டிலும் முன்னாள் குருதிக் கொடையாளர்களின் அனுசரணையிலும் இது நடைபெறவுள்ளது. (த)



## குருதி வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு

### குருதிக் கொடையாளர்களை அழைக்கின்றன குருதி வங்கிகள்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் மீண்டும் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக 'ஓ பொசிற்றிவ்' (O+) குருதிக்கு அவசர தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, குருதிக் கொடையாளர்களை குருதி வங்கிகள் எதிர்பார்த்துள்ளன.

ஏற்கனவே குருதிக்கொடைசெய்து நான்கு மாதங்கள் பூர்த்தியானவர் மற்றும் புதிதாக குருதிக்கொடை செய்யக் கூடியவர்கள், உங்களுக்கு அருகிலுள்ள குருதி வங்கிக்குச் சென்று குருதிக்கொடைசெய்து உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு குருதி வங்கிப் பிரிவு கேட்டுள்ளது.

கொரோனாத் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்கள், தடுப்பூசி பெற்றுக்கொண்ட தினத்திலிருந்து ஒரு கிழமையின் பின்னர் குருதிக் கொடை செய்யலாம். கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தால் அது சுகமடைந்து தொற்று இல்லையென உறுதிப்படுத்திய தினத்திலிருந்து ஒரு மாதத்தின் பின்னர் குருதிக்கொடை செய்யலாம்.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி குருதிக்கொடை முகாம்களையும் நடத்தலாம். இவை பற்றிய தகவல்களை 0772105375 எனும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும் என்று குருதி வங்கி அறிவுறுத்தியுள்ளது. (த)

## கொத்தலாவல பல்கலையின் நிர்மாணப்பணிகள் ஆரம்பம்

கொழும்பு, செப். 19

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வேரஹெறாவில் நவீன வசதிகளை உள்ளடக்கிய புதிய விடுதிக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்ப நிகழ்வில் துணைவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் மற்றும் நிலத்தின் கொடையாளர் மாலினி கொத்தலாவல ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தக் கட்டடத்தின் நிர்மாணப்பணிகள் 250 நாள்களில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துப் பயிர்களுக்கும் இனி இயற்கை உரங்களே

## அனுமதி வழங்கியது அமைச்சு



**கொழும்பு, செப். 19**

**நெல் தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் பிறபயிர்களுக்குத் தேவையான இயற்கை உரங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக இரண்டு அரச உர நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நெல் தேயிலை, தென்னை, இறப்பர் மற்றும் பிற பயிர்களுக்குத் தேவையான இயற்கை உரங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் அனைத்துப் பயிர்களுக்கான உரங்களையும் தட்டுப்பாடின்றி சந்தையில் இருந்து பெற்றுக் கொள்வதற்காக, தனியார் துறையினருக்கும் உர இறக்குமதிக்கான அனுமதியும் வழங்கப்படும்.

இலங்கையில் முதன்முறையாக நெற்செய்கைக்குத் தேவையான இயற்கை உரங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு வருகின்றன. போதிய அளவு நைட்ரஜன் மற்றும் பொட்டாசியம் என்பன இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு ஹெக்ரேயருக்கு 300 கிலோகிராம் நைட்ரஜன் மற்றும் 45 கிலோகிராம் பொட்டாசியம் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

(ம-4)

# ஊடக உயர் டிப்ளோமா கற்கைநெறி யாழ்ப்பாணப் பல்கலையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறை வழங்கும் ஊடகக் கற்கைகளில் உயர் டிப்ளோமா கற்கைநெறி நேற்றுமுன்தினம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா குறித்த கற்கைநெறியை ஆரம்பித்துவைத்தார்.

ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சி.ரகுராம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலைப்பீடப் பீடாதிபதி கலாநிதி க.சுதாகர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நிகழ்நிலைத் தொழில்நுட்பம் வழியாக நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் ஊடகக் கற்கைகள் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பல்கலைக் கழகம் சமூகத்துக்கு ஆற்றவேண்டிய கடைமைகளில் ஒன்றாக, துறைசார் ஆர்வமிருந்தும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகத் தவறிய மாணவர்களுக்கும், தொழில் சார் ஊடகவியலாளர்களாகப் பணியாற்றுவோருக்கும் பல்கலைக்கழகக் கல்வி மூலம் உரிய தகைமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக இந்த ஊடகக்கற்கைகளில் உயர் டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது என்று துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

இரு வருட பகுதிநேரக் கற்கையாக ஆரம்பிக்கப்படும் உயர் டிப்ளோமா கற்கைநெறி துறைசார் விரிவுரையாளர்கள், மூத்த ஊடகவியலாளர்கள், ஊடக ஆய்வாளர்கள் ஆகியோரின் கல்விசார் பங்களிப்புடன் சுயநிதிக் கற்கையாக முன்னெடுக்கப்படவுள்ளது.

(ஐ)

# பழுதடைந்த மின்விளக்குகளால் பயணிப்போர் பல்வேறு சிரமம்!

சாவகச்சேரி, செப். 19

கைதடி மற்றும் நாவற்குழி பாலங்களில் பொருத்தப்பட்டிருக்கும் மின் விளக்குகள் பழுதடைந்து காணப்படுவதால் அதனூடாக பயணிப்போர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறித்த பகுதிகள் ஊடாக இரவு வேளைகளில் பயணிப்போர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் விடுத்த வேண்டு கோளையடுத்து பாலத்தில் மின்வி ளக்குகள் பொருத்தப்பட்டன. அவை தற்போது பழுதடைந்து காணப்படுகின்றன. எனவே புதிய மின்விளக்குகளைப் பொருத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

(ஐ-9)

# திருமறைக்கலாமன்ற ஆய்வரங்கம் இன்று!

யாழ்ப்பாணம், செப். 19

திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தும் ஆய்வரங்கத் தொடரின் நான்காவது நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு சூம் செயலி ஊடாக நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக 'கலைத்தூது நீ.மரியசேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை' என்னும் தலைப்பில் இந்த ஆய்வரங்கம் நடத்தப்படுகின்றது.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அழகியல் பாட ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பரத கலாவித்தகர் மதிவாணி விக்னராசா தலைமையில் நான்காவது நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் 'அருட்கலாநிதி நீ .மரியசேவியர் அடிகளின் ஆடற்கலை மீதான அக்கறையும் ஆக்கங்களும்' என்னும் தலைப்பில் கரம்பொன் சிறியபுஷ்பம் மகளிர் மகா வித்தியாலயத்தின் நடன ஆசிரியர் பரத கலாவித்தகர் சுதர்சினி கரன்சன் ஆய்வை நிகழ்த்துவார். ஆர்வமுள்ளவர்கள் சூம் செயலி இலக்கம் 7893644809 மற்றும் கடவுச் சொல் cpa என்பதற்கூடாக இணைந்து கொள்ளமுடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-4-ரி1)


## முதியவர்களுக்கு கொடுப்பனவு

தென்மராட்சி பிரதேச முதியவர்க ளுக்கான செப்ரெம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவு தபால் அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் தபால் அலுவலகங்கள் மூடப்படுமென்பதால் காலந்தாழ்த்தாது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(ம-ரி2,9)

# மரண அறிவித்தல்



## திரு. சபாபதி யோகசேகரம்

92. கண்டி வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சபாபதி யோகசேகரம் நேற்று (18.09.2021) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி துரையம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு கனகம்மா தம்பதியரின் மருமகனும், பூரணத்தின் அன்புக் கணவரும், முரளீதரன் (கனடா), சிவகாமி (ஆசிரியை - கொழும்பு), யாழ்தரன் (Manager,Alliance Insurance) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஷ்பராணி (கனடா), கோகுலேந்திரா (வைத்தியர்-கொழும்பு), அபிராமி (ஆசிரியை, சுண்டிக்குழி மகளிர் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், அபிநயா, கபிலன், அபிராமி, ஆதிரை ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சௌந்தரராணி மற்றும் தர்மாம்பிகை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவரான இராசையா மற்றும் சிவானந்தராஜா, காலஞ்சென்றவரான முருகையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தனர்.

92, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை

அன்னை மடியில்
18 • 06 • 1966



ஆண்டவன் அடியில்
17 • 09 • 2021

## மிருதங்கக் கலைஞர்
## அமரர் சதாசிவம் வேல்மாறன் (சதாவேல்மாறன்)

**(புகழ்பூத்த மிருதங்கக் கலைஞர், மிருதங்க ஆசான், சதா வேல்மாறன் கடந்த (17.09.2021) மாலை இறைவனடி சேர்ந்துவிட்டார்)**

எங்கு சென்றாய் எம் கலைஞ...?
எண்ண எண்ண ஏக்கம் குறையுதில்லை...
பொங்கிடும் நற்பண்புகளும் - என்றும்
புதிதளிக்கும் சிந்தனையும்
சங்கீதமும் - இங்கிதமும்
சாற்றும் மொழியில் நிறையன்பும்
கொண்டவுனை - கொடுந்தொற்றால்
காலனுக்குக் கொடுத்து விட்டோம்...

மண்பற்றும், மகிழ்வூற - அன்பார்ந்து
மாணவர்களை அணைக்கும் மாண்பும்,
விண்ணளந்த புகழெனினும்
வியந்திடும் பணிவும்
கொண்டவுனை - கொடுந்தொற்றால்
காலனுக்குக் கொடுத்து விட்டோம்...

சென்று வருக எம் அன்ப -
கலையூறும் - நின்
சிந்தனைகள் எங்கள் நெஞ்சில்
நின்று நிலைத்திருக்கும்...
சென்று இறையுடன் - மிருதங்க இசை
சேர்த்து மகிழ்ந்திடுக..!

**தொடர்புகளுக்கு:**
**077 9173 947 - மைத்துனன்**
**076 2710 104 - மகள்**

**துயரில் துவளும்**
**குடும்பத்தினரும்,**
**கலையுலக நண்பர்களும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அரைகுறை முடக்கமும் அரசின் சீத்துவமும்!

இலங்கையில் கொரோனாத் தொற்று தீவு முழுவதும் வியாபித்திருக்கின்றது. தொற்றுக்குள்ளானோரில் 90 வீதமானோர் டெல்டா திரிபுடனேயே அடையாளம் காணப்படுகின்றனர். இப்படியொரு இக்கட்டான நிலை சுகாதாரத் தரப்பினர் கொரோனாத் தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவர பகீரதப்பிரயத்தனம் செய்துகொண்டிருக்க பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டிய அரசோ கேலிக்கூத்தாடிக் கொண்டிருக்கிறது.

நாட்டை முடக்குவதன் ஊடாகவே கொரோனாத் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று சுகாதாரத் துறையினர் உறுதியாக நம்புகின்றனர். பொதுமக்களைக் கொரோனாப் பிடியில் இருந்து எப்பாடுபட்டாவது விடுவித்துவிடவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே நாட்டைச் சிலகாலம் முடக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைத்திருந்தனர். ஆனால் அதையும் அரசியல் சந்தேகக் கண்ணோடு நோக்கிய ராஜபக்ச அரசு பொதுமுடக்கத்தை தள்ளிவைத்து சாக்குப்போக்குக் கூறிவந்தது.


கொரோனாத் தொற்று தீவிரமடைந்து உயிரிழப்புக்கள் அதிகரிக்க ஆரம்பித்தபின்னர்,பலரின் அழுத்தத்தின் பின்னரே நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை அரசாங்கம் நடைமுறைப் படுத்திய. ஆனால் பெயரளவில் ஊரடங்கை அறிவித்துவிட்டு அனைத்துமே திறந்துவிடப்பட்ட அரைகுறை ஊரடங்காகவே இது அமைந்தது. சுகாதாரத் தரப்பினரின் நம்பிக்கையான, பொது முடக்கத்தால் எந்தப் பயனும் கிட்டாது என்ற விம்பத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்குடன் வீம்புக்காகச் செயற்படுவது போன்றிருந்தன அரசின் செயற்பாடுகள்.

இப்போது கொரோனாத் தொற்றின் வேகம் சற்றுத் தணிந்துள்ளதைப் போன்று தோன்றுகின்றது. நாட்டில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்ட அரைகுறை ஊரடங்கே இதற்குக் காரணம் எனலாம். ஆனால் சுகாதாரத் தரப்பினர் எதிர்பார்த்ததுபோன்று முழுமையான ஊரடங்கு நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் கொரோனாத் தொற்றுப் பரவல் முன்னதாகவே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கலாம். நாட்டின் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்குரிய அவகாசமும் கிடைத்திருக்கலாம். ஆனால் ராஜபக்சக்கள் அரசு அதைச் செய்யவில்லை.

இப்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கை நீடித்துள்ளது அரசு. இந்த அறிவிப்பு விடுக்கப்பட்ட சிலமணி நேரத்திலேயே மதுபான நிலையங்களைத் திறக்கும் அறிவிப்பும் வெளியானது. அதுவரை கட்டுப்பாட்டுக்குள் இருந்த பொதுமக்கள் மதுபானக் கடைகளின் முன்பாகக் குவிந்தனர். நாடு முழுவதும் இந்த நிலைமை இருந்தது. ஊண், உறக்கத்தை மறந்து சுகாதாரத் தரப்பினர் மேற்கொண்டிருந்த பிரயாசைகள் அனைத்தும் காற்றுடன் பறந்தன. இதில் மற்றொரு வேடிக்கை, மதுபான விற்பனை நிலையங்களைத் திறக்கும் முடிவை யார் எடுத்தார்கள் என்பது, அறிவிப்பு வெளியாகி ஒரு நாள் கடந்தும் இன்னும் தெரியவரவில்லை. அந்தளவில் இருக்கின்றது இலங்கையில் ராஜபக்சக்களின் நிர்வாக நிலைமை.

சுகாதாரத் தரப்பினருடன் கலந்துரையாடாமல் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. நேற்று முன்தினம் மதுபானசாலைகள் திறக்கப்பட்ட அந்த ஒருநாளில் மட்டும் எத்தனைபேர் தொற்றுக்குள்ளாகினார்கள் என்பதும், எத்தனைபேர் வீடுகளுக்குத் தொற்றைக் கொண்டுசென்றார்கள் என்பதும் சில நாள்களின் பின்னர் தெரியும். அரசின் இந்தக் கேலிக்கூத்தான செய்கைகளால் இன்னமும் பல நாள்கள், நாட்டு மக்கள் கொரோனாப் பிடிக்குள் இருக்கப்போகின்றார்கள். அதனால் ஏற்படப்போகும் விபரீதங்களை அறியாது மக்களும் பொறுப்பின்றி நடந்துகொள்கிறார்கள்.

அரசு இயந்திரம் ஒத்துழைக்காவிட்டாலும் சுகாதாரத் துறையினர் தங்களால் இயன்ற அளவு கொரோனா கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். தங்களின் இயலுமைக்கு ஏற்றவாறு அன்டிஜென் பரிசோதனைகள் மூலமும் ஏனைய நடவடிக்கைகள் மூலமும் தொற்றாளர்களைக் கண்டறிய முயற்சிப்பதுடன், தேவையற்ற நடமாட்டங்களையும் கட்டுப்படுத்த முனைகின்றனர். மதுபானக் கடைகளின் முன்பாகக் கூடியோரைப் பரிசோதித்தீர்களா? வீதியில் பயணிப்போரைப் பரிசோதிக்கிறீர்கள் என்ற வீண் விதண்டாவாதங்களை விட்டு, யாருக்காக அவர்கள் கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் போரிடுகிறார்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கும் வகையில் நடந்துகொள்ளுங்கள்.




### ஊரடங்கில் நடமாடியோருக்கு

# குளப்பிட்டிச் சந்தியில் அன்டிஜென் சோதனை

### சிலருக்குக் கொரோனா உறுதியானது

**யாழ்ப்பாணம், செப். 19**

**தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையில் உள்ளநேரம் கொக்குவில் பகுதியில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகரித்தமையால், கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் வீதியில் பயணித்தவர்களை வழிமறித்து திடீரென்று அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.**

அந்தப் பகுதியில் வியாபாரம் மேற்கொண்ட வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் என பலருக்கும் அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணப் பொலிஸார் மற்றும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் இணைந்து அன்டிஜென் பரிசோதனையை மேற்கொண்டனர். இதன்போது சிலருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப் பட்டது.

அதனையடுத்து அவர்களுக்கு சிகிச்சையளிக்க மேலதிக நடவடிக்கையை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டனர். இதே வேளை, மதுபானசாலைகளில் விற்பனையில் ஈடுபடலாம் என்ற செய்தி நேற்றுமுன்தினம் மாலை பரவியநிலையில் மதுப்பிரியர்கள் தனியாள் இடைவெளியை மீறி மதுபானங்களை கொள்வனவு செய்யத் தொடங்கினர். அதன்போது தனியாள் இடைவெளி பேணப்பட்டிருக்கவில்லை. சிலர் முகக்கவசமும் அணிந்திருக்கவில்லை. நெரிபடும் நிலையில் தள்ளுப்பட்டவறே அவர்கள் மதுபான வகைகளைக் கொள்வனவு செய்வதற்கு முண்டியடித்தனர். அவற்றைக் கண்காணிக்காத, கண்டுகொள்ளாத சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும் சந்தை வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கின்றமை தொடர்பில் அங்குநின்ற பலரும் விசனம் வெளியிட்டனர். (து-20)

# வவுனியாவில் மதுபானசாலைகள் சுகாதாரப் பிரிவினரால் தனிமை!

வவுனியா, செப். 19

வவுனியாவில் திறக்கப்பட்டு சுகாதார நடைமுறைகளின்றி வியாபாரத்தில் ஈடுபட்ட 4 மதுபானசாலைகள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டன.



கொரோனாப் பரவல் காரணமாக நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் முதலாம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டில் சில மதுபானசாலைகள் நேற்று மாலை திறக்கப்பட்டன.

அந்தவகையில், வவுனியாவில் சில மதுபானசாலைகள் திறக்கப்பட்டமையால் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தையும் மீறி நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மதுபானசாலைகள் முன்பாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது திரண்டனர். இதனையடுத்து சுகாதாரப் பிரிவினர் குறித்த மதுபானசாலைகளை மூடுமாறு பணித்ததுடன், அங்கு நின்றவர்களையும் பொலிசாரின் உதவியுடன் வெளியேற்றினர்.

அத்துடன், சுகாதார நடைமுறைகளைப் பேணாது வியாபாரத்தில் ஈடுபட்ட, வவுனியா நகரில் கண்டி வீதியில் உள்ள மதுபான சாலை, பூவரசன்குளம் பகுதியில் உள்ள மதுபானசாலை, ஓமந்தையில் உள்ள மதுபானசாலை, மரக்காரம்பளையில் உள்ள மதுபானசாலை என 4 மதுபானசாலைகள் தனிமைப்படுத்தல் நோட்டீஸ் ஒட்டப்பட்டு 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டன. (ம-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பருக்குள் மாற்றம் வரும்

• பேராசிரியர் நம்பிக்கை

**கொழும்பு, செப். 19**

**நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், எதிர்வரும் நவம்பர் மாதமளவில் அமைதியான நிலைமையை எதிர்பார்க்க முடியும் என்று ராகம மருத்துவ பீடத்தின் மூத்த பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேலும் பத்து நாள்கள் நாட்டை முடக்குவதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானம் மிகவும் சரியானது. தினசரி பதிவாகும் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 500 என்ற வரம்பை அடைந்தவுடன் நாட்டை மீண்டும் திறக்க முடியும்.

ஆயிரத்து 500 என்ற எண்ணிக்கையை மருத்துவமனை அமைப்பு சமாளிக்க கடினமாக இருக்காது. அதேவேளை தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் போது தடுப்பூசி செலுத்துதல் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

தடுப்பூசி மக்கள் தொகையில் 80 விகிதத்தை அடையும் வரை ஒரு குறிப்பிட்ட அளவிலான பயணக் கட்டுப்பாடுகளைப் பராமரிப்பது முக்கியம். நாட்டைத் திறப்பதற்கு முன்பு தொடர்ச்சியான நடைமுறை சுகாதார வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்துவது இன்றியமையாதது. இனிமேல் சுகாதாரத் துறை செயலில் இருக்க வேண்டும் - என்றார். (ம-4)

# ஹரின், வடிவேலுக்கு நீதிமன்றின் உத்தரவு

கொழும்பு, செப். 19

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக ஹரின் பெர்னாண்டோவும், பொதுச் செயலாளராக வடிவேல் சுரேஷும் தொடர்ந்தும் செயற்பட முடியும் என்று சிவில் மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மலையக மக்களுக்காக, சேவை நோக்குடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்தும் நோக்குடன், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க மற்றும் ஆர். யோகராஜன் ஆகியோர் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். கடந்த மாதம் 16ஆம் திகதி மாவட்ட நீதிமன்றால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக, 10 நாள்கள் தடையுத்தரவு பெற்றிருந்தனர். அதனை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனு, சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது தடைகள் எதுவும் இன்றி இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நடவடிக்கைகளை, தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்று நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

'இது ஒட்டுமொத்த பெருந்தோட்ட மலையக மக்களுக்கு கிடைக்கப்பெற்ற வெற்றி. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு தொழில் நலனுக்காக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தொடர்ந்து செயற்படும்' என்று வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். (ம-4)

# இலங்கையில் மிகவிரைவில் நிலநடுக்கம்

கொழும்பு, செப். 19

இலங்கையில் மிக விரைவில் நிலநடுக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது என்று பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் அத்துல சேனாரத்ன அன்டஜ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக பதுளை, கண்டி, மடுல்சீமை, லுணுகம்வெஹர மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் நிலநடுக்கம் பதிவாகியிருந்தது. அதன் அடிப்படையில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவுக்கமைய நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# அசேல சம்பத் பதவி விலகல்

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அசேல சம்பத், அனைத்து சிவில் அமைப்பு நடவடிக்கைகளிலிருந்தும் தற்காலிகமாக விலக முடிவுசெய்துள்ளார். தொலைபேசி மூலமாக விடுக்கப்பட்ட கொலைமிரட்டலை அடுத்து, குடும்பத்தினர் மற்றும் தனது பாதுகாப்பைக் கருதி அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார். குறித்த தொலைபேசி அழைப்புத் தொடர்பான தகவல்களை அவர் பொலிஸாருக்கு வழங்கியுள்ளார். (ம-ரி1)

UNIVERSITY COLLEGE OF JAFFNA
UNIVOTEC

University College of Jaffna
University of Vocational Technology
State Ministry of Skills Development, Vocational Education, Research & Innovations

**Applications are open for the following Courses**

- Construction Technology
- Building Services Technology
- Mechatronics Technology
- Production Technology
- Farm Machinery Technology
- Food Technology
- Hospitality Management
- Cosmetology ( Beauty Culture )

Closing Date 15th October 2021

Accreditation QMS Registration TVEC Approved

*Entry Qualifications*
GCE A/L qualified or NVQ 4

*Career Path :* A/L or NVQ 4 → University College: NVQ 5/ Diploma → NVQ 6/ HND → UNIVOTEC NVQ 7/ Degree

*For more details*
University College of Jaffna
29, Brown Road,
Kokuvil,
Jaffna.

Visit our website: www.ucj.ac.lk
E-mail: info@ucj.ac.lk
Telephone: 021-221-7791 or 021-221-7792

Application forms can be dowloaded from the website

Please pay the application Fee Rs. 500 to this a...
(Peoples Bank 162 - 100100045947) and attach the bank receipt with application

மணிவிழா வாழ்த்து




ஆசிரியை திருமதி உமா ஜெயராஜா SLTS - I
English Trained,
Dip.in.English - Distinction Pass (University of Jaffna)
(யா/செங்குந்த இந்துக்கல்லூரி)

சேவைக்காலம்

| | | |
|---|---|---|
| யா/ ஊர்காவற்றுறை அ.த.க பாடசாலை | 02.05.1995 - | 05.06.1997 |
| யா/ நல்லூர் சென்பெனடிக்ற் வித்தியாலயம் | 06.06.1997 - | 31.12.1997 |
| பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை | 01.01.1998 - | 31.12.1999 |
| யா/ நல்லூர் சென்பெனடிக்ற் வித்தியாலயம் | 01.01.2000 - | 13.03.2000 |
| யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி | 14.03.2000 - | 13.06.2010 |
| யா/ செங்குந்த இந்துக் கல்லூரி | 14.06.2010 - | 18.09.2021 |

சேவைநலன் பாராட்டு

அன்னையாய் அரவணைத்து ஆசிரியத்துக்கு இலக்கணமாய்
இனிமையாய் பழகி ஈடில்லாப் புலமை கொண்டு
உண்மையாய் ஊக்கமதாய்
எழுசுடராய் ஒளிர்ந்து ஏறு போல் கம்பீரமாய்
ஐயந்திரிபறக் கற்பித்து
ஒப்புவமை இல்லா சேவையாற்றி ஓய்வு இன்றுபெறும் ஔவை நீ
எஃகு போல் உறுதியான உமையம்மை
அகவை அறுபதில் நிறைந்(து) தாய்
உமை வாழ்த்திப் போற்றிப் பணிகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/செங்குந்த இந்துக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொஹானுக்கு தண்டனை: சிங்கள ராவய வலியுறுத்து

கொழும்பு, செப். 19

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு உடனடியாக தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று சிங்கள ராவய அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்தன தேரர் தெரிவிக்கையில், சிறைச்சாலைக்குச் சென்ற முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தமிழ் அரசியல்வாதி ஒருவருக்கு தமது பாதுகாப்புத் துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தல் விடுத்துள்ளார். இந்தச் சம்பவமானது மிகவும் பாரதூரமான விடயமாகும். இது பெரும் குற்றச்செயலாகும்.

ஆகவே நீதி நிலைநாட்டப்பட வேண்டும். குற்றத்தைச் செய்துவிட்டு, பதவியை விட்டு விலகினால் எல்லாம் சரியாகி விடாது. குற்றத்துக்கு தண்டனையே வழங்கப்பட வேண்டும். இல்லை என்றால் எதிர்காலத்தில் நாட்டு மக்களும் குற்றங்களைச் செய்து விட்டு, அமைச்சர்கள் பாணியில் அவர்களும் செய்ய முற்படுவார்கள். லொஹானுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்த அரசு இத்தகைய வன்முறைகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருமாயின், இறுதிக் காலத்தில் மக்களின் தாக்குதலுக்கு உள்ளாகி, இறந்து போவார்கள்-என்றார். (ம-4)

# லொஹான் ரத்வத்தவுக்கு அமைச்சர்கள் பாராட்டு

கொழும்பு, செப். 19

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவை, ஆளுந்தரப்பு அமைச்சர்கள் பாராட்டியுள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்திய விவகாரம் தொடர்பில், இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த உடனடியாக பதவி விலகினார். இதற்கே அமைச்சர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். லொஹானுக்கு எதிராக விசாரணை இடம்பெற்றாலும், அவர் பதவியிலிருந்து விலகியமை சிறந்த முன்னுதாரணம் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அதேவேளை லொஹான் பதவியிலிருந்து விலகியமை சிறந்த உதாரணமாகும். இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக இதுபோன்ற சம்பவம் நிகழ்ந்துள்ளது. உலக நாடுகளில் குற்றச்சாட்டை எதிர்கொண்ட அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகினார்கள் ஆனால் நாட்டில் அவ்வாறு இடம்பெறுவதில்லை என்று விமர்சித்தார்கள். இன்று அப்படியான சம்பவம் இடம்பெறுகையில் அதற்கும் அப்பாற்பட்ட விசாரணையை நடத்தும்படி கோருகின்றார்கள். எனினும் லொஹான் பதவியிலிருந்து விலகினார். அது மிகவும் சிறந்த முன்னுதாரணமாகும் என்று பெருந்தெருக்கள் அமைச்சரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ம-4)

### அநுராதபுரம் சிறையிலுள்ள

# தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

### சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை



மன்னார், செப். 19

அநுராதபுரம் தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலர் சிவசக்தி ஆனந்தன்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் நுழைந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளில் இருத்தி அச்சுறுத்தியுள்ளார். அத்துடன் காலணிகளை நாவால் சுத்தம் செய்யுமாறு மனித விழுமியங்களுக்கு முற்றிலும் முரணான மிலேச்சத்தனமான செயற்பாடுகளை முன்னெடுத்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்விதமான செயற்பாடுகள் இந்த நாட்டில் சிறுபான்மையினத் தேசிய இனங்களை தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் எவ்வாறு நடத்துகின்றார்கள் என்பதை சர்வதேசத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன. ஆகவே, இத்தகைய குரூரமான மனோநிலை கொண்டவர்களிடத்தில் நீதியை, நியாயத்தினை எதிர்பார்க்கமுடியுமா என்பதும் அப்பட்டமாகியுள்ளது.

தற்போது இராஜாங்க அமைச்சர் சிறைச்சாலை விடயதானத்திலிருந்து மட்டும் பதவியை இருந்து இராஜினாமாச் செய்துள்ளார். இந்த செயற்பாட்டை அரசாங்கம் குறித்த விடயத்துக்கான பொறுப்புக்கூறலாக படம் காட்டுவதற்கு முயற்சிக்கின்றது.

மேலும், சிறைச்சாலை நிர்வாகம் இவ்விதமான சம்பவம் ஒன்றே நடைபெறவில்லை என்கிறது. இராஜாங்க அமைச்சர் சிறைக்குச் சென்றேன். மதுபோதையில்லை என்று வாக்குமூலம் கூறுகின்றார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அனுமதிப்பத்திர துப்பாக்கியை வைத்திருந்தார் இராஜாங்க அமைச்சர் என்கிறார். இவ்வாறு பல விநோதமான கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இதனைவிட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை தீவிரமாக முன்னெடுப்பதாகவும் கூறுகின்றது. இந்த ஆணைக்குழு கடந்த காலங்களில் எத்தனை விடயங்களுக்கு நீதியை நிலைநாட்டியிருக்கின்றது என்பது ஊரறிந்த உலகறிந்த வியடம். ஆக இந்த விசாரணைக்குழுவின் முடிவு இப்போதே தெரிந்த தொன்றே.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உடன் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு முதற்கட்டமாக அவர்களை வடக்கு கிழக்கில் உள்ள சிறைச்சாலைகளுக்கு இடமாற்ற வேண்டும் - என்றார். (ம-18)

# லொஹான் விவகாரம்: புஷ்பிகாவும் தொடர்பு

கொழும்பு, செப். 19

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுடன், இலங்கையின் அழகு ராணி புஷ்பிகா டி சில்வாவும் வெலிக்கடைக்குச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தன் மீதான குற்றச்சாட்டுகளை புஷ்பிகா டி சில்வா மறுத்துள்ளார்.

எனினும் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு, அவர் சம்பவ இடத்துக்குச் சென்றதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. புஷ்பிகா டி சில்வா லொஹான் ரத்வத்தையுடன் வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்றுள்ளார் என்று கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவின் தலைவரான சட்டத்தரணி சேனக பெரேரா தெரிவித்துள்ளார். (ம-4)



# மஹிந்த வந்தவுடன் லொஹானுக்கு ஆப்பு

இத்தாலிக்குப் பயணம் செய்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ச இந்தவார இறுதியில் நாடு திரும்பவுள்ளார். அதன் பின்னர் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தொடர்பில் முக்கிய தீர்மானம் எடுக்கப்படும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மற்றும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு நண்பர்கள் குழுவுடன் மதுபோதையில் நுழைந்து, கைதிகளை அச்சுறுத்தினார் என்று லொஹான் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பெரமுனவின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பிரதமர் தலைமையில் விவாதிக்கப்படும். பிரதமரின் வருகைக்குப் பின்னரே கட்சியின் மத்திய செயற்குழு கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

லொஹான் ரத்வத்த சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு பதவியை மட்டும் விலகியிருந்தாலும், மாணிக்கம் மற்றும் ஆபரணத் தொழில்களுக்கான இராஜாங்க அமைச்சுப் பதவியில் தொடர்ந்தும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4)

# லொஹான் ரத்வத்த விவகாரத்தில் மனித உரிமை ஆணைக்குழு களத்தில்

கொழும்பு, செப். 19

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவால் சர்ச்சைக்குள்ளான விவகாரத்தை விசாரணை மேற்கொள்வதற்காக, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நேரடியாக களமிறங்கியுள்ளது.

அதற்கமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூன்று பிராந்திய ஒருங்கிணைப்பு அதிகாரிகள் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி அநுராதபுரம் சிறைக்குச் சென்ற இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகள் இருவரை மண்டியிடச் செய்து, தலையில் துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தினார் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், பல்வேறு தரப்பினர்களும் கண்டனம் வெளியிட்டிருந்தனர்.

அத்துடன், லொஹான் ரத்வத்தவை உடன் கைதுசெய்ய வேண்டும். அவரைப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இதனையடுத்து சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சுப் பதவியை விட்டு லொஹான் ரத்வத்த விலகினார்.

இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நேரடி விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. அதனடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து பொறுப்பான சாட்சிகளையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூடிய விரைவில் விசாரணைக்கு அழைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் 15 . 06 . 1941



விண்ணில் 16 . 09 . 2021

## திருமதி தியாகராசா தங்கமலர்

யாழ்ப்பாணம், கட்டபிராயைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்டு கனடாவில் வாழ்ந்து வந்த திருமதி தியாகராசா தங்கமலர் அவர்கள் கடந்த (16.09.2021) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தியாகரூபன் மற்றும் தியாகசொரூபன், தியாகமலர், தியாகவேணி, தியாகவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோகரலிங்கம், காலஞ்சென்ற செழியன், மதிஅழகன், மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன், தங்கராசா, செல்வநாயகம், இராசமலர் மற்றும் கனகலிங்கம், மனோகரன், தவமணி, சுரேஷ்பிறேமச்சந்திரன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.09.2021) ஞாயிற்றுக்கிழமை 1 மணி தொடக்கம் 2.30 மணி வரை, சப்பல் றிஜ் FUNERAL ஹோம், 8911, வூட்பைன் அவன்யூ, மார்க்கம், ஒன்ராஜியோவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்க்கு அறியத் தருகின்றோம்.

**தொடர்பு: சுரேஷ் பிறேமச்சந்திரன் - 077 736 2481**
**சர்வேஸ்வரன் - 077 718 4410**
**சொரூபன் - 001 416 400 7797**

# மரண அறிவித்தல்



## திருமதி சற்குணதேவி சுந்தரலிங்கம்

வீமன்காமம் டச்சுறோட் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் அரியாலை இரோஜேஸ்வரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணதேவி சுந்தரலிங்கம் அவர்கள் கடந்த (15.09.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் றோயல் சவுண்ட் உரிமையாளர் காலஞ்சென்ற சதாசிவம் சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி பாக்கியம் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் தங்கச்சியம்மா அவர்களின் அன்பு மருமகளும் கனகலிங்கம் காலஞ்சென்ற அன்னலீலா மற்றும் பரமேஸ்வரி, கணேசலிங்கம் அவர்களின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கார்த்தியேசு, மகாலிங்கம், சுப்பிரமணியம், மன்மதராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்ற இராசையா அவர்களின் மருமகளும், சிந்துஜா, பிருந்தா, தனுஷன், அவர்களின் பாசமிகு தாயாரும், திலீபன், சதீஸ்குமார், கிஷோகா, அவர்களின் அன்பு மாமியாரும், ஜனாத்தன், ஜதுர்ஷன், ஜனுஷ், பிருத்திக், கீர்த்திக், சருமிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 309 1257** **தகவல்: குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 08 . 1943



இறப்பு 16 . 09 . 2021

## அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்

(ஓய்வுநிலை நில அளவை உத்தியோகத்தர் – கச்சேரி, கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய முன்னாள் கௌரவ செயலாளர், தற்போதைய ஆலய நிர்வாகி)

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுப்பிரமணியம் (ஓய்வு நிலை நில அளவை உத்தியோகத்தர் - கச்சேரி, மற்றும் கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய முன்னாள் கௌரவ செயலாளரும், தற்போதைய ஆலய நிர்வாகியும்) அவர்கள் கடந்த (16.09.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சேதுகாவலர் சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் தெய்வானையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகராசாவின் அன்புச் சகோதரரும், தனலட்சுமி, சந்தானலட்சுமி, கிருபாலட்சுமி காலஞ்சென்ற பகிரதன், மற்றும் சோபனா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிவலிங்கராசா, கணேசமூர்த்தி, அழகேசன், திலீப்குமார் ஆகியோரின் பாசமிகு மாமானாரும், யமுனா - றஞ்சித்கண்ணா, கங்கா - சிவநாதன், தாரணி, தேவதேவன், கயனா, பிரதாபன், அர்ணன், கனிமொழி, கலைப்பிரியா, பவிசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, ஆறுமுகம், செல்லமுத்து, அன்னமுத்து, சோமசுந்தரம் மற்றும் செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (17.09.2021) வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கைதடி கிழக்கு,**
**கைதடி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

மலர்வு 25 10 1943



உதிர்வு 13 09 2021

## திருமதி மகேஸ்வரி பரமலிங்கம்

மலேசியாவை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி மகேஸ்வரி பரமலிங்கம் அவர்கள் 13.09.2021 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை செல்வலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் Dr.பரமலிங்கத்தின் பாசமிகு மனைவியும் சண்முகரட்ணத்தின் அன்புச் சகோதரியும் யுகாவின் பாசமிகு தாயாரும் சுகந்தனின் அன்பு மாமியாரும் திரோஷன், தீக்க்ஷனா ஆகியோரின் அன்புப்பேத்தியும் சுகிர்ராணி, காலஞ் சென்றவர்களான அமிர்தலிங்கம், கனகலிங்கம், கனகாம்பிகை மற்றும் யோகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.09.2021 அன்று கல்கிசை பொது மயானத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**
**இல.37 1/4, தயா வீதி, வெள்ளவத்தை.**

**தொலைபேசி :** 011 2365596, 077 7779206.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வெளிநாட்டுப் படகில் போதைப் பொருள்கள்

*9 பேர் கைது*

அதிகளவு போதைப்பொருள்களை ஏற்றி வந்த வெளிநாட்டு மீன்பிடிப் படகு ஒன்று கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது. படகிலிருந்த 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கையின் தென்பகுதிக் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, குறித்த படகு கண்டுபிடிக்கப்பட்டது.

பொலிஸாரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் இலங்கைக் கடற்படையினர் குறித்த சந்தேகநபர்களைக் கைதுசெய்தனர். சந்தேகநபர்கள் இலங்கைக் கடற்படைக் கப்பலான சிதுரலாவின் மூலம் கொழும்பு துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (ம -4)

### இலங்கையில்

## மனித உரிமை நிலைவரம் மிகப்பெரும் பின்னடைவு

*ஐ.நா. அறிக்கையாளர் கவலை*

**கொழும்பு, செப். 19**

**இலங்கையில் மனித உரிமை நிலைவரம் மிகப் பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது என்று ஐ.நா சபையின் உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீள இடம்பெறாமையை உறுதிப்படுத்தல் தொடர்பான விசேட அறிக்கையாளர் பெபியன் சல்வியொலி தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடரில் இலங்கை குறித்த தமது அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உண்மை மற்றும் நீதியைத் தேடுவதற்கான நடவடிக்கைகள் போதிய அளவு முன்னெடுக்கப்படவில்லை. இந்த விடயங்கள் நிலைமாறுகால நீதி வழங்கல் செயல் முறையையும் பாதித்துள்ளன. கடந்த 18 மாதங்களில் மனித உரிமை நிலைவரம் மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. அத்துடன் பொறுப்புக்கூறல் விடயங்களிலும் முன்னேற்றமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



## தடுப்பூசி ஏற்றாதோருக்கு தடை விதிக்க முடியாது

கொழும்பு, செப். 19

கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்டமைக்கான அட்டை இல்லாதவர்கள் தமது பகுதிக்குள் நுழைய முடியாது என்ற தடையை விதிக்க முடியாது என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரும், ஊடகப் பேச்சாளருமான விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

மன்னார் மற்றும் பலாங்கொட உள்ளிட்ட நகரங்களுக்குச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அறிந்துள்ளோம். அவ்வாறான எவ்வித தடையையும் அரசு விதிக்கவில்லை. தடுப்பூசியைச் செலுத்திக் கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயின், அதற்குப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தடுப்பூசி பெற்றுக்கொண்டமைக்கான அட்டை இல்லாதவர்கள் வீதிக்கடவைகளைக் கடந்து செல்ல முடியாது என்ற அறிவிப்புக்கள் பிறப்பிக்கப்படவில்லை. எனினும், நாட்டிலுள்ள வேறு ஏதேனும் சட்டங்களின் பிரகாரம், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தால், அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# அரசை முந்திய எதிர்க்கட்சிகள்

கொழும்பு, செப். 19

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றில், ஆளுந்தரப்பினரை விட எதிர்க்கட்சியினர் சிறப்பாகச் செயற்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் ஒரு வருடம் நிறைவடைந்துள்ள நிலையில், மிகவும் சிறப்பாகச் செயற்பட்ட பத்து உறுப்பினர்களை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று தரப்படுத்தியுள்ளது. அந்தப் 10 பேரில் ஐந்து பேர் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசை பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுனவின் நான்கு பிரதிநிதிகளும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோரும் இதில் இடம் பிடித்துள்ளனர்.

பத்துப் பேரில் புத்திக பத்திரன முதலிடத்தைப் பிடித்துள்ளார். நாடாளுமன்ற வருகை, நாடாளுமன்ற விவாதங்களில் பங்கேற்று கருத்து வெளியிடல் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கு அமைய இந்தக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண மாணவர்களுக்கான
FREE ONLINE CERTIFICATE COURSES
Certificate in Counselling & Psychology
Certificate in Teacher Training
Certificate in English
இப் பாடநெறி திட்டத்தில் உங்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
இப் புதிய பாடநெறிகளுக்கான வகுப்புகள் 2021 செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.
Call Us For More Info
+9477 270 3494
AMAZON CAMPUS
87, Kandy Road, (Opposite to Old Park) Jaffna
+94772703494 | amazonjaffna@gmail.com
CLOSING DATE 20TH SEPTEMBER 2021
HOTLINE 0215612151 AMAZONCOLLEGELK / WWW.AMAZONCOLLEGE.LK


## விண்ணக வாழ்வில் 21 ஆண்டுகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 08 . 12 . 1948 | 19 . 09 . 2000 |



### அமரர் அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராஜா

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

அன்பு மொழி பேசி, சிரிப்பால் எல்லோரையும் கவர்ந்து
பாசமுடன் எம்மோடு பழகி,
பாதியிலே எம்மைத் தவிக்க விட்டு
சென்றீரே அப்பா! எப்போது மீண்டும் வருவீர
எனக் காத்திருக்கின்றோம்

2, இராசாவின் தோட்ட
ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06 11 1935 | 21 08 2021 |



### தியாகராஜா இராஜசூரியர்

**Retired District Engineer - Department of Buildings Sri Lanka, Director – J.R.Y Builders**

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தியாகராஜா இராஜசூரியர் அவர்கள் 21-08-2021 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னார், காலஞ்சென்றவர்களான தியாகராஜா செட்டியார் இரத்தினவல்லி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், கலாசக்தி (சீமா) அவர்களின் அன்புக் கணவரும், ஜனார்த்தனன், பார்த்தீபன் (USA), காயத்திரி(Canada), வானதி(London), லக்ஷ்மன்(London) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ஆரணி, குமுதினி, யசோதரன், இளங்குமரன், ஆத்மிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற விஜயசூரியர், இராஜேஷ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நன்னிதம்பி, அன்னப்பா ஆகியோரின் மருமகனும் ஜனனி, ஹரினி, ஜயனி, யாதவன், காவியா, அஷ்வினி, பிரீத்தி, நிருஷன், ஹரிஷ், ஓவியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். இறுதிக்கிரியைகள் 21-08-2021 சனிக்கிழமை அன்று கோவிட்-19 கட்டுபாடுகளுக்கு உட்பட்டு நடைபெற்றது. அன்னாரின் மறைவு செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டி கிரியையும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் 19.09.2021 இன்று கொழும்பு, பம்பலபிட்டிய இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: குடும்பத்தினர், ஜனார்த்தனன் - மகன்
தொ.பே : 011 250 4124, 076 4587175, 0777 340289

## கூலியாள் தேவை

யாழ் நகரில் தோட்ட வேலை தெரிந்த கூலியாள் தேவை.

**077 722 2715**

## பணியாளர் தேவை

மில் அனுபவமுள்ள முகாமையாளர், வேலையாட்கள் மற்றும் பொதி செய்யும் பெண்கள் தேவை.

தொடர்பு: **077 77 222 15**

## வீடு வாடகைக்கு

சுண்டிக்குளிப் பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு உண்டு. அத்துடன் அறைகளும் வாடகைக்கு விடப்படும்.

**077 724 2427 / 077 741 2713**

## வீடு வாடகைக்கு

இருபாலைச் சந்தியிலிருந்து 1 km தூரத்தில் டச் வீதியில் 5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: **077 60 111 35**

## வீடு வாடகைக்கு

யாழ். பலாலி வீதி கந்தர் மடத்தில் 5 அறை கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.
மாத வாடகை 30, 000/-

**077 990 6867, 077 214 0220**

## மணமகள் தேவை

1983 இல் பிறந்த கொழும்பை சேர்ந்த BA படித்து சுயதொழில் செய்யும் மணமகனுக்கு 7இல் செவ்வாய் தோஷம் அற்றது. பொருத்தக்கூடிய அழகிய படித்த மணமகளை எதிர்பார்க்கின்றோம். உள்நாட்டு, வெளிநாட்டு.

**075 669 6801, 011 259 8824**

## வீடு வாடகைக்கு

யா/ கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு (ஸ்ரான்லி - கல்லூரி) அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**077 533 3703**

## சேவை

வெள்ளவத்தை, தெகிவளை போன்ற பகுதிகளில் உங்கள் முதியவர்களை பராமரிப்புக்கு எங்களிடம் தொடர்பு கொள்ளலாம் மற்றும் கிளீனிங் சேவைக்கும் எங்களிடம் திறமையுள்ளவர்கள் உண்டு அத்துடன் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ள முடியும்.

**074 055 5922**

## மரண அறிவித்தல்



### திருமதி செல்வராஜா பரிமளம்

யாழ் கோண்டாவில் வடக்கு கலைவாணி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராஜா பரிமளம் அவர்கள் கடந்த (14.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வராஜா அவர்களின் அன்பு மனைவியும், இராஜகுமார் (பொறியியலாளர்), யசோதா (சமுர்த்தி உத்தியோகத்தர், நல்லூர்), நந்தகுமார் (பொறியியலாளர்-லண்டன்), வசந்தி (முன்னைய சமுர்த்தி உத்தியோகத்தர் - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராஜேஸ்வரி, அன்னலட்சுமி மற்றும் நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மயில்வாகனம், சிவபாக்கியம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், பூபாலசிங்கம், வாமதேவன், இராஜலட்சுமி, தேசோமயம் மற்றும் நாகராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், Dr.அனுராதா (NHSL-Colombo), கருணாகரன், சாந்தி (லண்டன்), டினேஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், தனுஸ்யா, அபிஷேக், பிருசா, நிதுசா, கம்சியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுகாதார முறைப்படி இன்று (19.09.2021) ஞாயிற்றுக்கிழமை பி.ப 6.00 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மகன் - 071 814 8413
மகள் - 077 805 7205

தகவல்:
குடும்பத்தினர்.

# விளாவெளி மயானத்தில் மின்தகனசாலை அமைக்கவும்

## வலி. தென் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 19

விளாவெளி மயானத்தில் மின்தகனசாலை ஒன்றை அமைப்பதற்கான கருத்திட்ட முன்வரைபை ஆணையாளருக்கு சமர்ப்பிக்க வலி. தென் மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் முன்வரவேண்டும் என்று சபை உறுப்பினர் சி.மகேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா உயிரிழப்புக்கள் மற்றும் சாதாரண உயிரிழப்புக்கள் அதிகரித்த இன்றைய சூழலில் பிரான்பற்று விளாவெளி மயானத்துக்கு மின் தகனசாலை மிக அவசியமான ஒன்று. வலி.தென் மேற்கு பிரதேசம் 28 கிராம அலுவலர் பிரிவை கொண்ட பரந்த பிரதேசம்.

இந்தப் பிரதேசத்தின் மின் தகன சாலை குறித்து கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கும் வலி. தென் மேற்கு பிரதேச செயலகத்துக்கும் கடிதம் மூலமாக தெரியப்படுத்தியதுடன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டது.

தற்போது மயான தொழிலாளி, உயர் அழுத்த மின்சாரம், இருபக்க போக்குவரத்து வசதி, பரந்த நிலப்பரப்பு, கட்டட வசதிகள் என்பவற்றைக் கொண்ட பிரான்பற்று விளாவெளி மயானத்தில் மின்தகனசாலை ஒன்றை அமைப்பதற்கான முயற்சியை சபைத் தவிசாளர் முன்னெடுக்க வேண்டும். இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் சடலங்களை உடனுக்குடன் தகனம் செய்வதுடன் பிரதேச சபைக்கும் வருமானம் ஏற்படும் - என்றார். (ஐ-50)

## வேலையாள் தேவை

கொழும்பில் உள்ள வீடொன்றில் குழந்தைகளைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலை செய்வதற்கும் அனுபவமுள்ள பெண் தேவை.
வயது 40 தொடக்கம் 60 வரை
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 320 7608**

## நெல்லியடியில் கடைக் கட்டிடம் விற்பனைக்கு

நெல்லியடிச் சந்திக்கு அருகாமையில் மேல் மாடியுடன் கூடிய கடைக் கட்டிடம் விற்பனைக்கு.

தொடர்பு: **076 5768 514**

## வேலைக்கு ஆட்கள் தேவை

வயதானவர்களை பராமரித்தல் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. கொழும்பு, யாழ்ப்பாணம், போன்ற பகுதிகளுக்கு அனுபவமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்

**074 055 5922**

## பணிப்பெண், உதவியாளர் தேவை

யாழ் பிறவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து சமையல் செய்வதற்கு (ஒருவர், இருவருக்கு மட்டும்) பணிப்பெண் ஒருவரும், சிறு வேலைகள் செய்வதற்கு உதவியாளர் அல்லது பையன் ஒருவரும் தேவை.

சம்பளம்: பணிப்பெண் - 27,000/=
உதவியாளர் - 24,000/=

உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **077 715 7070**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தனிமை ...

யதையடுத்து வவுனியாவிலும் மதுபானசாலைகள் திறக்கப்பட்டன. வவுனியா நகரப் பகுதியிலுள்ள ஓர் மதுபானசாலையில் அதிகளவான 'குடி'மக்கள் திரண்டனர். இதனையடுத்து அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு மதுபானசாலை தனிமைப்படுத்தப்பட்டது.
ஆனால் நேற்றைய தினம் தனிமைப்படுத்தல் ஸ்டிக்கர் கிழிக்கப்பட்டு மதுபானசாலை திறக்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் விதி மீறலின் கீழ் சுகாதாரப் பகுதியினர் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளனர். (ஒ.18,110)

### பெண் பிரதேச...

கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
கடந்த 16ஆம் திகதியும் 17ஆம் திகதியும் தொலைபேசியூடான தொந்தரவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
டயலொக் தொலைபேசி இலக்கத்திலிருந்து பெண் பிரதேச செயலர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலர்களுடன் மர்ம ஆசாமிகள் தொடர்புகொள்கின்றனர். தம்மை வெளிப்படுத்தாமல், தம்மை தெரியவில்லையா? குரல் மறந்து விட்டதா? நீங்கள் அலுவலகத்தில் நிற்கின்றீர்களா? வீட்டில் நிற்கின்றீர்களா? என்று உரையாடியுள்ளனர். சில பெண் பிரதேச செயலர்களுக்கு அழைப்பை மேற்கொண்டு, யாழ். மாவட்டத்தில் உள்ள ஆண் பிரதேச செயலர்களின் பெயரைக் கூறி அவர்கள் கதைப்பதாகவும் மர்ம ஆசாமிகள் கூறியுள்ளனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஒ.5)

### மதுபானசாலைகள்...

தால் ஆரம்பித்த இடத்துக்கே மீண்டும் செல்லவேண்டிவரும். மாற்றுவழியில்லை. இவ்வாறு எச்சரித்துள்ளார் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
மதுபானசாலைகளைத் திறப்பதற்கு மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் அனுமதி அவசியம். அவர்களின் அனுமதியின்றி அதனை செய்யமுடியாது. மதுபானசாலைகள் திறக்கப்படுவதால் அதன்மூலம் மக்களுக்கு கொரோனா பரவும் அபாயம் உள்ளது. மதுபானசாலைகளை திறப்பதற்கு அனுமதி வழங்கும் அதிகாரிகள் அவதானமாகவே இருக்கவேண்டும். மேற்கூறப்பட்ட நிலைமை ஏற்படுவதற்கு இடமளிக்கக்கூடாது.
நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையிலுள்ளது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இந்நிலையில் மதுபானசாலைகளை திறப்பதற்கு இடமளிக்கப்பட்டமை, எந்த அடிப்படையில் என தெரியவில்லை, என்றார். (ஒ.44)

### அதிக விலையில்..

கள் அதிகார சபையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.
வவுனியா கூசைப்பிள்ளையார் குளம் வீதியில் நேற்றுக்காலை லொறி ஒன்றில் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டிருந்த சிமெந்து மூடைகள் தொடர்பாக வவுனியா பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் விசாரணை மேற்கொண்டனர்.
இதன்போது சிமெந்து மூடைகளில் அச்சிடப்பட்டிருந்த விலைக்கு அதிகமாக அவை விற்பனை செய்யப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.
இதனையடுத்து, சிமெந்து மூடைகளை அதிக விலைக்கு விற்பனைசெய்த குற்றச்சாட்டில், குறித்த முகவர் மீது வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஏனைய சிமெந்து மூடைகள் அனைத்தும் அவற்றின் பெறுமதிக்கேற்ப நிர்ணய விலையை முகவரிடம் செலுத்தி, மாவட்டத்தில் அமைந்துள்ள அரச திணைக்களங்களின் கட்டுமானத்தேவைக்காக பயன்படுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-110)

### ஆலையத்தில்...

வவுனியா, ஓமந்தையிலுள்ள ஆலயத்தில் கும்பாபிசேகம் நடத்துவதற்கு ஆலய நிர்வாகத்தால் சுகாதாரப் பிரிவினரிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது. ஆலய நிர்வாகத்தினர், உபயகாரர் என்று 9 பேருக்கே சுகாதாரப் பிரிவினர் அனுமதி வழங்கியிருந்தனர். ஆனால், 20 பேருக்கு மேல் ஆலயத்தில் நிற்பதாகவும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை எனவும் சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து அங்கு சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள், ஆலயத்தில் நின்ற 20 பேரிடமும் அன்டி.ஜென் பரிசோதனை மேற்கொண்டனர். இதில் ஆலய குருக்கள் உட்பட 7 பேர் கோவிட் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டனர்.
இதனையடுத்து குறித்த நபர்களுடன் தொடர்புகளை பேணியவர்களுக்கு நேற்று முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் மேலும் 5 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.
இதனையடுத்து ஆலயத்தின் கும்பாபிசேகம் நிறுத்தப்பட்டதுடன் 15 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (ஒ.110)

### அரசுக்கு...

இரண்டு கைதிகளை சரிப்படுத்தி, தயார்ப்படுத்தி சாட்சி சொல்ல வைக்க நடவடிக்கையெடுக்கப்படுவதாக ஒரு சந்தேகம், தகவல் வந்தது. அதை தேடிப்பார்த்தோம். அப்படியொரு நிலைமை உள்ளதாக நாங்கள் உணர்கிறோம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், காவிந்த ஜயவர்த்தன், ரோஹண பண்டார ஆகியோர் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்றுச் சென்றனர். அரசியல் கைதிகளைப் பார்வையிட்ட பின்னர் மனோகணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:
உள்ளே சென்ற போது, கடந்த சில தினங்களாக ஊடகங்களில் வந்த செய்திகள் அனைத்தும் உண்மையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ரத்வத்த என்ற அமைச்சர் மதுபோதையில், துப்பாக்கியுடன் வந்தார் என்பதை அங்குள்ள சிறைக்கைதிகள் எங்கள் மூவரிடமும் கூறினார்கள். மதுபோதையில் துப்பாக்கியை எடுத்து 'லோட்' செய்ததாக ஒரு சிறைக்கைதி சொன்னார். சற்று பிசகியிருந்தால் அது வெடித்திருக்கும்.
அப்படி நடந்திருந்தால், விடுதலைப்புலி சந்தேகநபர்கள் தாக்க முயன்றார்கள், அதனால் கலவரம் நடந்தது என கதை கட்டியிருப்பார்கள் என அந்தக்கைதி எம்மிடம் சொன்னார்.
இந்தச் சம்பவத்தின் பின் அமைச்சர் நாமல் ராஜபக்ச கைதிகளின் கோரிக்கையை ஏற்று இங்கு வந்தார் என சொன்னார்கள். பரவாயில்லை, நாமல் ராஜபக்சவிற்கு ஒன்றை சொல்கிறேன். தயவு செய்து இந்தக் கைதிகளை விடுதலை செய்யுங்கள். இனி போதும். எமது ஆட்சிக்காலத்தில் சுமார் 50 அரசியல்கைதிகளை விடுதலை செய்தோம். [illegible] முடியாமல் போய்விட்டது. நீங்கள் அதை முடியுங்கள். அவர்களை விடுவித்து தமிழ் மக்களின் மனங்களை வெல்லுங்கள் என நாமல், கோட்டா, மஹிந்த, பசிலுக்கு சொல்ல விரும்புகிறேன்.
உள்ளே இரண்டு கைதிகளை சரிப்படுத்தி, தயார்ப்படுத்தி சாட்சி சொல்ல வைக்க நடவடிக்கையெடுக்கப்படுவதாக ஒரு சந்தேகம், தகவல் வந்தது. அதை தேடிப்பார்த்தோம். அப்படியொரு நிலைமை உள்ளதாக நாங்கள் உணர்கிறோம். இருந்தாலும், கைதிகள் காப்பற்றப்பட வேண்டும். விடுவிக்கப்பட வேண்டும். அங்குள்ள கைதிகள் முதலில் தமது பிரதேசங்களிற்கு மாற்றப்பட வேண்டும். அரசியல் கைதிகள் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள குழுவின் முன் சென்று இதை முறையிடவுள்ளோம், என்றார். (ஒ.22)

### பால்மா...

பால்மா இறக்குமதியாளர்கள் மற்றும் நிதியமைச்சருக்கு இடையிலான கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.
நிதியமைச்சருடனான சந்திப்பின் போது உலக சந்தையில் பால்மா விலை அதிகரிப்பின் காரணமாக இலங்கையில் கிலோ ஒன்றுக்கு 340 ரூபா விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டுமென பால்மா இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியதாகவும், ஆனால் நிதியமைச்சர் 200 ரூபா விலை அதிகரிப்புக்கு இணக்கம் வெளியிட்டதாகவும் அறியமுடிகிறது.
200 ரூபா விலை அதிகரிப்புக்கு இணங்கியிருந்தாலும், அதனை நடைமுறைப் படுத்தவேண்டாம் என்ற அறிவுறுத்தல் இறக்குமதியார்களுக்கு பின்னர் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (ஒ.இ)

### 3 வாள்கள்...

மணியளவில் மீட்கப்பட்டுள்ளன.
தாக்குதலுக்குத் தயாராக இருப்பதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே இவை மீட்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. (ஒ.27)

### சிறுவனின்...

வில் இலுப்பைக்கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கள்ளியடி பகுதியில் வசித்து வந்த வவுனியாவைச் சேர்ந்த நாகேந்திரன் டிலக்ஸன் (வயது -14) எனும் சிறுவன் உயிரிழந்த நிலையில் வீட்டின் சுவாமி அறையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.
தூக்கில் தொங்கிய நிலையில் சிறுவனின் சடலம் மீட்கப்பட்டது. சிறுவன் கொலை செய்யப்பட்டுள்ளான் என அவரது தாயார் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.
சிறுவன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கள்ளியடி பகுதியில் அரிசி ஆலைக்கு அரிசி திரிக்கச் சென்ற நிலையில் அங்கு வைக்கப்பட்டிருந்த 5 ஆயிரம் ரூபா பணம் காணாமல் போயிருந்தது. சிசிரிவி கமராவின் உதவியுடன் அரிசி ஆலையின் உரிமையாளர்கள் ஆராய்ந்ததில், சிறுவன் பணத்தை எடுத்தது தெரிய வந்தது. இதுபற்றி சிறுவனின் உறவினர்களிடம் அரிசி ஆலை உரிமையாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டபோது, அந்த பணத்தை மீள ஒப்படைப்பதாக அவர்கள் உறுதியளித்தனர்.
எனினும், அரிசி ஆலையின் உரிமையாளரின் மகன் மற்றும் மகனின் நண்பர்கள் இருவர் என்று மூவர், சிறுவனின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, சிறுவனை கடுமையாக தாக்கியுள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.
சிறுவனின் சுகயீன நிலைமையை குறிப்பிட்டு தாக்குதல்தாரிகளின் காலில் விழுந்து சிறுவனின் தாயார் மன்றாடியுள்ள போதும் அந்தக் கும்பல் தாக்கிவிட்டே சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையின் போது குறிப்பிடப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியவர்கள் 17, 18 வயதுடையவர்கள். அவர்கள் சென்ற பின்னர், மகனை நித்திரையாக்கி விட்டு தாயார் குளிக்கச் சென்றுள்ளார். அவர் வீட்டுக்குள் நுழைந்த போது, சிலர் வீட்டின் பின்பக்கத்தால் தப்பியோடுவதை அவதானித்ததாக தெரிவிக்கின்றார். வீட்டுக்குள் அவர் சென்று பார்த்த போது, மகன் தூக்கில் தொங்கிய நிலையில் இருந்ததாகவும் தாயார் தெரிவிக்கின்றார். இது தற்கொலை அல்ல எனவும் மகன் தற்கொலை செய்யுமளவுக்கு விபரம் தெரியாதவர் எனவும் தாய் தெரிவிக்கின்றார். சிறுவனின் உயிரிழப்புத் தொடர்பாக இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளை இலுப்பைக்கடவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.இ)

### கோப்பாயில்...

காலை 8.30 மணிக்கு இடம்பெற்றது. சம்பவத்தில், கோப்பாயைச்சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான பெரியதம்பி கணேசலிங்கம் (வயது - 56) உயிரிழந்தார்.
நீர்வேலியிலிருந்து இராச வீதியூடாக முச்சக்கரவண்டியில் பயணித்து அவர் திருநெல்வேலிக்குச் செல்வதற்காக பாற்பண்ணை வீதிக்கு திரும்பியுள்ளார். இதன்போது வேகமாக பின்னால் வந்த இலங்கை மின்சார சபையின் ஹன்டர் வாகனம் முச்சக்கரவண்டியைப் பந்தாடியுள்ளது. முச்சக்கரவண்டிச் சாரதியான கணேசலிங்கம் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.
சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார், இறப்பு விசாரணையை மேற்கொண்டார். (ஒ.26)

### 'கொரோனாச்சாவு...

அதேபோன்று தொற்றாளர்களின் எண்ணிக்கையும் 51 நாள்களின் பின்னர் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. கடந்த ஒரு மாத காலமாக நாடு முடக்கப்பட்டிருந்த நிலையில் இவ்வாறானதொரு பெறுபேறு கிடைக்கப்பெற்றுள்ளது.
இலங்கையில் கொரோனாத் தொற்றுக் காரணமாக நேற்றுமுன்தினம் 84பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த மாதம் 9ஆம் திகதி 94பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்ததாகப் பதிவாகியது. அதன் பின்னர் தினமும் நூறை விட அதிகமானோரே கொரோனாத் தொற்றால் உயிரிழந்திருந்தனர். மேலும் நேற்றுமுன்தினம் உயிரிழந்த 84பேருடன் சேர்த்து இதுவரை இலங்கையில் 12 ஆயிரத்து 22 பேர் உயிரிழந்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அதேபோன்று, 51 நாள்களின் பின்னர் நாளொன்றில் மீண்டும் 2 ஆயிரத்துக்கும் குறைவான கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட ஆயிரத்து 983 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இறுதியாக கடந்த ஜுலை 28ஆம் திகதி நாளொன்றில் 2 ஆயிரத்துக்கும் குறைவான தொற்றாளர்கள் எண்ணிக்கை பதிவாகியிருந்தது. குறித்த நாளில் 940 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர். இந்நிலையில், 51 நாள்களின் பின்னர் நாளொன்றில் மீண்டும் 2 ஆயிரத்துக்கும் குறைவான தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஒ.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். ஆரம்பமாகிறது இன்று சென்னை, மும்பை பலப்பரீட்சை

**துபாய், செப். 19**

**ஐ.பி.எல். தொடரின் இரண்டாவது பாதி இன்று ஆரம்பமாகின்றது. இதன்படி இன்றிரவு நடைபெறும் ஆட்டத்தில் சென்னை மற்றும் மும்பை அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.**



இந்த வருடத்துக்கான ஐ.பி.எல். தொடர் கடந்த ஏப்ரல் மாதம் இந்தியாவில் நடைபெற்றது. கொரோனாத் தொற்றைக் கருத்தில்கொண்டு ரசிகர்கள் இல்லாமல் தொடர் நடத்தப்பட்டாலும் வீரர்களின் பயோ பபுள் வளையத்துக்குள்ளும் கொரோனாத் தொற்று ஊடுருவியது. இதையடுத்து தொடர் இடைநடுவில் கைவிடப்பட்டது. தொடரின் இரண்டாவது பாதி டுபாயில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டு இன்று ஆரம்பமாகின்றது.

இதன்படி இன்றைய முதலாவது ஆட்டத்தில் ரோகித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸும், டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸும் மோதவுள்ளன.

தொடரின் முதலாவது பாதியில் பொலார்ட்டின் அதிரடியான ஆட்டத்தால் சென்னை அணியை மும்பை வீழ்த்தியது.

இதனால் இன்று பதிலடி கொடுக்கும் முனைப்பில் சென்னை உள்ளது. இரு அணிகளின் வீரர்களும் நேற்று கடுமையான பயிற்சி களில் ஈடுபட்டனர். (ம)

# பாகிஸ்தான் தொடரை கைவிட்டது நியூசிலாந்து

*ஆட்டம் தொடங்குவதற்கு சில நிமிடங்களின் முன் முடிவு*



இஸ்லாமபாத், செப். 19

பாகிஸ்தானுக்கும் நியூசிலாந்துக்கும் இடையில் நடைபெறவிருந்த ஒருநாள் மற்றும் ரி20 தொடர்கள் கைவிடப்பட்டன. நியூசிலாந்து அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடுவதற்கு முகாமிட்டிருந்தது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆட்டம் தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் தொடரைக் கைவிட்டு தாயகம் திரும்பியது நியூசிலாந்து அணி. பாதுகாப்புக் காரணங்களுக்காகவே தொடர் கைவிடப்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஐ.சி.சி. அமைப்பிடம் முறையிட்டது பாக்.

இஸ்லாமபாத், செப். 19

நியூசிலாந்து கிரிக்கெட் சபைக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட் சபையிடம் முறையிட்டது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை. நியூசிலாந்து அணியின் முடிவு சிறுபிள்ளைத்தனமானது. வெறும் பாதுகாப்பு மிரட்டல் தொடர்பாக தொடரில் ஆடாமல் வெளியேறுவது எங்களுக்கும், ரசிகர்களுக்கும் ஏமாற்றமாக உள் ளது.

நியூசிலாந்து தன்னிச்சையாக இந்த முடிவை அறிவித்து உள்ளது. போட்டிகளின் போது பலத்த பாதுகாப்புக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்து இருந்தது. எங்கள் பிரதமர் இம்ரான்கானும் இது தொடர்பாக நியூசிலாந்து அரசுடன் பேசினார். நியூசிலாந்து அணிக்கு பாதுகாப்பில் எந்த குறைபாடும் இல்லை என விளக்கி னோம் என்று ஐ.சி.சியிடம் பாகிஸ்தானின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (ம)

## நியூசிலாந்துக்கு அக்தர் கண்டனம்

இஸ்லாமபாத், செப். 19

பாகிஸ்தானின் கிரிக்கெட்டை நியூசிலாந்து கொன்றுள்ளது என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் அக்தர் தெரிவித்தார். நியூசிலாந்து அணி பாதுகாப்புக் காரணங்களுக்காக பாகிஸ்தானுடனான தொடரைக் கைவிட்டுள்ளது. இது சர்வதேச அரங்கில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார் அக்தர். (ம)

**Personal English Classes**
**யாழ் நகரில் தனி வகுப்புகள்**
**Spoken: பேச வைத்தல்**
Grammar Grade 7 - G.C.E O/L, A/L,
(English Medium உட்பட)
**பட்டதாரிகள், தொழில் புரிவோர்.**
**K.Ganesh B.A - 0777668725**

**வீடு வாடகைக்கு**
4ஆம் குறுக்குத் தெருவில் O.L.R தேவாலயத்துக்கும் பிரபல பாடசாலைக்கும் அருகில் மேலே 4 அறைகள் கீழே 4 அறைகளுடன் இணைந்த குளியலறை வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
**077 753 1440 / 077 481 1578**

**காணி விற்பனைக்குண்டு**
யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்தியில் இருந்து காரைநகர் செல்லும் வீதியில் இரு வழிப்பாதையுடன் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
(யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 2 K.M தூரம்)
தொடர்புகொள்ளும் நேரம் காலை 9.00 - மாலை 6.00 மணிவரை)
**076 221 2037, 077 288 0152**
**077 064 2661, 076 734 1023**

**காணி விற்பனைக்குண்டு**
தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் (டச்சு றோட்) பகுதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நில.பர 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப்பாதையுடன்.
நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நில.பர 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரம்.
பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை. தரகர் தேவையில்லை.
**077 814 7389, 077 614 7333**

**வேலையாட்கள் தேவை**
யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு சமையாலாளர் (Chef) தேவை.
தொடர்புகளுக்கு
**077 668 1840**

**வேலையாட்கள் தேவை**
**U.S Hotel** நிறுவனத்திற்கு காசாளர் (Cashier) தேவை.
முழு நேரம் (Full Time)
பகுதி நேரம் (Part Time)
யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
விண்ணப்பிப்பவர்கள் இன்று (19.09.2021) ஞாயிற்றுக் கிழமை நேரில் சமுகமளிக்கவும்.
**தொடர்புகளுக்கு: 077 0083 000**

# மரண அறிவித்தல்

மண்ணில் 26 . 07 . 1953



விண்ணில் 17 . 09 . 2021

## திருமதி சிவமணி சின்னத்துரை

கைதடி மத்தி குமரநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை-சிவமணி கடந்த (17.09.2021) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் இறைபதம் அடைந்துவிட்டார்

அன்னார் சின்னத்துரை (இரத்தினசிங்கம், முன்னாள் கைதடி பலநோக்கு கூட்டுறவு சங்க பணியாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சேதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், தயாளினி (உடுவில்), தயாநிதி (இலண்டன்), சாந்தமூர்த்தி, பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), கமலன், தனுசியா (பிரான்ஸ்), பிரியதர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலச்சந்திரன் (உடுவில்), பரமேஸ்வரன் (இலண்டன்), கிருத்திகா (சுவிஸ்), மதிநதியன் (பிரான்ஸ்), அரவிந்தன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தர்மிலா, தர்சிகா, பிரகாஸ், ஜெசிக்கா, நிதுசா, பவிசா, ஆகிஷ், ரோகித், மகிசா, மகிழினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சிவகுரு, சிவநாதன், சிவதாசன் மற்றும் காலஞ்சென்ற சிவயோகன், சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்லம்மா, பரமேஸ்வரி, ஜெகதீஸ்வரி, சீதேவி, சறோஜினிதேவி, நவமணி, சின்னத்தம்பி மற்றும் காலஞ்சென்றவர்களான சண்முகம், மார்க்கண்டு, சின்னையா, வீரகத்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (17.09.2021) வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கைதடி ஊத்தல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கைதடி மத்தி, குமரநகர், கைதடி.**

**தகவல்: குடும்பத்தனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19. 09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மலை : 33
வள்ளுவர் ஆண்டு : 2052
புரட்டாதி 03
ஞாயிற்றுக்கிழமை (19.09.2021)
சிகரம் : 65

Registered as a Newspaper


பக்கங்கள்: 16

சஞ்சீவி

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

**பாரெல்லாம் பொல்லாக் கொரோனாவால் பரிதவிக்க
பாரம் தாங்காமல் சரிந்து போன பொருளாதாரத்தை
'பார்' திறந்து பியர் ஆறு பெருகச் செய்திங்கே
பார் ! இதோ நிமிர்த்துகிறேதே நம் ஆச்சரிய அரசு!**

*- ஒட்டுக்குழுச் சுவாமிகள்*




# தட்டுப்பாடா?

நிலாந்தன்

நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்தாகி விட்டதா ?" என்று இந்திய ஊடக நண்பர் ஒருவர் கேட்டார். நாட்டின் பொருளாதாரம் சரிந்துவிட்டது என்பது உண்மை. அமெரிக்க டொலரைக் காணமுடியவில்லை. ஆனால் நாங்கள் இன்னமும் பாணைச் சீனியில் தொட்டு சாப்பிடும் ஒருநிலைக்கு வரவில்லை என்று அவரிடம் சொன்னேன். ஆனால் இன்னும் சில மாதங்களில் நிலைமை மேலும் மோசமடையலாம் என்று பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள். இந்திய யூடியூப்பர்களும் சில இணைய ஊடகங்களும் இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடியைக் குறித்து அதிகமாக செய்திகளை வெளியிடுகின்றனர். இந்தச்செய்திகள் உள்நோக்கத்தோடு மிகைப்படுத்தப்பட்டவை என்று இலங்கைத்தீவில் ஒரு தரப்பினர் கூறுகிறார்கள். ஆனால் கடந்தவாரம் அரசாங்கம் 623 பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சில நிபந்தனைகள் விதித்திருக்கிறது. அப்பொருட்களுக்குள் உள்ளாடைகளும் அடங்கும். அதன்படி பொருட்களை இறக்குமதி செய்ய விரும்பும் வணிகர்கள் கொள்வனவு விலைக்கு நிகரான தொகையை வங்கியில் வைப்பிலிட வேண்டும் என்று அரசாங்கம் கூறுகிறது.
ஏனெனில் அரசாங்கத்தின் இறக்குமதி சக்தி குறைந்துவிட்டது என்றும், அதற்கு காரணம் வெளிநாட்டு செலாவணி ஒதுக்கீடு குறைந்தமை தான் என்றும் பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

நாட்டின் பொருளாதாரம் நெருக்கடியில் சிக்கியது இப்பொழுதுதான் என்பதல்ல. வைரஸ் தொற்றுக்கு முன்னரே நாட்டின் சுற்றுலாத்துறை மோசமாகமாக பாதிக்கப்பட்டிருந்தது. ஈஸ்டர் குண்டுவெடிப்பையடுத்து நாடு உல்லாசப் பயணிகளை கவரும் தன்மையை பெருமளவுக்கு இழந்துவிட்டது. வைரஸ் வந்து நிலைமையை மேலும் மோசமாக்கியிருக்கிறது. நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணியை ஈட்டித்தரும் துறைகளான ஆடைஉற்பத்தித்துறை, சுற்றுலாத்துறை, புலம்பெயர்ந்து உழைக்கும் இலங்கையர்களின் உழைப்பு மற்றும் ஏனைய ஏற்றுமதித்துறைகள் போன்றவற்றில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டின் வெளிநாட்டு செலாவணி ஒதுக்கீடு குறைந்துவிட்டது. அதனால் அரசாங்கம் பல பொருட்களின் இறக்குமதியை நிறுத்தியது என்று பொருளியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். வசதி படைத்தவர்கள் ஓடும் வாகனங்கள் முதற்கொண்டு கீழ்மத்திய தர வர்க்கத்தினரின் மோட்டார் சைக்கிள்கள் உள்ளடங்கலாக வாகன இறக்குமதி நிறுத்தப்பட்டு விட்டது. அதைப்போலவே மஞ்சள், உரம் உட்பட பல்வேறு பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த வாரம் 623 பொருட்களின் இறக்குமதிக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகள் மறைமுகமாக இறக்குமதியை கட்டுப்படுத்துகின்றன. குறிப்பாக அது சிறிய நடுத்தர ஏற்றுமதியாளர்களை அதிகம் பாதிக்கக்கூடியது. அதற்கு கிட்டத்தட்ட ஒருவாரத்துக்கு முன்பு அரசாங்கம் அவசரகாலசட்ட விதிகளின் படி அத்தியாவசிய உணவுப்பொருட்களை நிர்வகிப்பதற்கு ஒரு மேஜர் ஜெனரலை பொறுப்பாக நியமித்தது. அத்தியாவசியப் பொருட்களை அவசரகாலச் சட்டத்தின் கீழ் நிர்வகிக்க வேண்டிய ஒரு நிலைமை தோன்றியபோதே இலங்கைத்தீவு பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது என்று வெளிநாட்டு ஊடகங்கள் கருதும் ஒரு நிலைமை தோன்றியது.

இவ்வாறு அத்தியாவசிய உணவுப் பொருட்களை அவசரகால சட்டவிதிகளின் கீழ் கொண்டு வந்த பின்னர் பொலிஸார் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள பெரிய மற்றும் சிறிய பண்டகசாலைகளின் மீது திடீரென்று பாய்ந்தனர். இதன்போது பதுக்கிவைக்கப்பட்டிருந்த அரிசி, மா, சீனி போன்ற பல பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலம் அத்தியாவசியப் பொருட்களை பதுக்குவோர் மீது அரசாங்கம் சட்டநடவடிக்கை எடுக்கும் என்ற ஒரு உணர்வு நாடுமுழுதும் உருவாக்கப்பட்டது. எனினும் உள்ளூர்க் கடைகளிலும் பல்பொருள் அங்காடிகளிலும் சீனிக்கும் மாமாவுக்கும் பால் மாவுக்கும் இப்போதும் தட்டுப்பாடு உண்டு. பெரும்பாலான பல்பொருள் அங்காடிகளில் சீனி, பால்மா இருக்கும் இடங்கள் காலியாக இருக்கின்றன. பெரும்பாலான பல்பொருள் அங்காடிகளில் விலை பொறிக்கப்பட்ட சீனிப் பொதிகளை காணமுடியவில்லை. மிகச் சில பல்பொருள் அங்காடிகளில் சீனி சொரியலாக விற்கப்படுகிறது.

பால்மா பைக்கற்றுகளை குறிப்பிட்ட தொகைக்கு மேல் பொருட்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு சில பல்பொருள் அங்காடிகள் ரகசியமாக கொடுக்கின்றன. அந்தப் பெட்டிகளை ஒரு பேப்பர்பைக்குள் வைத்து ரகசியமாக கொடுக்கும் அளவுக்குத்தான் நாட்டில் பால்மா கிடைக்கிறது. அதாவது அத்தியாவசிய பொருட்களுக்கு ஆணையாளராக ஒரு மேஜர் ஜெனரலை நியமித்த பின்னரும் பொருட்களின் விலை இறங்கவில்லை என்று பொருள்.
அண்மையில் இது தொடர்பில் ஊடகங்களுக்கு பதில் கூறிய அஜித் கப்ரால் வணிகர்கள் பொருட்களை பதுக்கியபடியால் தான் செயற்கையாக தட்டுப்பாடு ஏற்பட்டது என்றும் பொருட்களின் விலை அதிகரித்தது என்றும் விளக்கம் கூறுகிறார். இவர் ராஜாங்க அமைச்சராக இருந்து இப்பொழுது மதிய வங்கியின் ஆளுநராக பதவியேற்றுள்ளார். ஆனால் வணிகர்கள் ஏன் பொருட்களை பதுக்குகிறார்கள்? ஏனென்றால் பொருட்களின் இறக்குமதிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் எதிர்காலத்தில் பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் அதிக லாபத்தை பெறும் நோக்கத்தோடு தான். இவ்வாறு பதுக்கப்பட்ட பொருட்களை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளும் காவல்துறையும் திடீர் பாய்ச்சல்களின் மூலம் கைப்பற்றுகின்றனர். கைப்பற்றப்பட்ட பொருட்கள் அரசாங்கத்தால் சதொச மூலம் விநி

07 »

> **எல்லாவிதமான வளங்களையும் கொண்டிருந்த அழகிய சிறிய தீவை பல்வினத்தன்மையிக்க ஒரு நாடாகக் கட்டியெழுப்ப சிங்களத் தலைவர்களால் முடியவில்லை. அதன் விளைவாக பொருளாதாரம் சீரழியத் தொடங்கியது. யுத்தம் இலங்கைத் தீவின் முதலீட்டு கவர்ச்சியை இல்லாமல் செய்துவிட்டது. அப்படிப் பார்த்தால் 2009ஆம் ஆண்டுக்குப் பின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தியிருக்க வேண்டும். ஆனாலும் முடியவில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
19 செப்ரெம்பர் 2021



அ.நிக்ஸன்

# அக்கியூஸ் ஒப்பந்தமும் புதுடில்லியும்:
# இலங்கையைக் கையாள தவறியதன் விளைவா?

இந்தோ - பசுபிக் மற்றும் தென் சீனக் கடல் விவகாரங்களை மையமாகக் கொண்டு அமெரிக்காவும் இங்கிலாந்தும் முதல் முறையாக அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கும் தொழில்நுட்பத்தை அவுஸ்திரேலியாவுக்கு வழங்குவதற்கான புதிய ஒப்பந்தம் ஒன்றில் கடந்த புதன்கிழமை இரவு கைச்சாத்திட்டுள்ளன.

மூன்று நாடுகளும் இணைந்து கைச்சாத்திட்ட அக்கியூஸ் என்ற இந்த ஒப்பந்தம் சர்ச்சைக்குரிய தென் சீனக் கடலில் சீனாவின் செல்வாக்கை எதிர்கொள்ளும் முயற்சியென பி.பி.சி செய்திச்சேவை கூறுகின்றது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜான்சன் மற்றும் அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் ஆகியோரின் கூட்டு மெய்நிகர் செய்தியாளர் சந்திப்பில் இந்த ஒப்பந்தத்தைப் பகிரங்கப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்த ஒப்பந்தம் பற்றிய பேச்சுக்களில் இந்தியாவுக்கு அழைப்பு இல்லை.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மூன்று நாடுகளுக்கு இடையேயான மிக முக்கியமான பாதுகாப்பு ஏற்பாடாக அக்கியூஸ் பாதுகாப்புக் கூட்டமைப்பு உள்ளதாக அமெரிக்காவின் பொக்ஸ் தொலைக்காட்சி வர்ணித்துள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி இந்தியா தலைமையிலான குவாட் (The Spirit of QUAD) அமைப்பின் மாநாடு நியூயோர்க்கில் ஆரம்பமாகவுள்ள நிலையில் புதன்கிழமை இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளும் அங்கம் வகிக்கும் குவாட் அமைப்பை, இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சீனாவை எதிர்க்கவுள்ள ஆசிய நேட்டோ இராணுவ அணி என்று வர்ணிக்கப்பட்டு வரும் சூழலில், இந்தப் பிராந்தியப் பாதுகாப்புக்கான அக்கியூஸ் ஒப்பந்தம் இந்தியாவுக்குக் கவலையளித்திருக்கலாம்.

ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படைகள் வெளியேறியுள்ளதால் தலிபான்களைப் பயன்படுத்தி பாகிஸ்தான், இந்தியாவில் தாக்குதல்களை நடத்துமென அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், மேற்படி மூன்று நாடுகளும் இணைந்து மேற்கொண்ட ஒப்பந்தம் இந்தியாவைத் தனிமைப்படுத்துமோ என்ற அச்சத்தை டில்லிக்கு உருவாகலாம். தலிபான்களுக்கும், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ உளவு அமைப்புக்கும் இடையே நெருக்கம் அதிகரித்துள்ள நிலையில், இந்தியாவில் இருந்து வான்வழி தாக்குதல்களை நடத்தும் வாய்ப்புகளை அமெரிக்கா, இந்தியாவுடன் ஆராய்ந்து வருகின்றது. இந்த நிலையில், அக்கியூஸ் ஒப்பந்தத்தின் பின்னர்தான்






ஆப்கானிஸ்தானில் இருந்து ஏன் நேட்டோ படைகள் விலகியது என்பது குறித்து இந்தியா சிந்திக்க ஆரம்பிக்கலாம்.

புவிசார் பூகோள அரசியல் நிலைமைகளைத் தூரநோக்கில் சிந்தித்துச் செயற்படுத்தும் ஆற்றல் அமெரிக்காவுக்கு உண்டு என்ற அடிப்படையிலேயே இந்தோ பசுபிக், தென் சீனக் கடல் பாதுகாப்பு விவகாரங்களில் இந்தியாவை, அமெரிக்கா ஈடுபடுத்தியிருக்கிறது. இதனாலேயே குவாட் அமைப்பை 2017 ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் செயற்படுத்தியிருந்தார். இந்த நிலையில் அக்கியூஸ் ஒப்பந்தம் எந்த வகையில் குவாட்டோடு ஒத்துழைத்துச் செயற்படும் என்ற கேள்விகள் எழலாம். 2016 ஆம் ஆண்டில் இருந்து 2020 ஆம் ஆண்டு வரை அமெரிக்கா இந்தியாவோடு செய்து கொண்ட மூன்று ஒப்பந்தங்களும் மேற்படி பிராந்திய ஆதிக்கத்தை மையமாகக் கொண்டவைதான். ஆப்கானிஸ்தான் விவகாரத்துக்குப் பின்னரான சூழலில் அந்த ஒப்பந்தங்களை அமெரிக்கா வேகமாகச் செயற்படுத்துகின்றது. குறிப்பாக 2016 ஆம் ஆண்டு லெமோ எனப்படும் மூலோபாயப் பரிமாற்ற ஒப்பந்தம் (Logistics Exchange Memorandum of Agreement LEMOA) ஒன்றை அமெரிக்கா, இந்தியாவுடன் கையெழுத்திட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா அமெரிக்காவின் மற்றுமொரு இராணுவத் தளமாக மாறுமென்ற அச்சத்தை இந்தியாவின் சில பிரதான நாளேடுகள் அப்போது வெளியிட்டிருந்தன. ஆனால் அப்படியில்லையென மோடி அரசாங்கம் உடனடியாக மறுத்துமிருந்தது. இதனால் இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து கொம்காசா எனப்படும் தொடர்பு இணக்கத் தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தத்தை (Communications Compatibility and Security Agreement COMCASA) அமெரிக்காவும் இந்தியாவும் 2018 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டன. இந்த ஒப்பந்தம் ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற இராணுவத்தால் பயன்படுத்தப்படும் அனைத்து அமெரிக்க தயாரிப்புகளுடன் பாதுகாப்பாகத் தொடர்பு கொள்ளும் திறனை அதிகரிக்கிறது. 2020 ஆம் ஆண்டு பீகா எனப்படும் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் (Basic Exchange and Cooperation Agreement BECA) அமெரிக்கப் பாதுகாப்புத் துறை மற்றும் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சின் தேசிய புவிசார்புலனாய்வு முகாமைக்கு இடையிலான ஒப்பந்தமாகும். ஆகவே இந்த மூன்று ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே ஆப்கானிஸ்தான் மற்றும் அதன் பின்னரான பாகிஸ்தானை மையப்படுத்திய தலிபான்களின் செயற்பாடுகள் மற்றும் சீனாவைப் பிரதானப்படுத்தியுள்ள இந்தோ பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களை அமெரிக்கா இந்தியாவோடு இணைந்து முன்னெடுத்து வருகின்றமை பட்டவர்த்தனம்.

பீகா எனப்படும் ஒப்பந்தம் ,இந்திய ஏவுகணைகள் மற்றும் அத்தகைய தரவு தேவைப்படும் ஆயுதமேந்திய ட்ரோன்களின் துல்லியத்தை அதிகரிக்கவும் இடமளிப்பதால், இந்தியாவில் இந்தே ட்ரோன் தாக்குதல்களை தலிபான்கள் மற்றும் பாகிஸ்தான் மீது நடத்த அமெரிக்கா ஏற்பாடு செய்கிறது. இது தொடர்பாக அமெரிக்க - இந்தியப் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் சமீபத்தில் சந்தித்துப் பேசியுமிருக்கின்றனர். ஆகவேதான் இந்தியா, அமெரிக்காவின் இராணுவ வியூகத்துக்குள் சென்றுவிட்டதெனக் கருத இடமுண்டு. ஏனெனில் எந்த நேரத்திலும் இந்தியப் படைத்தளங்கள், இந்தியத் துறைமுகங்கள் என்பவற்றை அமெரிக்கா பயன்படுத்தக்கூடிய முறையிலான ஏற்பாடுகளுக்கு மோடி அரசாங்கம் வழிசமைத்துள்ளது. ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படைகளை விலக்குவதென டொனால்ட் ட்ரம்ப் 2015 ஆம் ஆண்டே முடிவு செய்ததன் பின்னணியில், மேற்படி மூன்று ஒப்பந்தங்களும் இந்தியாவுடன் செய்யப்பட்டிருக்கலாம் என்று யாரும் கருதினால், அதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஏனெனில் பூகோள அரசியல் ரீதியான இராணுவத் தீர்மானங்களை அமெரிக்கா ஒரு போதும் திடீரென மேற்கொள்வதில்லை.

ஆப்கானிஸ்தானில் இருந்து படைகளை விலக்கும் திட்டம் என்பது சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்குத் தொந்தரவு கொடுக்கும் நோக்கமாக இருந்தாலும் படைவிலகலின் பின்னரான பக்கவிளைவுகள் எப்படி அமையும் என்ற எதிர்வு கூறலையும் அமெரிக்கா 2015 ஆம் ஆண்டில் இருந்தே கணிப்பீடு செய்திருக்கும். அதன் பின்னணியில் இந்தியாவோடு 2020 ஆம் ஆண்டு செய்யப்பட்ட பீகா எனப்படும் மூன்றாவது ஒப்பந்தம் அமைந்திருக்கலாம். ஆகவே இதன் சாதக, பாதக விளைவுகளை இந்தியாவே தீர்மானிக்க வேண்டும்.

பாகிஸ்தான் மூலமாகத் தலிபான்கள் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமையலாமென முன்னாள் அமெரிக்கத் தூதுவர் நிக்கி கோலி விடுத்த எச்சரிக்கை, கூட புதுடில்லியை மேலும் அமெரிக்கப் பக்கம் சாய வைக்குத் தந்திரோபாயம் என்பதில் சந்தேகமேயில்லை. பாகிஸ்தான் ,தலிபான்களைப் பயன்படுத்தி இந்தியா மீது தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டால், அதனைத் தடுக்க அமெரிக்கா விசுவாசமாக இந்தியாவுக்கு ஒத்துழைக்கும் என்பதைவிட, இந்தோ பசுபிக் பாதுகாப்புக்கு இந்தியாவைத் தளமாக மாற்றும் முயற்சியிலேயே அமெரிக்கா ஈடுபடக்கூடிய வாய்ப்புகள் கூடுதலாக இருப்பதை மேற்படி ஒப்பந்தங்கள் காண்பிக்கின்றன. இதன் பின் புலத்திலேதான் அக்கியூஸ் ஒப்பந்தம் ஏன் கைச்சாத்திடப்பட்டது என்ற கேள்விகளும் டில்லிக்கு எழலாம்.

ஆனாலும் அமெரிக்கச் செயற்பாடுகள் இந்தியாவுக்குச் சில வேளை தற்காலிகப் பாதுகாப்பைக் கொடுக்கலாம். இருந்தாலும் அக்கியூஸ் ஒப்பந்தத்தின் பின்னரான நீண்டதூர நோக்கில் இந்தியாவுக்கு ஆரோக்கியமானதாக இருக்குமெனக் கூற முடியாது. அத்துடன் அமெரிக்க ஏற்பாட்டில் இந்தியாவைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் குவாட்டின் அங்கத்துவ நாடுகளான அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் தொடர்ந்து இந்தியாவுக்கு ஒத்துழைக்குமா என்பதும் சந்தேகமே. ஆகவே இந்தியா தனது சொந்த இராணுவ உத்தியை எவ்வாறு வளர்த்தெடுக்கப்போகிறது என்ற கேள்விகளே விஞ்சியுள்ளன.

குவாட் அமைப்புக்கு இந்தியா தலைமை தாங்கினாலும், இந்தியாவுக்கான முக்கியத்துவம் அங்கு குறைந்ததாகவே இருக்கலாமென இந்திய இராணுவத்துறை ஆய்வாளர்கள் சிலர் கருதுகின்றனர். ஏனெனில் சீனாவுக்கு இந்தியாவுடன் இருக்கும் மோதலைப் போன்று, அமெரிக்காவுக்கு இல்லை. இந்திய சீன எல்லைப் பிரச்சினை என்பது வேறு. ஆனால் இந்தோ பசுபிக் பிராந்திய ஆதிக்கமும் இராணுவ மேலதிக்கம் மாத்திரமே அமெரிக்காவுக்குத் தேவை என்பதை அக்கியூஸ் ஒப்பந்தம் காண்பிக்கின்றது.

ஆகவே சீனாவுடன் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் மோதலை அவதானிக்கும்போது, சீனா விடுக்கும் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் முயற்சியில் பாரம்பரிய நட்பு நாடான ரஷ்யாவை ஈடுபடுத்தினால், தனது பழைய அணிசேராக் கொள்கைக்கு இந்தியா மீண்டும் திரும்புமா என்ற கேள்வி எழும். (ரஷ்யா இன்றுவரை இந்தியாவுடன் தொடர்ந்து உறவைப் பேண விரும்புகின்றது)அப்படியில்லையேல் நட்பு நாடுகள் போன்று காண்பிக்கும் ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா, பிரான்ஸ், மற்றும் பங்குதாரர்களான பிரேசில், ஐக்கிய அரபு அமீரகம், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளைத் தனது இந்தோ-பசிபிக் பாதுகாப்புத் தந்திரோபாயத்துக்குள் கொண்டுவருவதன் ஊடாகப் பல்வேறு அணிகளில் சேருதல் என்ற உத்தியை இந்தியா பின்பற்றுமா என்ற கேள்விகளும் எழாமலில்லை. அல்லது சீனாவின் எதிரிகளுடன் நெருக்கமான உறவை வளர்த்துக்கொள்ள புதுடில்லி முயற்சிக்குமா அல்லது ஆப்கானிஸ்தான் விவகாரத்துக்குப் பின்னரான அமெரிக்க சீனப் பனிப்போரில், இந்தியா தனக்கெனத் தனியான சுயமரியாதைக் கட்டமைப்பு ஒன்றை வகுத்துக் கொள்ளுமா என்ற கேள்விகளும் உண்டு.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு



## கசந்த உறவு

கடித விவகாரம் இன்னும் தமிழ் அரசுக் கட்சிக்குள் ஓய்ந்தபாடாயில்லை. ஐ.நா.வுக்கு போட்டிக்கடிதம் எழுதி கையொப்பமிட்ட 9 பேருக்கும் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ப. சத்தியலிங்கம் , விளக்கம் கேட்டு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். வழக்கமாக பதிவுத்தபால் அல்லது மின்னஞ்சலிலேயே கட்சி சார்ந்த கடிதங்களை அனுப்புவது வழக்கம். ஆனால் அப்படி போட்டால், "எமக்கு கடிதம் வந்து சேரவில்லை" என்று உரியவர்கள் சொல்லக் கூடுமென்பதால், இம்முறை வைபர், வட்ஸப் மூலமும் அந்தக் கடிதங்கள் உரிய ஒன்பது பேருக்கும் அனுப்பப்பட்டதாம். ஏனென்றால் வைபர், வட்ஸப்பில் வந்துள்ள கடிதத்தைப் பார்வையிட்டால், அதனை அறியும் வசதி அந்தச் செயலிகளில் இருப்பதுதான் காரணம். எனவே கடிதத்தைப் பார்த்ததும் விளக்கத்தை உடனே அனுப்ப வேண்டும் என்பதற்காகத்தான் சுமந்திரனின் ஆலோசனையின் பேரில் சத்தியலிங்கம் இந்தக் கடிதத்தை அனுப்பியிருந்தார்.

ஆனால் வழக்கம் போலவே கட்சியின் தலைவர் என்ற பதவியில் இருப்பதாக 'நம்பப்படும்' மாவை சேனாதிராசாவுக்கு இந்த விளக்கம் கேட்ட விவகாரம் தெரியவே தெரியாதாம். கலையரசனுக்கு தேசியப்பட்டியல் எம்.பி பதவியைக் கொடுக்கும் போது கூட அதைப்பற்றி சொல்லாதவர்கள், இந்த விளக்க விவகாரத்தையா மாவையாருக்கு சொல்லப்போகிறார்கள்?


என்றாலும் இப்போது மாவையர் தரப்பு கொஞ்சம் சூடாகி விட்டது.

'அதெப்படி எங்களுக்குத் தெரியாமல் இப்படி விளக்கம் கேட்டு தன்னிச்சையாக கடிதம் போடமுடியும்?" என்று மாவையரும், சி.வி.கே சிவஞானமும் சம்பந்தப்பட்ட ஒன்பது பேருக்கும் தனிப்பட தொலைபேசியில் தங்கள் ஆற்றாமையை கொட்டித் தீர்த்திருக்கிறார்களாம். கூடவே " அந்தக் கடிதத்துக்கு எவரும் விளக்கம் அனுப்பத் தேவையில்லை" என்றும் மாவையர் தரப்பு அழுத்தமாகச் சொல்லியிருக்கிறதாம்.

இது ஒருபுறமிருக்க, இந்தப் போட்டிக் கடித விவகாரத்தால் சுமந்திரன்- சிறீதரன் அணிகள் எதிரும் புதிருமாக மாறிவிட்டன. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சிறீதரன், சுமந்திரனை ஆதரித்தார். 'அடுத்த அன்ரன் பாலசிங்கம் சுமந்திரனே' என்றெல்லாம் ஆராதித்தார். சிறீதரனின் ஆதரவு இல்லாவிட்டால் சுமந்திரன் அரும்பொட்டில் கூட எம்.பியாகி இருக்க முடியாது.

அதேவேளை சுமந்திரனை ஆதரித்ததால் சிறீதரனின் தனிப்பட்ட வாக்குவங்கியும் பலமாக வீழ்ச்சி கண்டிருந்தது. ஆக, சுமந்திரன்- சிறீதரன் கூட்டால் சிறீதரனுக்கு நஷ்டமே. சுமந்திரனுக்கே லாபம். இந்த நிலையில் சிலகாலமாக ஓரணியில் நின்ற சிறீதரன்- சுமந்திரன் ஆதரவாளர்கள் இப்போது பேஸ்புக்கில் மாறி, மாறி வசைபாடத் தொடங்கி விட்டார்கள். இதற்கு அவர்களின் 'தலைகளும்' ஆதரவே. இந்த சமூக வலைத்தளப் போரின் உச்சக் கட்டமாகவே சிறீதரனின் பேஸ்புக் கணக்கும் 'ஹக்' செய்யப்பட்டதாம். நாடாளுமன்றத் தேர்தலோடு சிறீதரன்- சுமந்திரன் உறவுநிலை பாலும் பழமுமாக மாறியிருந்ததால், கிளிநொச்சிக்கு செல்லும் போது சிறீதரனைச் சந்தித்து அளவளாவி, அவரோடு சேர்ந்தே மக்களையும், கட்சிக்காரர்களையும் சந்திப்பதையும் சுமந்திரன் வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால் அண்மையில் சாணக்கியன் எம்.பியோடு கிளிநொச்சிக்கு போன சுமந்திரன், சிறீதரனை எட்டியும் பார்க்கவில்லை. போதாக்குறைக்கு சிறீதரனோடு எதிர்நிலையில் இயங்கும் நபர்களைச் சந்தித்து , செல்பி எடுத்து அதனைப் பதிவிட்டு சிறீதரன் அணியை இன்னும் கடுப்பேற்றியிருக்கிறார் என்கின்றனர் விவரமறிந்தவர்கள்.





## களையெடுப்புக்கு தடை!

யாழ். மாவட்டத்தில் உள்ள சில பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் முறைகேடுகளில் ஈடுபடுதல், அதிகாரத் துஷ்பிரயோகம் , குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தாமை,பொதுமக்களின் முறைப்பாடுகளை உதாசீனம் செய்தல் போன்றவற்றில் ஈடுபடுவதால் அதுகுறித்து மக்கள், மேலதிகாரிகளுக்கு தொடர்ச்சியாக முறைப்பாடு செய்து வந்தனர்.

இப்போது புதிதாகப் பதவியேற்ற 'பெரியவர்' மற்றையவர்களைப் போல வாளாவிருக்காமல் காரியத்தில் இறங்கி, அப்படி கடமை தவறும் பொலிஸ் பொறுப்பதிகாரிகளை பந்தாடத் தொடங்கினார். அதன் முதற்கட்டமாகவே கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தரமிறக்கப்பட்ட நிலையில் கொழும்புக்கு மாற்றலாகி இருந்தார்.

இந்தப் பட்டியலில் இன்னும் சில பொறுப்பதிகாரிகள் உள்ளனர். இவர்களுக்கும் தண்டனை இடமாற்றம், பதவிக்குறைப்பு என்பன தயார் நிலையில் உள்ளது. ஆனால் இந்தக் களையெடுப்புக்கு, குறித்த முறைகேடான பொறுப்பதிகாரிகளால் நன்மைபெற்ற பணமுதலைகள், அரசியல்வாதிகள் என்போர் அரசாங்கத்தின் உயர்மட்டம் வரை அழுத்தம் கொடுப்பதால், அவர்களுக்கான தண்டனை இடமாற்றம் தள்ளிப் போகின்றதாம்.

**சாமி வரம் கொடுத்தும் பூசாரிகள் தடை போடுகிறார்களே.**




ஒருவர் ரொட்டிக் கடை வைத்திருந்தார்.

அவர் கடைக்கு வெண்ணெய் சப்ளை செய்பவர் மீது அவருக்கு வெகுவாக சந்தேகம்.

தன்னை அவர் ஏமாற்றுவதாக வருத்தம் இருந்தது. அரை கிலோ வெண்ணெய் என்று அவர் தருவது அரை கிலோவே இல்லை. எடை குறைவாக இருக்கிறது என்று குற்றம் சாட்டினார். சண்டை முற்றி ஒரு நாள் நீதிபதி முன் வழக்கு வந்தது. வெண்ணெய் வியாபாரி தன்னிடம் கொடுத்த வெண்ணெய் பொட்டலத்தை நீதிபதி முன் நிறுத்துக் காட்டிய ரொட்டிக் கடைக்காரர்,

"பாருங்கள் 450 கிராம் தான் இருக்கிறது. இப்படித்தான் என்னை பலமுறை ஏமாற்றி இருக்கிறார். இவரை தண்டியுங்கள்" என்று கூச்சலிட்டார்.

நீதிபதி வெண்ணெய் வியாபாரியை பார்த்து "என்ன சொல்கிறீர்கள். ஒவ்வொரு முறையும் 50 கிராம் குறைவாகத் தரலாமா? அது குற்றமில்லையா?" என்று கேட்டார்.

"ஐயா.. என்னிடம் எடைக்கல் கிடையாது. அதனால் 500 கிராம் எடையுள்ள பொருள் ஏதேனும் ஒன்றை எடைக் கல்லுக்குப்பதிலாக பயன்படுத்துவது வழக்கம். பெரும்பாலும் இவரது கடை ரொட்டியைத் தான் வாங்குகிறேன். அதையே அவ்வாறு பயன்படுத்துவேன்.

பாக்கெட் மீது எடை 500கிராம் என்று எழுதப்பட்டிருப்பதை நம்பி இவரது ரொட்டியை எடைக் கல்லுக்குப் பதிலாக தராசில் பயன்படுத்துவேன். இப்போது பாருங்கள் என் வெண்ணெயும் அவரது ரொட்டியும் சம எடையாக இருக்கும்." என்று தராசில் இரண்டையும் எதிர் எதிராக வைத்தார். சமமாக இருந்தது.

**நீதி: எல்லோரும் பிறர் தன்னை ஏமாற்றக் கூடாது என்று நினைக்கிறார்களே ஒழிய தானும் பிறரை ஏமாற்றக்கூடாது என்று ஏன் நினைப்பதில்லை.**




## பொது அறிவு

1. காந்தத் தன்மையற்ற பொருள்
   கண்ணாடி
2. நீரில் கரையாத வாயு எது?
   நைட்ரஜன்
3. வெப்பத்தைக் கடத்தாப் பொருள்
   மரம்
4. திரவ நிலையிலுள்ள உலோகம்
   பாதரசம்
5. நிலவு இல்லாத கோள்
   வெள்ளி
6. புற ஊதாக் கதிர்களை உறிஞ்சுவது
   ஓசோன்
7. வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவது
   ஹார்மோன்கள்
8. யானையின் கருவுறு காலம்
   17 20 மாதங்கள்
9. மனித ஆண்களின் மூளையின் எடை
   சுமார் 1400 கிராம்
10. பென்குயின்கள் காணப்படும் வாழிடம்
    துருவப் பிரதேசம்
11. சக்தி தரும் உணவுச் சத்து
    கார்போஹைட்ரேட்
12. மனித உடலில் மிகவும் கனமான
    உறுப்பு தோல்

## பிஞ்சு தூரிகைகள்



U. ஆராதனா,
தரம்-03
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.




P. சஞ்ஜெய்,
தரம்-02
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெனீவா, ஜெனீவா, ஜெனீவா!

ந.பரமேஸ்வரன்

**2009** மே 18க்கு பின்னர் இந்த ஜெனீவா என்ற சொல் இலங்கைத் தமிழர்களால் அடிக்கடி உச்சரிக்கப்பட்டு வருகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் ஈழம் என்ற செப்படி வித்தை தவிடு பொடியாகிய பின்னர் , வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழர்கள் பிரபாகரன் தமிழீழம் பெற்றுத்தருவார் என்று அவர் பின்னால் திரண்டனர். ஆனால் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலோடு அந்த நம்பிக்கையும் பொய்த்துப் போனது. அதன் பின்னர் இப்போது தமிழர்களின் ஒற்றை நம்பிக்கை, ஜெனீவா மாத்திரமே. ஆண்டுதோறும் ஸ்ரீலங்காவிலிருந்தும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் பலர் ஜெனீவா நோக்கி படையெடுக்கின்றனர். தமிழ்த் தேசிய அரசியல் வாதிகள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும், சுயநலம் என்ற சொல்லுக்கு உதாரணமாக காட்டக்கூடிய போலித் தமிழ்த் தேசியவாதிகளும் ஆண்டுதோறும் ஜெனீவாவுக்கு கடிதங்களை அனுப்புகின்றனர் . இந்தக் கடிதங்களை அனுப்புவதில் ஆளாளுக்கு முரண்பட்டு தமிழ்த்தேசியத்தின் பெயரால் சண்டையும் பிடிக்கின்றனர். தாங்கள்தான் தமிழ் ஈழம் பெற்றுத் தரப்போகிறோம் என்ற மாதிரி 'சீன்'வேறு போடுகின்றனர். தமிழ் ஊடக ஜாம்பவான்கள் என்று தம்மைத் தாமே கூறிக்கொள்வோரும் இவர்களது ஏமாற்று வித்தைக்கு தாளம் போடுகின்றனர்

"அவர் தயாரித்த அறிக்கை பிழை ,இவர் தயாரித்த நகல் தவறானது, அவர் தமிழ்த் தேசிய நீக்கம் செய்கிறார், இவர் துரோகி "என்றெல்லாம் மாறிமாறி வசைபாடுகின்றனர். ஊடகவியலாளர் மாநாடுகளை நடத்துகின்றனர். செய்திப் பஞ்சத்தில் சிக்கியுள்ள தமிழ் ஊடகங்களும் இவர்களது அறிக்கைகளை வைத்து பக்கங்களை நிரப்புகின்றன. தமிழ் ஊடகங்களில் பிரசுரமாகும் செய்திகளில் 60% இற்கு மேற்பட்டவை ஜெனீவா பற்றிய செய்திகளாகவே காணப்படுகின்றன. ஜெனீவா எங்கே இருக்கிறது? ஜெனீவாவில் என்ன நடக்கிறது ?என்பது பற்றி எதுவுமே தெரியாத பலர் " ஜெனீவா, ஜெனீவா" என்று ஜெனீவா என்ற சொல்லை அடிக்கடி உபயோகித்து வருகின்றனர்.

ஏதோ சர்வதேச நாடுகள் அனைத்தும் ஜெனீவாவில் ஒன்றுகூடி தமிழ் ஈழத்தை பிரகடனம் செய்யப்போகின்றன என்ற மாயவிம்பம் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளாலும் தமிழ் ஊடகங்களாலும் உருவாக்கப்பட்டுள்ளது. தங்களைத் தாங்களே யூதர்களுடன் ஒப்பிட்டு உலகிலேயே தாங்கள்தான் அறிவாளிகள் ,மற்றவர்களெல்லாம் முட்டாள்கள் என மார்தட்டிக்கொள்ளும் ஈழத்தமிழர்கள் மத்தியில் அறிவு என்பது அறவே இல்லை. 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை புலிகளிடமிருந்து இராணுவம் கைப்பற்றியவுடன், யாழ். மாவட்டத்துக்கு பொறுப்பாக இருந்த இராணுவத் தளபதி'ஐலண்ட்' பத்திரிகைக்கு ஒரு செவ்வி வழங்கி இருந்தார். அந்த செவ்வியில் "யாழ்ப்பாண மக்கள் படித்திருக்கிறார்கள்; சான்றிதழ்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் அறிவு குறைவாகவே காணப்படுகிறது" எனக் கூறி இருந்தார். யாழ்ப்பாண பாஷையில் சொல்லப்போனால் "யாழ்ப்பாணத்தவர்கள் மட்டைகளை வைத்திருக்கிறார்கள் ஆனால் அவர்களின் மண்டைக்குள் ஒன்றுமில்லை "என்று சொல்லியிருந்தார்.

முள்ளிவாய்க்காலில் கொத்துக் குண்டு வீசப்பட்டு கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்பட்ட போது, திரும்பியும் பார்க்காத ஐ. நா.வும் சர்வதேசமும் ஈழத்தமிழர்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தரும் நீதியைப் பெற்றுத்தரும் என எதிர்பார்ப்பதைப் போல் முட்டாள்தனம் வேறு எதுவும் இருக்கமுடியாது.

ஈழத்தமிழர்கள் முதலில் சர்வதேச அரசியலை புரிந்து கொள்ளவேண்டும். ஐ.நாவாக இருக்கட்டும் அல்லது வேறெந்த உயரிய சபையாக இருக்கட்டும் . எல்லாமே ஒரு நிகழ்ச்சிநிரலின் கீழேயே இயங்கி வருகின்றன என்பதை ஈழத்தமிழர்கள் புரிந்து கொள்ளவேண்டும். இதைப் புரிந்து கொள்வதற்கு ஒக்ஸ்போர்ட்டிலோ ,கேம்பிரிட்ஜிலோ போய் அரசியல் விஞ்ஞானம் படிக்கத் தேவை இல்லை . உலகில் நடைபெறும் நடைபெற்றுவரும் விடயங்களை ஒழுங்காக அவதானித்து வந்தாலே போதும்.

புலிகளை அழிப்பதற்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கிய சர்வதேசம் தலிபான்களுடன் மென்போக்கை கடைப்பிடிக்கிறது. புலிகளை அழிப்பதற்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கிய எதிரும் புதிருமான நாடுகளான இந்தியா பாகிஸ்தான்,அமெரிக்கா, சீனா என்பன தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றன. புலிகள் அழிக்கப்பட்டமைக்கு உலகில் வேறெந்தப் போராளிகளிடமும் இல்லாதவாறு மரபுரீதியான இராணுவக் கட்டமைப்பையும் முப்படைகளையும் அவர்கள் கொண்டிருந்தமையே காரணம். புலிகளின் அசுர வளர்ச்சி சர்வதேசத்தின் கண்களை உறுத்தியது; புலிகளை அழிக்கவேண்டுமென சர்வதேசம் தீர்மானித்தது. புலிகளை அழித்தது போல் தலிபான்களை அழிக்கமுடியவில்லை. தலிபான்களை அழிக்க முடியாமல் போனமைக்கு ஆப்கனிஸ்தானை சுற்றி இஸ்லாமிய நாடுகள் காணப்படுவதும் அவை தலிபான்களுக்கு அடைக்கலமும் ஆதரவும் வழங்கி வருவதும் அடிப்படைக் காரணம். புலிகளை அழிப்பதில் ஒற்றுமையாக செயற்பட்ட போட்டி நாடுகளான இந்தியா பாகிஸ்தான், அமெரிக்கா, சீனா, ரஷ்யா என்பன உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றன. அதுதான் அவர்களின் தந்திரம். இந்த அரசியலை எம்மவர்கள் புரிந்து கொண்டால் சரி.

தப்பித் தவறிக்கூட, சர்வதேச நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஐ.நாவில் தமிழ் ஈழத்தை பிரகடனம் செய்தாலும் ஐ.நாவில் வீட்டோ அதிகாரத்துடன் சீனா அமர்ந்திருக்கிறது என்பதையும், சீனா தனது செல்லப்பிள்ளையாக ஸ்ரீலங்காவுக்கு மடியில் வைத்து பாலூட்டி வருகிறது என்பதையும் எம்மவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



# உணர்புதினம்

ஓ! ஓ! வந்தவன்! வந்தவன்!" எண்டு சிவா வலு உசாராய்ச் சொன்னான்.

"எங்கை ?ஆளைக் கூட்டிக்கொண்டா" எண்டு தமையன்காரன் சிவாட்டச் சொல்ல, இண்டைக்கு நல்லபுதினம் பாக்கலாம் எண்டு எனக்கு வலு புளுகாயிருந்திச்சுது. சிவா ஒரு புதுச் சண்டியன் மாதிரி நடந்து நேசறிக்குள்ள வந்து அப்பனைத் தேடினான். அவனைக் காணேல்ல. மாயமாக மறைஞ்சிட்டான். இந்த விளையாட்டு கொஞ்ச நாள் தொடர்ந்து நடந்திச்சுது . பிறகு சிவான்ர தமையனும் அப்பனை மறந்திட்டார். இதால ஒரு நன்மை என்னெண்டா அப்பன் இதோட நல்ல திருத்தம் .

ஒருத்தரோடயும் சண்டித்தனத்துக்குப் போறேல்ல .நேசறிக்கு வாறதும் தெரியாது,போறதும் தெரியாது . எனக்கிப்பதான் மன நிம்மதி. இல்லாட்டில் அப்பன்ர தொல்லையத் தாங்கேலுமே? பென்சிலைப் பறிச்சுக் கூரை முறிச்சிட்டுத்தருவான். " ரீச்சரிட்டச் சொல்லட்டோ?" எண்டு கேட்டால் " சொல்லடா பாப்பம் சொல்லு. ஆனால் ஒழுங்காய் வீட்டைபோய்ச் சேர மாட்டாய் எண்டதை ஞாபகத்தில் வைச்சிரு "எண்டு நுள்ளுவான். நுள்ளுறதுக்கெண்டே நீளமாய் நிகம் வளர்த்து வைச்சிருப்பான். போதாக்குறைக்கு அதில சிவப்புக் கியூடெக்சும் அடிச்சிருப்பான். மற்றது இறேசர் கேப்பான். கேட்டோன்ன குடுத்திடோணும் கொஞ்சம் பிந்தினால் தலை

## புதினம் - 6




யில அடிப்பான். இல்லாட்டி இறேசரை இரண்டாய் முறிப்பான். முறிக்கேலாட்டில் வெளியில எறிவான். அவனுக்குப் பக்கத்தில இருந்தாத்தானே பிரச்சினை எண்டுட்டு விலகி வேறயிடத்தில இருந்தாலும் அதுக்குள்ள வந்து புகுந்திடுவான். இதையெல்லாம் அம்மாவிட்டச் சொன்னால் , "பேபியக்காட்ட சொல்லு . அவ பாத்துக் கொள்ளுவா" எண்டு அவசொல்லுவ. இப்ப ஒருத்தரிட்டயும் சொல்லத்தேவையில்லை. எல்லாம் தன்ர பாட்டில் அடங்கிட்டுது.

இப்படியே காலம் கடக்கேக்குள்ள நேசறியின்ர கலைவிழா வந்திச்சுது. பாட்டு, நடிப்பு ,தனி நடனம், குழு நடனம் பேச்சு எண்டு கனக்க நிகழ்ச்சியளுக்கு பேபியக்கா எங்களத் தெரிவு செய்யத்தொடங்கினா. ஒரு பிள்ளை கட்டாயம் இரண்டு நிகழ்ச்சியில பங்குபற்றோணும் எண்ட றூல்ஸ் வேறை. இதில் எனக்குக் குழு நடனமும் ,நடிப்பும் வந்திச்சுது. குழுநடனம்தான் பரவாயில்ல, கும்பல்ல கோவிந்தா எண்டு செய்திட்டுப் போகலாம். ஆனா நடிப்பு? அதுகும் நான் பார்மர்(கமக்காரன்) வேசத்தில நடிக்கோணுமாம். அதுகும் வசனம் பேசி நடிக்கோணுமாம். தமிழில எண்டாலும் பரவாயில்ல. இங்கிலீசில வசனம் பேசி நடிக்கோணுமாம். எப்பிடிக் கதை? அதுகும் மற்றப் பிள்ளையளுக்கெல்லாம் நேவி, ரீச்சர், நேர்ஸ் , றைவர் , பைலற் எண்டு நல்ல வேசங்களைக் குடுத்திட்டு (அதுகும் சிவாவுக்கு டொக்ரர் வேசம்) எனக்கு மட்டுந்தான் பார்மர் வேசம் தந்திருக்கெண்டு எனக்குச் சரியான கவலை . அழுகையும் வந்திட்டுது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண வரலாறு


## 1505–1948 வரை

ந.பரமேஸ்வரன்

சுங்கவரி அறவீடு சிலவேளை பகிரங்க ஏலத்திலும் விடப்பட்டது. நெசவாளர்களிடமிருந்து துணிகளை அல்லது உடைகளை நேரடியாகக் கொள்வனவு செய்வதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப் படவில்லை .பெரிய கடையில் வைத்து விற்பனை செய்வதற்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பெரியகடையில் மட்டுமே துணிகளையோ உடைகளையோ கொள்வனவு செய்யமுடியும். வன்னிக்கான போக்குவரத்து, கொழும்புத்துறை பூநகரி துறைமுகத்தினூடாக நடைபெற்றபோதும் கால்நடைகளை எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்படவில்லை. எழுதுமட்டுவாழ், பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் கமம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு கமம் செய்பவர்களிடமிருந்து ஒரு வண்டில் நெல்லுக்கு ஒரு பணம் அறவிடப்பட்டது. இந்த நடைமுறை தமிழ் அரசர்களின் காலத்திலும் இருந்ததாகவும் அதனையே போர்த்துக்கீசரும் பின்பற்றியதாகவும் கூறப்படுகிறது. வன்னியிலிருந்து எடுத்துவரப்பட்ட ஒரு வண்டில் பருத்திக்கு கால் பணம் அறவிடப்பட்டது. காணி விற்பனையும் சந்தையிலேயே நடைபெற்றது.

ஒவ்வொரு சாதிக்கும் அந்தந்த சாதிகளைச் சேர்ந்தவர்களே வரி வசூலிக்கும்



அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருந்தனர். வெளிநாட்டவர்கள் யாராவது வேளாளர்களின் பிள்ளைகளை தத்தெடுக்க விரும்பினால் பிள்ளையின் தந்தைக்கு 1520 சக்ரன் வழங்கவேண்டும். பிள்ளைகளைத் தத்தெடுக்கும் தொழில் அல்லது வியாபாரம் போர்த்துக்கீசர் காலத்தில் சிறப்பாக நடைபெற்றது. போர்த்துக்கீசரின் வருகைக்கு முன்னர் யானைகள் அரச சொத்தாகவே இருந்தன. அதே நடைமுறை போர்த்துக்கீசர் காலத்திலும் பின்பற்றப்பட்டது. யானை ஏற்றுமதி மூலம் போர்த்துக்கீசருக்கு பெருமளவு வருமானம் கிடைத்தது. சில சமயங்களில் அலியன் யானைகள் வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கிடையில் ஒழுங்கான பராமரிப்பின்மையால் இறந்தன. மாந்தை , கற்பிட்டி போன்ற பகுதிகளில் யானை பிடிப்பதில் சில ஊழல்கள் இடம்பெற்றன.

மன்னாருக்கு பொறுப்பான கப்டனிடம் யானைகளைப் பராமரிப்பதற்கு போதுமானளவு பணமில்லாதமையும் யானைகள் இறப்பதற்கு ஒரு காரணமாக இருந்தது. களவாக யானை பிடிப்பவர்களுக்கு பத்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தேவாலயங்களில் பாண்,வைன் என்பன வழங்குவதற்கென 40 சேர்பிம் ஒதுக்கப்பட்டது. யானைகள் யாழ்ப்பாணத்தில் வைத்து ஏலத்தில் விற்கப்பட்டன வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் .யானைகளை வாங்கிச்சென்றனர். 1645 ஆம் ஆண்டு அதிராம் பட்டினத்திலிருந்து வந்த முஸ்லிம் வியாபாரிகள் பாக்கு விற்பனை செய்வதற்கான ஒப்பந்தமொன்றை கப்டன் மேஜருடன் செய்துகொண்டனர். கறுவா அரச சொத்தாகவே இருந்தது. காடுகளைத் துப்பரவு செய்து அந்த நிலங்களை பயிர்ச்செய்கைக்கு வழங்கும் அதிகாரம் கப்டன் மேஜருக்கு இருந்தது. மன்னாரில் இராஜகாரியம் அல்லது ஊழியம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால் போர்த்துக்கல் அரசுக்கு வருமானம் குறைந்தது.

ஊர்காவற்றுறையில் நியமிக்கப்பட்டதைப் போன்று தலைமன்னாரிலும் கரையோரக் காவலுக்கென அனுமதியின்றித் தரையிறங்கும் படகுகளைக் கண்காணிப்பதற்கென ஒருவர் (Coast Guard) நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்கு மாதமொன்றுக்கு 15 பணம் சம்பளமாக வழங்கப்பட்டது.

(வரலாறு நீளும்)




# காலும் செருப்பும்

ஆர்.பிரகாஷ்

காலில்லாதவன் காலுக்கு அழ, கால் இருப்பவன் செருப்புக்கு அழுவானாம்' என்று ஒரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது. அது தற்போதைய உலக நடப்புக்குக் கச்சிதப் பொருத்தம். கொரோனா தடுப்பூசி விவகாரமும் அதில் முரண் இல்லை.

கொரோனாவில் இருந்து விடுபடுவதற்கு இலங்கை உட்பட ஒட்டுமொத்த உலக நாடுகளும் போட்டிபோட்டுக் கொண்டு தடுப்பூசிகளை ஏற்றிவருகின்றமை யாவரும் அறிந்ததே. அதிலும் அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் உயர் ரக தடுப்பூசிகளை தம் மக்களுக்கு தாராளமாக வழங்கி வருகின்றன.

இந்த நாடுகளில் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்டவர்களின் வீதம் 75 க்கும் அதிகம். ஆனால், இன்னும் பல நாடுகளில் ஒரு டோஸ் தடுப்பூசியை (முதல் டோஸ்) 25 வீதமானவர்கள் கூட பெறாத பதிவுகளும் உள்ளன. குறிப்பாகஆபிரிக்க நாடுகள் இந்த வகைக்குள் அடங்குகின்றன. ஆபிரிக்க நாடுகளின் நிலைமை இவ்வாறிருக்கையில், இரு தடுப்பூசிகளுக்கும் மேலாக பூஸ்டர் டோஸை வழங்குவதற்கும் ஐரோப்பிய நாடுகள் நடவடிக்கை எடுத்துள்ளன. இதற்கு உலக சுகாதார நிறுவனம் கடும் எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளது. தடுப்பூசிகளின் பயன்பாட்டை பரவலாக்க வேண்டும். ஆபிரிக்க நாடுகளுக்கு தடுப்பூசிகள் செல்வதை பணக்கார நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும். அதைவிடுத்து தம் நிறைவான தேவை முடிந்த பின்னர் மிச்சம் மிகுதி இருந்தால் அவற்றைப் பகிர்ந்து வழங்கலாம் என்ற முடிவில் இருப்பது கண்டிக்கத்தக்கது என்றுள்ளது உலக சுகாதார நிறுவனம்.

ஆபிரிக்க நாடுகளுக்கும் மேற்கத்தேய தேசங்களுக்கும் இடையிலான தொடர்பு மிகக் கசப்பான பின்னணிகளைக் கொண்டது. இன்று நேற்றல்ல, ஐந்தல்ல பத்தல்ல, பல தசாப்தக் கதையது. இன்று பல மேற்கத்திய தேசங்கள் செல்வச் செழிப்புடன் உள்ளன என்றால் அதற்கு ஆபிரிக்க நாடுகளில் உள்ள சுரங்கங்களும், அங்குள்ள மக்களின் உழைப்பும் தான் காரணம்.

மேற்கத்தேய நாடுகளுக்குச் சொந்தமான ஏராளமான தங்கச் சுரங்கங்கள், நிலக்கரிச் சுரங்கங்கள் ஆபிரிக்க நாடுகளில் உள்ளன. குத்தகையின் அடிப்படையில் சிறு தொகையைக் கொடுத்துவிட்டு அங்கிருந்து உள்ளூர் மக்களின் உழைப்பின் அடிப்படையிலேயே ஏராளமான வளத்தை மேற்கத்தேய தேசங்கள் கொள்ளையிட்டுக் கொண்டிருக்கின்றமை ஒன்றும் பரம இரகசியம் அல்ல. அது மட்டுமல்லாமல் ஏகப்பட்ட ஆபிரிக்க நாடுகள் மேற்கத்திய நாடுகளின் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டுக் கிடந்தவைதான். துட்சிகளின் படுகொலை போன்று எண்ணற்ற படுகொலை நிகழ்த்தப்படுகின்றமைக்கு மேற்படி நாடுகள் வழங்கிய நேரடி, மறைமுக ஆதரவும் கூட காரணமாக இருந்திருக்கின்றது.

ஆனால், இவையெல்லாவற்றுக்கும் சேர்ந்து இந்தக் கொரோனாத் தடுப்பூசி விடயத்தில் ஒரு பரிகாரத்தை தேடுவதற்குக்கூட ஐரோப்பிய நாடுகளின் இதயங்கள் இளகவில்லை. அவை வணிக, இலாப மோகத்தில் இன்றும் இறுக்கமடைந்துள்ளன. ஆபிரிக்காவின் குருதிச் சகதி இன்னும் கனத்துக் கொண்டே இருக்கின்றது. அது தனக்குரிய நீதியை இன்னும் தேடியலைகின்றது. அதைச் சாந்தப்படுத்த, திருப்திப்படுத்த எவரும் இல்லை. ஐ.நாவும் கூட.



தடுப்பூசிகளின் பயன்பாட்டை பரவலாக்க வேண்டும். ஆபிரிக்க நாடுகளுக்கு தடுப்பூசிகள் செல்வதை பணக்கார நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும். இன்று பல மேற்கத்திய தேசங்கள் செல்வச் செழிப்புடன் உள்ளன என்றால் அதற்கு ஆபிரிக்க நாடுகளில் உள்ள சுரங்கங்க ளும், அங்குள்ள மக்களின் உழைப்புந்தான் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சொந்தக் காசில்..!

அமெரிக்க தலைநகரான நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, தனது பாரியார் சகிதம் நேற்று (செப்ரெம்பர் 18 ஆம் திகதி )அமெரிக்கா நோக்கி புறப்பட் டுள்ளார்.

ஜனாதிபதி உள்ளிட்ட இலங்கை ய்ஜ்தூதுக்குழுவினர் அரச செலவில், உத்தியோகப்பூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தாலும், ஜனாதிபதியின் பாரியார் தனிப்பட்ட ரீதியில் கட்டணம் செலுத்தியே அவர்களுடன் சென்றுள்ளார்.

அமெரிக்கப் பயணத்தின்போது அங்குள்ள தனது மகன், மருமகள் மற்றும் பேரப்பிள்ளைகளை சந்தித்து, அவர்களுடன் நேரத்தை கழிப்பதற்கு ஜனாதிபதியின் பாரியார் திட்டமிட்டுள்ளார்.

அரசமுறை பயணம் மேற்கொண்டு குடும்ப உறுப்பினர்களை சந்தித்தால், அது தொடர்பில் கடும் விமர்சனங்கள் எழக்கூடும் என்பதால் அதனை தவிர்க்கும் நோக்கில்கூட, தனிப்பட்ட ரீதியில் கட்டணம் செலுத்தி அமெரிக்கா செல்லும் முடிவை ஜனாதிபதியின் பாரியார் எடுத்திருக்கக்கூடும் எனக் கூறப்படுகின்றது.

அதேபோல முதன்மைப் பெண்ணுக்கான வரப்பிரசாதங்களைக்கூட ஜனாதிபதியின் பாரியார் அனுபவிப்பதில்லை எனவும், மிகவும் எளிமையானதொரு வாழ்க்கையையே அவர் வாழ்கின்றார் எனவும் அவருக்கு நெருக்கமானவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

# பஸிலுக்கு போர்க்கொடி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை காணொலித் தொழில்நுட்பம்மூலம் நடைபெற்றது. இதன்போது 21 அமைச்சரவைப் பத்திரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதில் கெரவலபிட்டிய மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவால் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில முகாமைத்துவ பங்கை அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கான யோசனையாகவே அது அமைந்திருந்ததாம்.

இதனால் மேற்படி திட்டத்துக்கு அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல்வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இதனால் யோசனை நிறைவேற்றப்படவில்லையாம். எனினும், மேற்படி அமைச்சர்களுக்கு குறித்த திட்டம் தொடர்பில் விளக்கமளித்த பின்னர் அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு பஸில் ராஜபக்ச திட்டமிட்டுள்ளாராம்.




# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்


## புத்துயிர் பெறும் வெற்றிலை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மீண்டும் பலப்படுத்துவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீவிரமாக ஆராய்ந்துவருகின்றது. மேற்படி கூட்டமைப்புக்கு கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியே தலைமைத்துவம் வழங்கியது.

எனினும், மொட்டுக் கட்சி உதயமான பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வலுவிழந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னம் வெற்றிலை. மஹிந்தவுக்கு பிரதான தேர்தல்களின்போது வெற்றியை தேடிக்கொடுத்த சின்னம் அதுவே. இதனால்தான் வெற்றியின் சின்னம் வெற்றிலைச் சின்னம் என்று மஹிந்த ராஜபக்ச அடிக்கடி கூறிவந்தார்.

சுதந்திரக்கட்சி தற்போது பலவீனமடைந்து, மொட்டுக் கட்சியிடம் சரணடைந்துள்ளது. இந்தநிலையில்தான் கூட்டணியை பலப்படுத்துவதற்கான முயற்சியில் சுதந்திரக் கட்சி இறங்கியுள்ளது. இது தொடர்பில் கடந்தவாரம் முக்கியத்துவ மிக்க சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதில் பங்கேற்றவர்களில் பெரும்பாலானவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பலப்படுத்துவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனராம்.





## பதவி துறந்தது ஏன்?

அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் நுழைந்து அடாவடியில் ஈடுபட்டு, தமிழ் அரசியல் கைதிகளை மண்டியிட வைத்து சண்டித்தனம் காட்டிய லொஹான் ரத்வத்தவுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் செம டோஸ் கொடுத்துள்ளனர். அதேபோல மொட்டுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலரும் அவரின் செயலைக் கடுமையாக கண்டித்துள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் நடைபெறுகின்றது. ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரும் ஆரம்பமாகியுள்ளது. இந்நிலையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதானது சர்வதேச மட்டத்திலும் இலங்கைக்கு களங்கம் விளைவிப்பதாகவே அமையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவேதான், லொஹான் ரத்வத்தவை பதவி விலக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அழுத்தங்கள், எதிர்ப்புகள் வலுத்ததால் தாமாக முன்வந்து சிறைச்சாலைகள் விடயதானத்துடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சு பதவியை மட்டும் லொஹான் ரத்வத்தே தற்காலிகமாக துறந்துள்ளார்.

எனினும், ஏனைய விடயதான்ங்களுடன் தொடர்புடைய இராஜாங்க அமைச்சுப் பதவியை அவர் இன்னமும் வகிக்கின்றார். லொஹானுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான விசாரணைகள் ஆரம்பமாகியிருந்தாலும், அவை உரியவகையில் இடம்பெறுமா என்பது கேள்விக்குறியே என பாதிக்கப்பட்ட கைதிகளின் உறவினர்கள் தெரிவித்தனர். அதேவேளை, செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் நாடாளுமன்ற அமர்வின்போது இவ்விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் சரமாரியாக கேள்விக் கணைகளைத் தொடுக்கவுள்ளன.



## கைதிகளுக்கு பாடமெடுத்த நாமல்

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை சந்திப்பதற்காக அமைச்சர் நாமல் ராஜபக்ச செப்டம்பர் 16 ஆம் திகதி சிறைச்சாலைக்கு பயணம் மேற்கொண்டிருந் தார்.

தமிழ் அரசியல் கைதிகள் 12 பேரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று நாமல் ராஜபக்ச அங்கு சென்றிருந்தார்.

கைதிகளை சந்தித்து கலந்துரையாடிய நாமல், " கூட்டமைப்பினர் சொல்வதைக்கேட்டு நீங்கள் ஏமாற வேண்டாம். அவர்கள், உங்களை சந்தர்ப்பத்துக்காக பயன்படுத்திக்கொள்கின்றனர். மஹிந்த ராஜபக்ச ஆட்சிகாலத்தில் 12 ஆயிரம் முன்னாள் போராளிகளை விடுவித்தோம். உங்களுக்கும் நாங்கள் உதவி செய்வோம். வெளியில் சென்ற பிறகு நீங்கள் எப்படி வேண்டுமானாலும் அரசியல் நடத்துங்கள். ஆனால் ஏமாற வேண்டாம்." என்று அறிவுரை வழங்கியுள்ளார்.

அத்துடன், பெற்றோரை இழந்த தமிழ் அரசியல் கைதியொருவருக்கு தொழில் பயிற்சி வழங்கி, அவருக்கு வீடொன்றையும் நிர்மாணித்துக் கொடுப்பதற்கு நாமல் ராஜபக்ச உறுதியளித்துள்ளாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளாடைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோகிக்கப்படுதாக செய்திகள் வெளிவருகின்றன.
ஆனால் கைப்பற்றப்பட்ட பொருட்களை அரசாங்கம் அதைப் பதுக்கிய வர்தகர்களிடமே சந்தை விலைப்படி கொள்வனவு செய்வதாகவும் அதைப் பதுக்கிய முதலாளிகள் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவதில்லை என்றும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் அத்தியாவசிய பொருட்கள் உட்பட பலபொருட்களுக்கு நாட்டில் நெருக்கடி உண்டு. அரசாங்கம் அந்த நெருக்கடிகளை கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தனமாக சில நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. ஆனால் அவை எதிர்பார்த்த விளைவுகளை இந்தக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் தரவில்லை. அதுமட்டுமல்ல அரசாங்கம் வேறுஒரு உத்தியையும் கையாள்கின்றது. சில பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டதால் வரக்கூடிய விளைவுகளை எதிர்கொள்வதற்காக அல்லது பொதுசனங்களின் கோபத்தை திசைதிருப்புவதற்காக அரசாங்கம் உள்ளூர் உற்பத்தி, சுற்றுச்சூழலை பாதுகாப்பது, மண்வளத்தை பாதுகாப்பது போன்ற கவர்ச்சியான பசுமை கோஷங்களை முன்வைக்கின்றது. இப்பசுமைக் கோஷங்கள் உன்னதமான அரசியல் பொருளாதார இலட்சியங்கள்தான். ஆனால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபின் அதிலும் குறிப்பாக ஒரு பெருந்தொற்றுச் சூழலில் அவற்றை திடீரென்று அமுல்படுத்தமுடியாது.




அவைபோன்ற உன்னதமான இலட்சியங்களை அடைவதற்கு நீண்டகாலத் திட்டங்கள் வேண்டும். நீண்டகால அணுகுமுறைகள் வேண்டும்.
மாறாக இறக்குமதியை திடீரென்று நிறுத்திவிட்டு. இடைக்கிடை சமூக முடக்கங்களை அறிவித்துக்கொண்டு, மக்களை உள்ளூர் உற்பத்திக்கு திரும்புமாறு கேட்பது பொருத்தமானதா?இது ஒரு பெரும்தொற்றுக்காலம். உலகம் முழுவதும் ஒரு அசாதாரணச் சூழல் நிலவுகிறது. இப்படிப்பட்ட ஓர் அசாதாரணச் சூழலில் இதுபோன்ற பரிசோதனைகளையும் நீண்டகால நோக்கிலான திட்டங்களையும் எப்படி முன்னெடுப்பது? உதாரணமாக மஞ்சளின் இறக்குமதியை அரசாங்கம் நிறுத்தியது. அதனால் பெருந்தொகை பணத்தை அரசாங்கம் சேமித்தது. உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதாக கூறிக்கொண்டு மஞ்சளை உள்ளூரில் உற்பத்தி செய்யுமாறு விவசாயிகளை ஊக்குவித்தது. ஆனால் அதன்மூலம் நாட்டின் மஞ்சள் தேவையில் அரைவாசியைத்தான் ஈடுசெய்ய முடிந்தது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் மஞ்சள் கஞ்சாவைப் போல மாறிவிட்டது. அது இந்தியாவில் இருந்து கடத்திவரப்படுகிறது. கடத்தி வரப்படும் கஞ்சாவைக் கைப்பற்றும் அரசாங்கம் அதை முன்பு எரித்தது. ஆனால் இப்பொழுது சதொசவில் சந்தை விலைக்கு விற்கிறது.

இப்போது அரசாங்கம் 623 பொருட்களுக்கு இறக்குமதிக்கான நிபந்தனைகளை விதித்திருக்கிறது. இதனால் மேற்படி பொருட்களும் இனிமேல் கஞ்சா போல கடத்தப்படலாம் என்று தெரிகிறது. சில நாட்களுக்கு முன்கிடைத்த ஒரு தகவலின்படி இந்தியாவில் இருந்து மஞ்சளுடன் சேர்த்து வீட்டுத் தேவைக்கான மின்னியல் சாதனங்களும் கடத்திவரப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் நிதிமுகாமைத்துவம் போன்றவை கள்ளச் சந்தையைத் தான் ஊக்குவிக்கின்றனவா? அதேபோல அரைச் சமூக முடக்கமும் நாட்டில் பதுக்கலையும் கொரோனா சந்தைகளையும் தான் உற்பத்தி செய்திருக்கிறது. அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் மற்றும் நிதி முகாமைத்துவம் மட்டும் அல்ல இராணுவமயமாக்கல் கொள்கையும் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றது என்று சில பெரிய வணிகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். உதாரணமாக சுங்கப்பகுதிக்கும் துறைமுக அதிகாரசபைக்கும் ஓய்வுபெற்ற படை அதிகாரிகளே பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மிகக் குறிப்பாக துறைமுக அதிகாரசபைக்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட படை அதிகாரி விவகாரங்களை முறையாக நிர்வகிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. உதாரணமாக இலங்கையின் கொழும்பு துறைமுகம் இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்தை விடவும் பெரியது. எனவே தூத்துக்குடிக்கு வரும் பெரிய கப்பல்கள் இடைத்தங்கல் நிலையமாக கொழும்பைப் பயன்படுத்துகின்றன. ஆனால் புதிய நிர்வாகத்தின் கீழ் இவ்வாறு வரும் கப்பல்களின் தொகை வீழ்ச்சியடைந்து விட்டதாகவும் நிர்வாகத் தாமதங்கள் காரணமாக கப்பல் கொம்பனிகள் துபாய் நோக்கி செல்வதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. துறைமுகத்தில் கொள்கலன்கள் தேங்கிக் கிடக்கின்றன என்றும் அவற்றை காலி செய்து புதிய ஏற்றுமதி பொருட்களை நிரப்புவது தாமதமாகிறது என்றும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்கள் தெரிவிக்கிறார்கள். இவ்வாறாக அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள், நிதிமுகாமைத்துவம், இராணுவமயமாக்கல் போன்றவற்றால் மொத்த பொருளாதாரமும் நெருக்கடிக்குள் சிக்கிவிட்டது என்று பொருளியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். நெருக்கடியை சமாளிப்பதற்கு அரசாங்கம் பசில் ராஜபக்சவை நிதிஅமைச்சராக நியமித்தது. அவர் நிதியமைச்சராக வந்ததிலிருந்து கிழமைக்கு ஒரு புதிய முடிவு எடுக்கப்படுகிறது. ஆனால் இவை எவற்றாலும் சரிந்து விழும் பொருளாதாரத்தை இன்றுவரையிலும் நிமிர்த்த முடியவில்லை. ஏன் ?
நாட்டின் பொருளாதாரம் சரிந்து விழுந்தமைக்கு தனியே பெருந்தொற்று நோய் மட்டும் காரணமல்ல. அல்லது அதற்கு முன்நிகழ்ந்த ஈஸ்டர் குண்டு வெடிப்பு மட்டும் காரணமல்ல. காரணம் அதைவிட ஆழமானது. தென்னாசியாவின் திறந்த சந்தைப் பொருளாதாரத்துக்கு முதலில் திறக்கப்பட்ட நாடு இலங்கைத் தீவுதான். ஆனால் இலங்கைத் தீவுக்கு பின் அவ்வாறு திறக்கப்பட்ட பல நாடுகள் எங்கேயோ போய்விட்டன. இந்தோனேஷியா, வியட்நாம் ,பங்களாதேஷ் போன்றவை இலங்கையை விடவும் முன்னேறிவிடடன. ஆனால் சிறிய இலங்கைத் தீவு எல்லாவிதமான வளங்களையும் கொண்டிருந்தபோதிலும் முன்னேற முடியவில்லை. காரணம் மிகவும் எளிமையானது. பல்லினத்தன்மை மிக்க ஒரு தீவை கட்டியெழுப்ப இலங்கைத் தீவில் தொடர்ச்சியாக வந்த ஆட்சியாளர்கள் தவறிவிட்டார்கள். அதாவது இனப்பிரச்சினைதான் இலங்கைத் தீவின் பொருளாதாரம் சரிந்து விழக்காரணம்.

எல்லாவிதமான வளங்களையும் கொண்டிருந்த அழகிய சிறிய தீவை பல்லினத்தன்மைமிக்க ஒரு நாடாகக் கட்டியெழுப்ப சிங்களத் தலைவர்களால் முடியவில்லை. அதன் விளைவாக பொருளாதாரம் சீரழியத் தொடங்கியது. யுத்தம் இலங்கைத்தீவின் முதலீட்டு கவர்ச்சியை இல்லாமல் செய்துவிட்டது. அப்படிப் பார்த்தால் 2009ஆம் ஆண்டுக்குப் பின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தியிருக்க வேண்டும். ஆனாலும் முடியவில்லை. ஏன்?

ஏனென்றால் யுத்தவெற்றியை அரசியல் வெற்றியாக மாற்ற அரசாங்கத்தால் முடியவில்லை. அதுமட்டுமல்ல ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை குடும்ப வெற்றியாக மாற்றி அந்த அடித்தளத்தின் மீது ஒரு கட்சியையும் கட்டி எழுப்பிவிட்டார்கள்.

இப்பொழுது அவர்கள் யுத்தவெற்றிக்கு தலைமை தாங்குகிறார்கள். யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றத் தவறியதால்தான் அதாவது இனப் பிரச்சினைக்கு தீர்வை கண்டுபிடிக்க தவறியதால்தான் கடந்த 12 ஆண்டுகளாக அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தமுடியவில்லை. அரசியல் ஸ்திரத்தன்மை இல்லை என்றால் நாட்டின் முதலீட்டுக் கவர்ச்சி அதிகரிக்காது. இதுதான் அடிப்படைப் பிரச்சினை.
பஸிலை மட்டுமல்ல வேறு யாரைக் கொண்டு வந்தாலும் பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு ஒரேஒரு முன் நிபந்தனைதான் உண்டு. யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றுவது. பல்லினத்தன்மை மிக்க ஓரழகிய சிறிய தீவை கட்டியெழுப்புவது. ஆனால் யுத்த வெற்றி வாதத்துக்கு தலைமை தாங்கிக்கொண்டு அந்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றமுடியுமா? ■

# இருளினுள்ளே நிழலானவன்:

## பிரான்ஸிஸ் கிருபாவை முன்வைத்து...!

○ தமிழ்நதி



கவிஞர்/நாவலாசிரியர் பிரான்ஸிஸ் கிருபா கடந்த 16 ஆம் திகதி மறைந்துவிட்டார். அவரோடு எனக்கு நேர்முகப் பரிச்சயம் அவ்வளவாக இல்லை.
இரண்டு தடவைகள் சென்னை புத்தகக் கண்காட்சியில் அவரைப் பார்த்தேன். இரண்டு சந்திப்புகளுமே 'தமிழினி' ஸ்டாலில் நிகழ்ந்தவைதான். முதற்தரம், அவரைக் கண்டதும், "கன்னி அரைவாசிதான் வாசித்துள்ளேன். வாசித்து முடிக்கவேணும்" என்றேன். "அரை வாசி.....?" என்ற வார்த்தையில் ஒருகணம் நின்றார். பெரித்தாகச் சிரித்தார். "முழுவதும் வாசித்துவிட்டுச் சொல்லுங்கள்" என்றார்.
பிறகொருநாள், 'தமிழினி'ஸ்டோலில், வசந்தகுமார் அவர்களிடம் பணம் வாங்கியபின் அவசரமாக வெளியேறிக் கொண்டிருந்த அவரைக் கண்டேன் "எப்படி இருக்கிறீர்கள் தமிழ்நதி?" என்றார். நான் பதில் சொல்லி முடித்தவுடன் பரபரத்த கண்களுடன் வெளியேறிவிட்டார்.

பிற்பாடு, அவ்வப்போது தொலைவிலிருந்து அவரைக் கண்டிருக்கிறேன். காணும்போதெல்லாம் 'அந்தரித்து அலையும் நல்லாத்மா' என எண்ணிக்கொள்வேன். ஒவ்வொரு தடவை காணும்போதும், முந்தைய தடவை கண்டதைவிட தோற்றச் சிதைவை அவதானிக்க முடிந்தது. 'கன்னி' நாவல் ஒரு நெடுங்கவிதை. அவரது மறைவின்பின், "அவர் அப்படி இருந்திருக்கலாம்; இப்படி வாழ்ந்திருக்கலாம்" என்றெல்லாம் நான் அதிகப்பிரசங்கித்தனம் பண்ணப் போவதில்லை. அவர், தான் விரும்பியவாறே வாழ்ந்தார்; மறைந்தார்.

நூறு ஆண்டுகள் ஒருவர் ஆரோக்கியமாக வாழ்ந்தாலும், 'கன்னி'போன்றதொரு நாவலையோ பிரான்சிஸ் கிருபாவால் எழுதப்பட்ட அதியற்புதமான கவிதைகளையோ எழுதிவிட இயலாது. கவித்துவத்துக்கும் பித்து நிலைக்குமான தொடர்பு பற்றி பலரும் எழுதியுள்ளார்கள். பிரான்ஸிஸ் கிருபா பற்றி நானறிந்ததன் அடிப்படையில், அவரது மரணம், அவரால் வரிக்கப்பட்ட அல்லலுற்ற வாழ்விலிருந்து அவரடைந்த விடுதலை என்றே எண்ணுகிறேன். இப்படித்தான் மகாகவிகளெல்லோரும் சடுதியாக மறைந்துபோகிறார்கள். 'எழுத்தில் நீங்கள் இருக்கிறீர்கள்' என்ற தேய்ந்த அஞ்சலியை உங்களுக்கும் சொல்கிறேன் கிருபா.
'கன்னி' நாவலை இதுவரை வாசித்திராதவர்கள் தயவு செய்து இனியாகுதல் வாசியுங்கள். தமிழில் வெளியான மகத்தான நாவல் அது. மறைந்த கவிஞனுக்கு, மனஞ் சோர்ந்த அஞ்சலி. ■

*சிலிர்க்கச் சிலிர்க்க அலைகளை மறித்து*
*முத்தம் தரும் போதெல்லாம்*
*துடிக்கத் துடிக்க ஒரு மீனைப் பிடித்து*
*அப்பறவைக்குத் தருகிறது*
*இக்கடல்.*

**ஜெ. பிரான்சிஸ் கிருபா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசுக் கட்சியின் ஐ.நா.வுக்கான கடிதம் சிறிலங்கா அரசைக் காப்பாற்றும் முயற்சியே!



## நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன் பரபரப்புக் குற்

ஜெனீவா மனித உரிமைகள் பேரவை அமர்வு, அதன் போது ஆணையாளர் வெளியிட்ட வாய்மூல அறிக்கை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஐ.நா. மனிதன் உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பிய கடிதம் போன்ற சமகால விடயங்கள் பற்றி உதயன் – சஞ்சீவி வாசகர்களுக்காக நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் வழங்கிய பிரத்தியேக செவ்வி இது.



நேர்காணல்: பொ.சோபிகா

**கே: ஐ.நா மனித உரிமைகள் சபை ஆணையாளரின் அறிக்கையினை எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?**

ப: ஏமாற்றத்தையே தந்துள்ளது. சிறிலங்கா தொடர்பில் சபையில் நிறைவேற்றப்பட்டிருந்த 46/1 தீர்மானத்தை ஆணையாளரின் வாய்மூல அறிக்கை பிரதிபலித்துள்ளது. அந்தத் தீர்மானம் காலத்தை நீடிப்பதாக அமைவது மட்டுமல்லாது தமிழர்களுக்கான நீதியினை நீர்த்துக் போகச் செய்கின்றஒரு யுத்தியாகவும் காணப்பட்டிருந்தது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தபோது 46/1 தீர்மானம் சிறிலங்காவுக்கு தோல்வி ஆனால் தமிழர்களுக்கு வெற்றியல்ல என எமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தோம்.

சிறிலங்காவின் நிலைமைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தவேண்டும் என்ற ஆணையாளரது நிலைப்பாட்டை (கடந்தாண்டு) முன்னைய அறிக்கை வெளிப்படுத்தியிருந்தது. ஆனால் ஆணையாளரின் தற்போதைய வாய்மூல அறிக்கை என்பது சிறிலங்கா தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானத்தை அடியொற்றியது. ஆணையாளர் அலுவலகத்துக்கு அந்தத் தீர்மானம் வழங்கிய ஆணைக்கு அமைய தனது இந்த வாய்மூல அறிக்கையினை முன்வைத்துள்ளார். இறுதி அறிக்கையே முக்கியமானதாக அமையும் என எதிர்பார்க்கி ன்றோம்.

அம்மையார், ஐ.நா. மனித உரிமைப்பேரவை அடுத்துச் செய்ய வேண்டியது பற்றி கூற வாய்ப்பு இல்லாவிடினும் மற்றையநாடுகள் தனிப்பட்ட முறையில் செய்ய வேண்டியவற்றைப் பரிந்துரைக்காமை ஏமாற்றத்தை தருகின்றது. குறிப்பாக றொஹிங்யா மக்கள் எதிர்கொண்டுள்ள பெரும் மனித உரிமை மீறல்கள் விவகாரத்தில் உலக நீதிமன்றம் தற்காலிக உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

அதுபோல ஐ.நா.வின் இன அழிப்பைத் தடுப்பதற்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறிலங்கா விவகாரத்தில உலக நீதிமன்றத்தின் தற்காலிகத் தடுப்பு நடவடிக்கைக்கான உத்தரவினை ஆணையாளர் கோரியிருக்கலாம். மேலும் உலகளாவிய நியாயாதிக்கத்தின் அடிப்படையில் நாடுகள் தனிப்பட்டமுறையில் சிறிலங்கா தொடர்பில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் உலக நாடுகளைக் கோரியிருக்கலாம்.

ஆனால் இவைகள் எதுவுமே ஆணையாளரின் அறிக்கையில் இல்லாமை ஏமாற்றமே.

**கே: ஆணையாளர் தன்னிடம் பல ஆயிரம் தரவுகள் உள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளாரே?**

ப: 120 000 தரவுகள் தன்னிடம் உள்ளதாகக் கூறியுள்ளார். இவற்றினை சாட்சியமற்ற போரின் சான்றுகளாகக் கருதலாம் என நினைக்கின்றேன்.

"அறிந்துகொள்ளும் உரிமை... உண்மையினை அறிந்துகொள்ளும் உரிமை" என்ற உரிமைகளின் அடிப்படையில் இந்தச்சான்றுகளை பாதிக்கப்பட்டவர்களிடம் கையளிக்கவேண்டும். அதற்கான பொறிமுறையினை ஆணையாளர்
ஐ.நாவிடம் உள்ள சான்றுகளை வேண்டி
நடத்தும் பன்னாட்டு நீதிக்கான செயல்
Dirvne International Jusitce (VDIJ) 2019
தமிழீழ அரசாங்கம் தொடங்கியிருந்தத
ஞாபகப்படுத்துகின்றேன்.

ஆணையாளர் குறித்துரைத்துள்ள சான்
டத்தின் ஊடாக பாதிக்கப்பட்டவர்கள் பெ
நியாயாதிக்கத்தின் அடிப்படையில் பாதிக்க
குகளை தொடுக்க இயலும்.

**கே: ஆணையாளரின் அறிக்
அரசாங்கம் நிராகரித்துள்**

ப: : நாங்கள் 46/1 தீர்மானத்தின் பே
தின் படி, சிறிலங்காவுக்கு தோல்
ளுக்கு நீதியல்ல. அதே அடிப்ப
ஆணையாளரின் அறிக்கை, ஜீ.எல்.பீரி
கைக்கு, சிறிலங்காவுக்கு தோல்வி, ஆனா
யாக அமையவில்லை.

நான் முதலில் குறிப்பிட்டதுபோல், ஆணை
நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வது பற்றி
தங்களது உலகளாவிய நியாயாதிக்கத்தின்
நாடுகளில் வழக்குகளை கொண்டு வருவது
தீர்மானம் முடியும் வேளையில் வெளிவரு
இதனைக் கூறலாம் என ஆணையாளர்
ஆனால் நீதி தாமதிக்கப்படுவது நீதி மறுக்க
கின்றது.

மற்றும் தமிழினப்படுகொலைக்கு சிறிலங்
வைப்பதற்கான நீதிக்கான செயற்பாட்டில்
உரிமை மீறல் சம்பவங்களை பட்டியலிட்
அறிக்கையாக ஆணையாளரின் அறிக்
அனைத்துலகப் பொறிமுறைகள் ஊடா
பாட்டை சுருக்கிவிடுகின்றதோ என்ற அச்ச

**கே: ஐ.நா,வுக்கு இலங்கைத் த
அனுப்பியதாக கூறப்படு
விடுதலைப் புலிகளின் பே
கள் குறித்தும் விசாரிக்க
குறிப்பிட்டமை பற்றி...?**

ப: இரண்டரைப் பக்கக் கடிதத்தில்
கம், பொறுப்புக்கூறல் தொடர்பி
ஐ.நா. கூறிய விடயங்களே வ
டுள்ளது.

ஐ.நா.வின் மனித உரிமைச்சபைக்கா
பொறுப்பு வகிக்கின்ற ஒருவருக்கு ஐ.நா.
கைகள் தெரியாது என்பது போல் பட்டிய
யிருப்பதனை ஆணையாளர் நகைப்பு
பார். அதாவது ஐ.நா.வின் முன்னாள்
கீ மூனின் அறிக்கை பற்றி, அம்மையா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிறிலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தவேண்டும் என்ற பரிந்துரையை ஏன் தமிழ் அரசுக் கட்சி குறிப்பிடவில்லை?**

# பொதுக்கட்டமைப்புகளை உருவாக்கத் தவறிவிட்டோம்

**ஆணையாளரின் வாய்மொழி அறிக்கை சிறிலங்காவுக்கு தோல்வி ஆனால் தமிழர்களுக்கு வெற்றியல்ல**



## குற்றச்சாட்டு

னயாளர் உருவாக்கவேண்டும்.
வேண்டி பாதிக்கப்பட்டோர் வழி
செயல்முனைப்பினை Vicitm
) 2019ம் ஆண்டு நாடு கடந்த
ருந்ததனை இவ்வேளையில்

ள சான்றுகளை இச்செயற்றிட்
கள் பெறுவார்களாயின்,உலக
பாதிக்கப்பட்ட தாங்களே வழக்

**அறிக்கையினை இலங்கை
கரித்துள்ளதே ?**

த்தின் போது கூறியிருந்த கருத்
த தோல்வி. ஆனால் தமிழர்க
அடிப்படையில் தற்போதைய
.எல்.பீரிஸின் 13 பக்க அறிக்
.ஆனால் தமிழர்களுக்கு நீதி

ஆணையாளர் இதனை உலக
து பற்றியோ.அல்லது நாடுகள்
க்கத்தின் அடிப்படையில் தமது
வருவதற்கு கூறவில்லை. 46/1
ளிவரும் இறுதி அறிக்கையில்
யாளர் கருதியிருக்கக் கூடும்.
தி மறுக்கப்படுவதாகவே அமை

சிறிலங்காவை பொறுப்புக்கூற
பாட்டில் இருந்து விலகி,மனித
டியலிட்டதான ஓர் உள்நாட்டு
அறிக்கை வந்திருக்கிறது. இது
ர் ஊடான நீதிக்கான செயற்
ற அச்சத்தையே தருகின்றது.

**கைத் தமிழ் அரசுக் கட்சி
றப்படுகின்ற கடிதத்தில்
ரின் போர்குற்றச்சாட்டுக்
ரிக்க வேண்டும் என்று
பி...?**

தத்தில் ஒன்றே முக்கால் பக்
தாடர்பில் கடந்த காலத்தில்
ளே வரலாறாக எழுதப்பட்

பக்கான ஆணையாளராக
ஐ.நா.வினது இந்த அறிக்
பட்டியலிட்டு கடிதம் அனுப்பி
கப்புடனேயே நோக்கியிருப்
ாள் பொதுச் செயலர் பான்
மையாருக்கு எதுவுமே தெரி

யாது என்பது போல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தைப் பார்த்து, தமிழர்களுடைய அறிவைப் பற்றி அவர் கேள்விக்கு உட்படுத்தியிருப்பார். இந்தக்கூட்டத் தொடருக்கு சர்வதேச மனித உரிமைச்சபை, சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஒக்ரலண்ட் நிறுவனம் போன்ற சர்வதேச அமைப்புக்கள் கூட இவ்வாறு பான் கீ மூனின் அறிக்கையினை அடியொற்றி கடிதங்களை அனுப்பவில்லை. பான்கீ மூனின் அறிக்கையினை குறிப்பிட்ட வகையில் தமிழ் அரசுக்கட்சியின் கடிதம் தனித்துவமாகத் தெரிகின்றது.

உண்மையிலேயே சரித்திரத்தை திரும்ப எழுதவேண்டும் என்ற கடப்பாடு தமக்கு இருப்பதாக தமிழ் அரசுக் கட்சி கருதியிருந்தால் கடந்த மார்ச் மாதம்,ஐ.நா.வின் தற்போதைய ஆணையாளர் உட்பட பல முன்னாள் ஆணையாளர்கள், ஐ.நா வளப்பெருமக்கள் பலரும் முன்வைத்த சிறிலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தவேண்டும் என்ற பரிந்துரையைக் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

மேலும் கடந்த மார்ச் ஆணையாளரின் பரிந்துரையினை அடிப்படையாக வைத்து அடுத்தகட்டம் நோக்கிக் கொண்டு செல்வதற்கான முனைப்பினை வெளிக்காட்டியிருக்கவேண்டும்.

அந்த முக்கிய விடயத்தை விடுத்து, பொறுப்புக்கூறல் தொடர்பான ஐ.நாவின் சரித்திரத்தை திரும்ப எழுதமுனைவதை விசமத்தனமான செயலாக நாங்கள் பார்கின்றோம். மேலும் தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தை பலவீனப்படுத்தி சிறிலங்காவை காப்பாற்றும் முயற்சியாகவே தமிழ் அரசுக் கட்சியின் கடிதத்தைக் கருதவேண்டியுள்ளது.

எம்மைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகள் போர்க்குற்றம் புரியவில்லை என்பதனையும்,சிறிலங்கா இனப்படுகொலையினை புரிந்தது அரசே என்பதனையும் அனைத்துலக குற்றவியில் நீதிமன்றில் நிரூபிக்க தயாராகவுள்ளோம்.

**கே: தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் திரைமறைவில் பல பேச்சுக்கள் நடைபெறுவதாக கூறப்படுகின்றதே ?**

**ப:** அரசியல் தீர்வு தமிழர் தேசத்துக்கானது. தமிழ் மக்களுக்கானது. குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கானது. அதனை விடுத்து திரைமறைவில் தீர்வுகளைத் தீர்மானித்துவிட்டு மக்களின் தலையில் கட்டுவதல்ல அரசியல் தீர்வு. மக்களே தமது அரசியல் தலைவிதியை ஓர் பொதுவாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கவேண்டும். மக்களுக்கே அந்த உரிமையும் அதிகாரமும் உள்ளது. தேசத்துக்கான அரசியல் இறைமை என்பது மக்களிடம் இருந்துதான் மேலெழவேண்டும்.

நாம் பரிகார நீதியினை வேண்டியிருந்த நிலையில்,அனைத்துலக சமூகம் முன்வைத்த நிலைமாறுகால நீதியின் நான்கு அம்சங்களில் ஒன்று மீளநிகழாமை தொடர்பானதும்,அதற்கான வழிமுறையைக் காணுதலும் ஆகும். இதனடிப்படையிலேயே ஐ.நா. மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்கள் இன்னமும் 13 ஆவது அம்சத் திருத்தத்தையே பேசிக்கொண்டு இருக்கின்றன. பாதிக்கப்பட்ட மக்களே தாம் எந்த அரசியல் ஏற்பாட்டுக்குள் வாழவேண்டும் என்பதனை தீர்மானிக்கின்ற உரிமையினை அவர்களுக்கு வழங்கவேண்டும் (the vicitms to fashion a poliitcalframework to ensure a deterrent for mass atrocities).

**கே: ஐ.நா விடயத்துக்கு அப்பால் ஒரு கேள்வி. கொரோனா வைரஸ் பெருந்தொற்றினை தமிழர் தேசம் சரியாகக் கையாண்டுள்ளதா?**

**ப:** தமிழர் தேசத்துக்கு என்று ஓர் இலக்கு இருக்கின்றது. அந்த இலக்கினை நோக்கிய பயணத்தில் ஒவ்வொரு காலத்திலும் எதிர்கொள்கின்ற சவால்

(14ஆம் பக்கம் பார்க்க)

**அரசியல் தீர்வு தமிழர் தேசத்துக்கானது. தமிழ் மக்களுக்கானது. குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கானது. அதனை விடுத்து திரைமறைவில் தீர்வுகளைத் தீர்மானித்துவிட்டு மக்களின் தலையில் கட்டுவதல்ல அரசியல் தீர்வு. மக்களே தமது அரசியல் தலைவிதியை ஓர் பொதுவாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கவேண்டும். மக்களுக்கே அந்த உரிமையும் அதிகாரமும் உள்ளது. தேசத்துக்கான அரசியல் இறைமை என்பது மக்களிடம் இருந்துதான் மேலெழவேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# கடைசிப் பேருந்து

பெரியமடு நிஹ்றி

பஸ் எத்தன மணிக்குப் போகும்" கொண்டக்ரரிடம் கேட்டாள் மீனா.

"பஸ் போகப் போகுதுமா இன்னும் பத்து நிமிசம்தான் இருக்கு"

"பத்து நிமிசமா கடைக்குப் போய் சாப்பிட நேரமில்லையே. என்னமாவது வாங்கி எடுத்துட்டுப் போற வழில சாப்பிடுவோம்" சிந்தனையோடு தனது பன்னிரண்டு வயது மகளை பொருத்தமான சீற் பார்த்து இருக்க வைத்துவிட்டு கடை நோக்கி வேகமாக நடந்தாள்.

பஸ் புறப்படத் தயாராகி மெது மெதுவாக முன்னோக்கி நகர்ந்தது. தாயைக் காணாது ஜன்னல் வழியாக தேடித்தேடித் தவித்தது பிள்ளை.

"அண்ணா அம்மா இன்னும் வரைல" பதறினாள்

"அம்மாட்டா சொன்னன் தானே பஸ் போகப் போகுதுண்ணு"எரிந்து விழுந்தான் கொண்டக்ரர்

கடையில் இருந்து வேர்க்க விறுவிறுக்க, பயமும் பதற்றமும் கலந்த ஓட்டமும் நடையுமாக பஸ் நோக்கி வந்தாள் மீனா.

வா வா என்று மகளின் கையை பிடித்து கீழே இறக்க முற்படுகிறாள். யாருக்கும் எதுவும் புரியாமல் திரும்பித் திரும்பி அனைவரும் பார்க்கின்றனர்.

"பஸ் போகனும் ஏற்கனவே நேரமாச்சு" பேசுகிறான் கொண்டக்டர்

"இல்ல சின்ன வேலை ஒன்னு இருக்கு முடிச்சிட்டு வாரன்" நம்ப முடியாத பொய்தான் சொல்லிக் கொண்டே கீழே இறங்குகிறாள் மகளோடு.

பஸ் தரிப்பிடத்தில் போய் அமர்கின்றனர். மீனாவின் கண்கள் இரண்டும் கடலாகிறது. சேலை நுனியால் துடைத்தாலும் அணை கடந்து விடுகிறது. யூகிக்க முடியாமல் கேள்விக்குறியோடு அருகில் இருக்கிறாள் மகள்.

"என்னம்மா.."என்று மெல்லிய குரலில் கேட்கும் மகளுக்கு "போய் அடுத்த பஸ் எத்தனை மணிக்கெண்டு கேட்டு வாம்மா"

"சரிம்மா 'என்று சொல்லிக் கொண்டு போன மகளும் பதற்றமாக வருகிறாள்

"என்னம்மா"

"நாலரைக்காம். அதுதான் கடைசி பஸ்ஸாம்"

"ஐயோ என்ன செய்றது இன்னும் ஒரு மணித்தியாலம் தானே இருக்கு"

"என்னம்மா யோசிக்கிறாய்? ஏதாவது பேசும்மா என்னமா ஏதாவது பிரச்சினையா? என்னம்மா நடந்தது?"

"இல்லம்மா பேர்ஸ்ஸ காணைலமா கடைல போய், சாமான் வாங்கிட்டுத்தான் பார்த்தன். இல்ல. கடைக்காரனும் கொஞ்சம் கூடக் கதைச்சிற்றான். கஷ்டமா இருந்தது"

மகளின் கண்களும் ஊற்றெடுத்தது.

"இப்ப என்னமா செய்றது?"

"தெரியலம்மா"

தாங்கள் போய் வந்த இடமெல்லாம்.தேடுகின்றனர். தெருவில் கிடக்கும் அத்தனை பொருளும் அவளது தொலைந்த பேர்ஸாகவே காட்சியளிக்கிறது. அங்கே நிற்பவர் எல்லோரிடமும் கேட்கிறாள் கண்ணில் படுவதை எல்லாம் எடுத்துப் பார்க்கிறாள்.மகளின் கடிகாரத்தைத் தவிர எல்லாக் கடிகாரங்களிலும் நேரம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது

"போனைக்குடு வீட்டுக்கு நெலமைய சொல்லுவோம்" நடுங்கும் கைகளில் நம்பர் மட்டுமல்ல போனே தவறி விடும் போலிருந்தது.

"இந்த அழைப்பை மேற்கொள்வதற்கு உங்களிடம் போதுமான மீதி இல்லை"

அடுத்த நொடி போனை தரையில் எறிய வேண்டும் போல்தான் அனைவருக்கும் தோன்றும் அவளுக்கு மட்டும் விதிவிலக்கா ஆனாலும் அப்போது விலங்கானது விதி.

"வடை வடை வடை.."

"அம்மா அப்போதைல இருந்துஅந்த வடைக்காரர் ஒரு மாதிரிப் பாக்கிறார்மா...அம்மா" மீனாவின் சிந்தனை முழுதும் தனது பேர்ஸ் எப்படித் தொலைந்தது என்பதிலே மூழ்கி இருந்தது. மகளின் கதை காதில் விழவில்லை. அம்மா என்ற இறுதி வார்த்தை மட்டும் காதில் விழ திரும்பி "என்னம்மா சொன்னாய்?"

"இல்லம்மா அப்போதைல இருந்து அந்த வடைக்காரர் ஒரு மாதிரிப் பாக்கிறார்"

"விடுமா நீ அங்கால பார்க்காத .பார்க்கவே ஒருமாதிரி இருக்கான்"

"அம்மா நம்ம போக வேண்டிய பஸ், ஸ்டாண்டுக்கு வருதுமா" ஏங்கிப் போய் நிற்கிறாள் மீனா திடீரென ஒரு யோசனை" சரிம்மா வா " மகளின் கையை இழுத்துக் கொண்டு எங்கோ போகிறாள். மகள் திரும்பித் திரும்பி வடைக்காரனையே பார்க்கிறாள். மீனா தான் வழமையாகப் பொருட்கள் வாங்கும் கடைக்காரரிடம் ஏதாவது கேட்டுப் பார்க்கலாம் என்ற முடிவோடு போகிறாள்" அண்ணா முதலாளி இல்லையா?"

"இல்லம்மா சாப்பிடப் போனாரு வர்ற நேரம்தான் இருங்க வந்திடுவார்"

ஏமாற்றத்துடன் திரும்புகிறாள்.

நேரம் நான்கு பதினைந்தாகிறது. ஏக்கம் பெருமூச்சு பயம் எல்லாம் ஒன்று சேர கைகால் நடுங்குகிறது. இந்த பஸ்ஸை விட்டால் வேறு பஸ்ஸும் இல்லை. தங்குவதற்கு நெருங்கிய உறவினரும் இல்லை. இடி விழுந்தது போல் தரிப்பிடத்தில் மீண்டும் அமர்கிறாள்.

"அம்மா அம்மா.."

"ஹ்ம்"

"இது நம்ம ஊருக்குத்தானே போகுது வாங்க ஏறிப் பார்ப்போம் நமக்குத் தெரிஞ்சவங்க இருந்தா நிலைமைய சொல்லுவோம்" மகளின் பேச்சு வெட்கம் தாண்டி அப்போதைய நிலைமைக்குப் பொருத்தமாக இருந்தது.

இருவரும் பஸ் நோக்கிப் போகின்றனர்.

" மன்னாரில் இருந்து பெரியமடு செல்லும் பேருந்து புறப்படத் தயாராகிறது"

பயமும் பதற்றமும் அதிகரிக்க பஸ்ஸில் ஏறிப் பார்க்கிறாள். தெரிந்த முகம் எதுவும் இல்லை. சரி கொண்டக்ரரிடமாவது நிலைமையைச் சொல்லலாம் என்றால் என்ன சொல்லுவாரோ ஏது சொல்லுவாரோ என்ற இரண்டு மனதோடு வேறு வழியில்லையென்று பஸ்ஸை விட்டு இறங்கி கொண்டக்ரர் அருகில் செல்கிறார்

"அண்ணா.."

"எங்கம்மா போகணும்? "

"பெரியமடு"

கொண்டக்ரரின் தொனி அவளின் நிலையை சொல்ல இடம் கொடுக்கவில்லை. பஸ்ஸின் படிகளில் கால் வைப்பதும் இறங்குவதுமாக இருக்கிறாள் மீனா.ரைவர் வந்து பஸ்ஸில் ஏறி ஸ்டார்ட் பண்ணுகிறார்.

மகளின் கைகளை இறுக்கிப் பிடித்தபடி பஸ்ஸில் இருந்து கீழே இறங்கி எங்கே செல்வதென்று தெரியாமல் இரண்டு எட்டு வைக்கிறாள்.

" முக்கிய அறிவித்தல் கறுப்பு நிற பெர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.." என்று

ஒலிபெருக்கி சொன்னதுதான் தாமதம் மீதி எதையுமே கேட்காமல் மகளை இழுத்துக் கொண்டு ஓடுகிறாள்.

அவளால் பேச முடியவில்லை ஓவென்று அழுதபடி கையில் பேர்ஸை வாங்கியபடி திரும்பிக் கொண்டு

" சேர் எப்புடி ...?"

"ஆ.. ஏதோ பஸ் வாசல்ல கெடந்துதாம் வடை விற்கிற ஒருத்தன் கொண்டு வந்து தந்தான்"

பஸ் ஹோர்ன் சத்தத்தோடு புறப்படுகிறது. பேர்ஸை சரியாகப் பார்க்கக் கூட இல்லை மகளோடு ஓட்டமும் நடையுமாக பஸ்ஸின் பின் வாசலில் ஏறுகிறாள்.

"வடை வடை வடை"

என்று கூவியபடி பார்க்கவே ஒருமாதிரியான அவன் முன் வாசலால் இறங்குகிறான். ஜன்னல் வழியே எட்டிப் பார்த்து எப்படி நன்றி சொல்வதென்று தெரியாமல் கண்ணீரோடு நிற்கிறாள் மீனா.அவனோ எதுவும் தெரியாதபடி பஸ்ஸில் தட்டிக் கொண்டு "போலாம் ரைட் ரைட் "என்று சொல்லிக் கொண்டு சிரிக்கிறான்.

"வடை விற்கிறது தொழில். குணம் இல்லை"

தரிப்பிடத்தைத் தாண்டி வேகத்தை அதிகரிக்கிறது பஸ். மகள் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே இருக்கிறாள். ■

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

# அக்கியூஸ் ஒப்பந்தமும்

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்த உறுப்புரிமை இல்லாத நிலையிலும், கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற பாதுகாப்புச் சபை அமர்வுக்கு இந்தியா தலைமை தாங்க அனுமதிக்கப்பட்டமைகூட அமெரிக்கத் தந்திரோபயமே என்பது கண்கூடு. ஏனெனில் இந்தோ பசுபிக் விவகாரத்தில் தனது மேலாண்மையை உறுதிப்படுத்தி இராணுவ மற்றும் பொருளாதார நலன்களைப் பலப்படுத்த வேண்டுமென்ற அமெரிக்கச் சிந்தனைக்கு இந்தியா அவசியம் தேவைப்படுகின்றது. இதற்காகவே தலிபான்களை பாகிஸ்தான் பயன்படுத்தி இந்தியா மீது தாக்குதல் நடத்தலாமென்ற அமெரிக்க எச்சரிக்கையும், இந்தியாவில் இருந்தே ட்ரோன் தாக்குதல்களை மேற்கொள்ளத் திட்டமிடும் உத்தியும் வகுக்கப்பட்டுள்ளதாகக் கூறலாம். ஆகவே அமெரிக்க நலனுக்காகவே இந்தியா பயன்படுத்தப்படுகின்றது.மாறாக, சீன இந்திய மோதலைத் தடுக்கவோ அல்லது இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சீனாவைவிட இந்தியாவைப் பலப்படுத்த வேண்டுமென்ற நோக்கிலோ அல்ல. இதனை அக்கியூஸ் ஒப்பந்தம் வெளிப்படுத்துகின்றது. ஆனால் இந்தோ பசுபிக் மற்றும் தென் சீனக் கடல் பகுதியில்கூட இந்தியா ஆதிக்கம் செலுத்தியிருக்கக்கூடிய புவிசார் அரசியல் போக்கு 2009 ஆம் ஆண்டுக்கு முன்னரான சூழலில் தாராளமாகவே இருந்தது. அப்போது ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டத் தை இல்லாமல் செய்யும் நோக்கில் இலங்கையும் இந்தியாவை நம்பியிருந்தது. 2009 இன் பின்னரான சூழலில் இந்தியாவைக் கடந்து அமெரிக்காவுடன் சமாந்தரமாக உறவைப் பேண வேண்டுமென்ற சிந்தனையை உருவாக்கிய சிங்கள ஆட்சியாளர்களுக்கு அமெரிக்கா எவ்வாறு இடமளித்ததோ, அதேபோன்றதொரு அந்தஸ்தை இந்தியாவைக் கடந்து பாகிஸ்தானுக்கும் அமெரிக்கா வழங்கக்கூடிய வாய்ப்புண்டு. ஏற்கனவே பாகிஸ்தானைக் கூட்டாளி நாடென அமெரிக்கா 2004 ஆம் ஆண்டு அறிவித்திருந்தது. சீனாவோடு நெருக்கம் அதிகரித்ததால் பாகிஸ்தானுடனான கூட்டாளி உறவை அமெரிக்கா பின்னர் துண்டித்துக் கொண்டது. ஆனாலும் அவ்வாறு துண்டிக்கப்பட்டமை குறித்து காங்கிரஸில் அமெரிக்கா இன்னமும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. ஆகவே எந்தநேரமும் முன்னெச்சரிக்கையோடு , அமெரிக்கா சொல்வதைக் கேட்கக்கூடிய நட்பு ஒன்றைப் பேண வேண்டிய ஆரோக்கியமற்ற சூழல் இந்தியாவுக்கு உண்டு.குவாட் அமைப்புக்குள் சேர்ந்து செயற்படுவதற்குரிய தகுதி இலங்கை இராணுவத்துக்கு இல்லை. ஆனாலும் ஒத்துழைப்பது குறித்த இணக்கப்பாடுகளை அமெரிக்கா, இலங்கையோடு பேசி வருகின்றது. ஆகவேதான் இலங்கையை முழுமையான கட்டுக்குள் கொண்டு வருவதன் மூலமே அமெரிக்கப் பிடியில் இருந்து விலகி இந்தியா சுயமாக இயங்க முடியுமென்பதைப் புதுடில்லி நன்கு அறியும். ஆனால் அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதைவிட ஈழத்தமிழர் பிரச்சினைகளை இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள்ளேயே தீர்த்துவிட இந்தியா முற்படுவது, புத்திசாலித்தனமல்ல. இந்தியாவின் இந்தப் பலவீனங்களே இலங்கையில் சீனா நிலையாகக் கால் ஊன்ற வழி சமைத்ததுடன் அமெரிக்காவும் இந்தியாவைப் பயன்படுத்தத் துணிந்ததென்றும் கூறலாம். எனவே அக்கியூஸ் ஒப்பந்தம் இந்தியாவுக்குப் படிப்பினைகளைக் கொடுக்கும் காலமிது. ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரமைந்து மாணவரே கலைபெருக்கி வாழியவே...





இரா.ஜெயக்குமார்

ம.பா. மகாலிங்கசிவம்

பாடசாலை மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆகிய மூன்று பரீட்சைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இவற்றுள் தரம் 5 மாணவரின் நிலை மிகக் கவலைக்கிடமானது. அறியாத , புரியாத வயதில் குருவித் தலையிற் பனங்காய் வைப்பது போன்று அளவுக்கதிகமான சுமை அவர்களின் மேற் சுமத்தப்படுகின்றது. அவர்களின் வயதுக்குரிய இயல்பான அனைத்து செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டுப் பந்தயக் குதிரைகளைப் போல வெற்றி என்ற திசையை நோக்கி செல்ல அழுத்தம் கொடுக்கப்படுகிறது. தனியார் கல்வி நிறுவனங்களின் போட்டி காரணமாக புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்படுத்தும் விசேட வகுப்புக்கள் 3 ஆம் வகுப்பின் இறுதித் தவணையிலேயே ஆரம்பமாகின்றன. படிப்படியாகச் செறிவுபடுத்தப்படும் இக்கற்றற் செயன்முறை 5ஆம் வகுப்பில் ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெறும் பரீட்சைக்கு முதல் நாள் வரை உச்ச நிலையை அடைகிறது. சீனா உடற்பயிற்சிப் போட்டிகளில் அதிக தங்கப் பெறக் காரணம் சீனச் சிறுவர்களை ஐந்து வயதிலேயே பொறுப்பெடுத்து கடுமையான உடற்பயிற்சிகளை வழங்குவதுதான் என்று கூறப்படுகிறது. இத்தகைய உடற்பயிற்சிகளை மிக மோசமான உடலியல் ரீதியான சித்திரவதைகள் என்று மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன. ஆனால் இலங்கைச் சிறார்கள் மேல் புலமைப்பரிசில் பரீட்சைத் தயார்ப்படுத்தல் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் மிகமோசமான உளவியல் ரீதியான சித்திரவதைகள் பற்றி எவருமே வாய் திறப்பதில்லை. இவ்விடயத்தைக் கருப்பொருளாகக் கொண்டு இரா. ஜெயக்குமாரால் எழுதப்பட்ட தரமைந்து மாணவரே கலைபெருக்கி வாழியவே என்ற கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகிறது.

குப்பிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட இரா.ஜெயக்குமார், கவிதைத் துறையில் நீண்டகாலமாக ஈடுபட்டு வருபவர். ஆசிரியர், அதிபர், ஊடகவியலாளர் எனப் பல தளங்களில் இயங்கி வருபவர் இன்றைய உலகம் என்ற பொதுஅறிவு நூல் கண்மணி என்ற மாதசஞ்சிகை என்பவற்றை வெளியிட்டவர். அவரது அனுபவங்களும் அனுமானங்களும் என்ற கவிதை நூலில் இடம்பெற்றதே தரமைந்து மாணவரே! கலைபெருக்கி வாழியவே என்ற கவிதை ஆகும்.


**வேள்விக்குத் தயாரான**
**வெள்ளைப் புறாக்களே...** எனத் தொடங்கும் கவிதை பரீட்சை என்ற வேள்விக்குத் தயாராகும் வெள்ளைப் புறாக்களாக மாணவரை உருவகிக்கிறது. மாணவர்கள் பரீட்சையைத் தமக்காக எழுதவில்லை. பெற்ற கடன் தீர்த்துப் பெற்றோரின் பெயரைக் காக்கவும் கற்பித்த ஆசிரியருக்கும் புகழ் சேர்க்கவும் வருகின்ற விளைச்சல்களைக் காட்டித் தரம் ஒன்றிலே மாணவரை ஈர்ப்பதற்குத் தமது பாடசாலைக்கு உதவவும் வலயத்தின் பெறுபேற்றை வளமாக்கவுமே அவர் தம்மைத்தாம் மெழுகுகளாக உருக்கிக் கொள்கின்றனர் என்ற யதார்த்தம் இங்கு வெளிப்படுத்தப் படுகிறது.

என்னும் பகுதி மாணவருக்குச் சுகமாகவும் சுவையாகவும் அமைய வேண்டிய பாடப்பகுதிகள் சுமையாகிச் சிலுவை சுமக்கும் துயராக மாறிவிட்டதாகக் கவிஞர் கற்பிதம் செய்கின்றார். மனுக்குல மீட்சிக்காகச் சிலுவை சுமந்தார் யேசுநாதர். இந்த மாணவரோ முன்னர் கூறப்பட்ட பெற்றோர், ஆசிரியர், பாடசாலை, வலயம் போன்ற பலரின் மீட்சிக்காகச் சிலுவை சுமக்க வேண்டிய நிலையிலுள்ளமை இங்கு வெளிப்படுத்தப்படுகிறது.

கற்பதற்காகவும் நேரத்துக்குப் பாடசாலை, தனியார், கல்வி நிலையம் என்பவற்றுக்குச் செல்வதற்காகவும் பெற்றோர் அவசரப்படுத்துவதால் மாணவரின் உணவோ உண்டது பாதி, கண்டது மீதியாய் உள்ளது.

கவிதையில் இடம்பெறும் 'அம்மாப் பரீட்சை' என்ற தொடர் மிகவும் முக்கியமானதாகும். அப்பாக்களை விட அம்மாக்களே பிள்ளைகளில் அதிக அக்கறை காட்டுவது மட்டுமன்றி எந்தநேரமும் புத்தகமும் கையுமாக இருக்குமாறு 'ஆக்கினை' கொடுப்பவர்களாகவும் இருக்கின்றனர்.

இவ்வளவோடு அம்மாக்களின் பணி முடிந்து விடுவதில்லை. 'சூட்டிபெப்' பழகிப் பிள்ளை களைக் கல்வி நிலையங்களுக்கு ஏற்றி இறக்குவது, எங்கே எத்தனையாம் திகதி பரீட்சை என்ற நேரசூசியை மனப்பாடம் செய்து கொண்டு மாணவரை இருத்தி எழுப்புவது, புள்ளியிடப்பட்ட விடைத்தாள்கள் வழங்கும்போது தனது பிள்ளையை விட்டுப் பக்கத்து விட்டுப் பிள்ளையின் விடைத்தாளை முதலில் பட்டியலிடுவது அந்தப் பிள்ளையை விடத் தமது பிள்ளைக்கு எத்தகைய வசதிகளைச் செய்திருக்கிறோம் என்று பட்டியலிடுவது ஏன்? பரீட்சையில் தோல்வியடைந்தால் கடுமையான தண்டனை வழங்குவது என்று பல கடமைகளை அம்மாமார் பொறுப்பெடுத்திருப்பதால்தான் கவிஞர் இதனை அம்மாப் பரீட்சை என்று கூறினார்.



இவ்வளவோடு மாணவரின் தொந்தரவுகள் முடிவடையவில்லை. எமது வங்கியில் இவ்வளவு பணத்துக்கு மேல் இவ்வளவு மாதங்கள் வைப்பிலிருந்தால் தேசிய மட்டத்தில் அதிக புள்ளிகள் கிடைக்கும் போது இவ்வளவு பணத்தை அன்பளிப்பாகத் தருவோம் என்று கணக்குத் தொடங்க வீடு வீடாக வரும் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் ஒருபுறம். பரீட்சையில் சித்திபெற்றவுடன் 5ஆம் வகுப்பு மாணவனுக்குப் பட்டமளிப்பு தொப்பி போட்டு விளம்பரங்கள் மூலம் பணம் சேர்க்கும் ஊடகங்கள். விறுவிறுப்பாக இரவிரவாக வகுப்பு நடத்திப் பணம் சேர்க்கும் ஆசிரியர்கள் என்று மாணவர்களுக்குப் பின்னால் எத்தனையோ பேர் காத்துள்ளனர்.

பரீட்சை முடிந்ததால் இனிக் கலைத்துறையில் ஈடுபட்டுக் கலை பெருக்கி வாழியவே என்று கவிஞர் கவிதையை நிறைவு செய்கிறார். நான்காம் ஐந்தாம் வகுப்புக்களில் பெருந்தொகையான விடயங்களைத் திணித்து விரிபுபடுத்திய மாணவரின் மூளையைத் தொடர்ந்து அதே வேகத்தில் விரிவுபடுத்த ஆறாம், ஏழாம், எட்டாம் வகுப்புக்களில் போதிய பாடத்திட்டங்களோ உரிய வழிகாட்டல்களோ இல்லாததால்தான் கவிஞர் மாணவர்களைக் கலைப் பக்கம் திரும்புமாறு கேட்கிறாரோ?

*வேள்விக்குத் தயாரான*
*வெள்ளைப் புறாக்களே*
*பெற்ற கடன் தீர்க்க*
*பெற்றோர் 'பேர்' காக்க*
*ஆசிரியர் தம்மை*
*அவனியிலே நிலை நிறுத்த*
*தரமொன்று மாணவரைத்*
*தாவிப் பிடித்திடவே*
*பள்ளிகளுக்கும் பற்றுக்கோடாக*
*வலயத் தரத்தை வளமாக்கும்*
*வாய்ப்பாக...*
*உங்கள்ளயே 'தொலைத்து'*
*உருகும் மெழுகுகளே...*

*வருகிறது பார்! பார்! என்று*
*வந்தவர்கள் எச்சரிக்க...*
*நில்லாதே செல்! செல்! என்று*
*உம் வீட்டார் நச்சரிக்க*
*கடுப்புக்களைச் சுமந்தபடி*
*கால்கடுக்க விரைகின்றீர்*
*புத்தகச் சிலுவைகளைப்*
*பூமியிலே தினம் சுமந்து*
*ஓடியோடியே ஓய்வின்றிப் படித்து..*

***மூச்சு விடவும் நேரமின்றியே***
***உண்டது பாதி; கண்டது மீதியாய்***
***'அம்மாப் பரீட்சைக்கு'***
***ஆயத்தமாகின்றீர்***

*எத்தனை வினாத்தாள்கள்*
*எழுதிக் களைத்திருப்பீர்?*
*எத்தனை வளவாளர்*
*வழிகாட்டல் வகுப்பெடுத்தார்?*
*வங்கியாளர்களும் வலைவீசி வந்தாரே*
*காப்புறுதிக் காரர்களும்*
*காத்திருந்து வந்தாரே*

*பத்திரிகையாளர்களும்*
*பலபணிகள் செய்தாரே*
*உம் பெறுபேற்றைப் பெரிதாக்கி*
*புறொஜெக்டரில் புடமிட்டு*
*'வலயத்தார்' வாழ்த்துவதால்*
*அதிபர்களும் அழுத்தத்தில்*
*விடுமுறையெல்லாம்*
*தொடர்கதையாக*
*விறுவிறுப்பாகும் வகுப்புக்களும்*
*இரவு வகுப்புகளும்- இங்கு*
*இரகசியமாய் தொடர்கிறதே*

*பரீட்சை முடிந்ததா?*
*படிப்பெல்லாம் முடிந்தது*
*அத்தனை பெற்றோரின்*
*அருங்கடமை ஒழிந்தது*
*ஆட்டிப் படைத்திட்ட*
***ஆக்கினைகள் கழிந்தன***
***வலையறுத்த பறவைகளாய்- இனி***
***கலை பெருக்கி வாழியவே***

**புத்தகச் சிலுவைகளைப்**
**பூமியிலே தினம் சுமந்து**
**ஓடியாடியே ஓய்வின்றிப் படித்து**
**மூச்சுவிடவும் நேரமின்றியே**
**உண்டது பாதி, கண்டது மீதியாய்**
**'அம்மாப் பரீட்சைக்கு'**
**ஆயத்தமாகின்றீர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவை இன்னொரு ரணதுங்க!

○ அபியூத்

இலங்கை கிரிக்கெட்டுக்கு இப்போதைக்குத் தேவைப் படுவது என்னவோ அடுத்த சங்கக்காரவோ அடுத்த மகேலவோ, அடுத்த டில்சானோ கிடையாது. அடுத்த அர்ஜுனா ரணதுங்கதான். அவர் போல ஒருவர் உருவெடுத்து விட்டால் பல ஜெயசூர் யாக்களையும், அரவிந்த டி சில்வாக்களையும் உருவாக்கி இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா என்று அனைத்து கிரிக்கெட் அரங்குகளிலுமே மீண்டும் நம் கொடி பறக்கத் தொடங்கும்.

ஏன் இலங்கை கிரிக்கெட் 90களுக்கு முன்பிருந்த நிலைமைக்குச் சென்று விட்டது? ஆரம்பத்திலிருந்து முழுமையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். 'கட்டி ஆண்ட ஜெயசூர்யா பரம்பரையா இது?" என்று நம்ப முடியவில்லை. கத்துக்குட்டிக் கூட்டமாக உருமாறி தவிக்கின்றது'. சொந்த மண்ணில்கூட பெரிய தடுமாற்றத்தை வெளிப்படுத்துகிறார்கள். ஒற்றை இலக்க ஓட்டங்களைத் தாண்டுவதையே மிகப்பெரிய சாதனைகளாகவே பார்க்கிறார்கள் இலங்கை துடுப்பாட்ட வீரர்கள்.

## எமக்குத் தேவையான மாற்றம்

பயிற்றுவிப்பாளர் தொடக்கம் துடுப்பாட்ட வரிசை வரை முழுமையான மாற்றம் தேவை. அத்தனையும் மாற்றி திறமை, அர்ப்பணிப்புடன் கூடிய தேசப்பற்றாளர்களை மட்டுமே கிரிக்கெட்டில் அனுமதித்து கனவான் விளையாட்டைத் தரக்கூடிய ரணதுங்கா போன்ற ஒரு வீரனைத் தான் தேடிக் கொண்டிருக்கிறோம்.

90களுக்கு முன்பு என்னவென்றே தெரியாமலிருந்த இலங்கை கிரிக்கெட்டை மாற்றியமைக்க ரணதுங்கா செய்த மாற்றங்களும், சீர்திருத்தங்களும் அனைவரும் அறிந்த ஒன்று. அவ்வாறு ஒரு தலைமைத்துவத்துக்குள் அணியை கொண்டு வந்தால் மட்டுமே மீண்டும் இலங்கை கிரிக்கெட்டை உச்சத்துக்குக் கொண்டு செல்ல முடியும்.

தென்னாபிரிக்கா மண்ணில் குசல் பெரேராவின் சாகசத்தால் வென்ற வரலாற்று வெற்றித் தொடரினைத் தவிர 2015 - 2021க்கு இடைப்பட்ட காலத்தைப் பொறுத்தவரை எழுதப்படுவதற்கு வேறு எந்த வரலாறும் கிடையாது.

இப்படியாக பலவீனமாகச் சென்றுகொண்டிருந்த இலங்கை அணிக்குள் தற்போது ஒரு பலம், நம்பிக்கை ஊடுருவி இருக்கின்றது. அந்தப் பலத்தால்தான் இலங்கை அணி இன்று கொஞ்சமென்றாலும் தலையெடுக்க முனைப்புக் கொள்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதுதான் பந்துவீச்சு வரிசை.

அதாவது 2021ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஓரளவு மீண்டு வந்தது போல ஒருசில வெற்றிகளை இலங்கை அணி கண்டிருந்தது. இந்திய அணிக்கெதிரான ரி-20 தொடர் வெற்றி, தென்னாபிரிக்கா அணியுடனான ஒரு நாள் தொடர் கைப்பற்றல் என்று சின்னச் சின்ன வெற்றிகள். அந்த வெற்றிகளெல்லாம் முழுக்க முழுக்க பந்துவீச்சு வரிசையால் உடைத்தெடுக்கப்பட்ட வெற்றிகளாகவே இருந்தன. துஷ்மந்த சமீர, வனிந்து ஹசரங்க, சாமிக கருணாரட்ன போன்றவர்களது பந்துவீச்சுக்கள்தான் இங்கு போட்டிகளை முழுமையாக எம் பக்கம் மாற்றி, வெற்றிப்பக்கம் நகர வைத்திருந்தன.



இலங்கை அணிக்குள், துடுப்புக் களை மிரள வைக்கும் நியூசிலாந்தின் ஜேமிசன் போல்ட் என்ற அசுரப் பந்துவீச்சு ஜோடி கிடையாது. அனுபவமும் வேகமும், விவேகமும் கலந்து தசாப்தமாக ஆட்சி செய்யும் அண்டர்சன் புரோட் போன்ற பட்டாளமும் கிடையாது எம்மிடம்.

நாலு பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசினால் நாற்பது, ஐம்பது ஓட்டங்களை விட்டுக்கொடுத்து சர்வதேசத்திலிருந்து ஓரங்கட்டப்பட்ட வண்டிதான் இந்த துஷ்மந்த சமீர. ஆனால் இன்றைய நாள் வெற்றிகளில் முக்கால்வாசி பங்கு அவரால்தான் கட்டப்படுகின்றது. வெள்ளைப் பந்து போட்டிகளைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாத பந்துவீச்சாளனாக மாறிவிட்டார். 2015ஆம் ஆண்டு பந்துப்பரிமாற்றத்துக்குச் சராசரியாக 11 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தவர் சமீர. இந்த வருடத்தில் அவரின் விட்டுக்கொடுப்புச் சராசரி 6.17 மட்டுமே.

இந்த முன்னேற்றம் எப்படிச் சாத்தியமானது?. 90களிலும், 2000களின் ஆரம்பங்களிலும் ஆஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான் என்று அத்தனை துடுப்பாட்ட வரிசைகளையும் அசைத்துப் போட்ட பந்துவீச்சு இமயம் சமிந்த வாஸ்தான் பந்துவீச்சு துறையை இப்போது பார்த்துக் கொள்கிறார்.

எந்தளவுப் பெரிய நுட்பங்களைக் கொண்ட பயிற்றுவிப்பாளராகவும் இருக்கலாம், அந்தத் நுட்பங்களோடு இணைந்து நாட்டு நேசமும் அர்ப்பணிக்கப்படும்போது அதனுடைய பெறுபேறுகள் ஆயிரம் மடங்குகளாக இருக்கும். கங்குலி தலைமையிலான கிரிக்கெட் சபை, ஆலோசகராக சச்சின் டெண்டுல்கர், இளம் வீரர்களது பயிற்றுவிப்பாளராக ராகுல் ராவிட் என்று இந்தியாவின் கிரிக்கெட் எந்தளவுக்கு வெற்றிகரமாகப் பயணிக்கின்றது என்பதுதான் இந்த உண்மைக்கான மிகச்சிறந்த உதாரணம். அதைத்தான் சமிந்த வாஸ் இங்கு செய்து கொண்டிருக்கிறார். சமீரவை எந்தளவுக்கு சமிந்த வாஸ் செதுக்கி எடுத்திருக்கிறார் என்பதனை மிகத் தெளிவாக கட்டியம் சொல்கின்றது மேலே சொல்லப்பட்டுள்ள தரவு. அவருக்கு இணையாக பினுர பெர்னான்டோ என்ற இடதுகை பந்துவீச்சாளரும் உருவாக்கப்படுகிறார்.

இவ்வாறு பந்துவீச்சாளர்கள் கைகொடுத்த போதிலும் துடுப்பாட்ட வரிசை படுமோசமாகக் காணப்படுகின்றது. சிறந்த தெரிவுகளை ஆடக்கூடிய அவிஷ்க பெர்னான்டோ, தனஞ்சய டி சில்வா போன்ற வீரர்களும் தடுமாறுகிறார்கள். அதாவது துடுப்பாட்ட வரிசையைப் பொறுத்தவரை ஒரு சரியான வழிகாட்டி கிடையாது, சிறந்த ஆலோசகர்கள் கிடையாது அணிக்கு ஒரு முகாமைத்துவம் கிடையாது.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் மட்டும் ஆடுகின்ற துடுப்பாட்ட வீரர்களை ரி-20 போட்டிகள் பக்கம் கொண்டு வருகிறார்கள். வெள்ளைப்பந்து போட்டிகளின் சிறப்பாட்டக்காரர்களான ஹசரங்க, சானக போன்றவர்களை டெஸ்ட் போட்டிகளின் பக்கம் கொண்டு செல்கிறார்கள்.

பல்வேறு துடுப்பாட்ட களங்களில் சாதித்த சங்கக்கார என்ற ஜாம்பவான் இருக்கிறார், தலைமைத்துவத்தின் மூலம் பல தூரம் சென்ற மகேல ஜெயவர்த்தன இருக்கிறார். சுழற்பந்து வீச்சாளர்களை வளப்படுத்தக் கூடிய முரளிதரன் இருக்கிறார். அவர்களையெல்லாம் வைத்துக் கொண்டு இலங்கை கிரிக்கெட் சபை ஏன் இன்னமும் அவர்களை அழைக்கவில்லை? பயன்படுத்தவில்லை? என்ற கேள்விகளுக்கான பதில் இல்லை.

ராஜஸ்தான் ரோயல்ஸ், மும்பை இந்தியன்ஸ், சண் ரைசர்ஸ் போன்ற பிரபல கிரிக்கெட் கழகங்களெல்லாம் அந்த வளங்களை சிறப்பாகப் பயன்படுத்துகின்றன. ஹேரத் என்ற சுழல் ஜாம்பவானை வைத்து வங்கப்புலிகளின் சுழற்பந்து வீச்சாளர்கள் எவ்வளவு மேலே சென்று கொண்டிருக்கிறார்கள்.

அதனைவிட பிரதானமாக ஒரு விடயம் இருக்கிறது. தொழிநுட்ப யுகம் இது. இப்போதும் புராணக் கிரிக்கெட் நுட்பங்களையும், திறமையையும் வைத்து ஒரேநாளில் ஒபாமா ஆகிவிட முடியாது. பந்துவீச்சாளர்களின் வியூக ஆய்வுகள், துடுப்பாட்ட வீரர்கள் பலம், பலவீனங்கள் ஆய்வு செய்து கொள்ள வேண்டும். அதற்கென்று முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆனால் இலங்கை அணி அதனைச் செய்வதாகத் தெரியவில்லை. இந்த மாற்றம் எப்போது சாத்தியமாகின்றதோ அப்போது இலங்கை மீண்டெழும். அது மீண்டும் ஓர் அதிசயத்துக்கு வித்திடும். ■



நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி

உதயன் சஞ்சீவி
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தகை லொஹான் ரத்வத்தைக்கு...!



## அவசரமா ஒரு கடுதாசி

இப்ப நீங்கள் செய்திருக்கிற காரியம் ஒண்டும் புதுசில்லைக் கண்டியளோ! சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியா இருந்த காலத்திலை தொடங்கின உங்கட குடும்ப ரௌடித்தனத்தை இன்னும் காவிக்கொண்டு திரியிறியள் எண்டது நல்லா விளங்குது. அந்தக் காலத்திலை உங்கடை அப்பா பிரதிப் பாதுகாப்பு அமைச்சரா இருந்தவர். அப்ப அவர் பவரிலை இருந்ததாலை நீங்கள் செய்த எல்லாத்தையும் சடைஞ்சுபோட்டியள். கண்டியில 10 முஸ்லிம் பெடியளை கொலை செய்த கேஸ் வலு பேமஸ். அது தவிர இன்னும் எத்தினையோ கதை இருக்கு. அது மட்டுமில்லை அப்ப இரவிராவாய் கொழும்பிலை உள்ள கசினோக்களுக்கை நிண்டு கொண்டு நீங்கள் செய்த அட்டகாசத்தைச் சொல்ல ஏலுமோ. எத்தினைபேருக்குத் தண்ணி காட்டியிருப்பியள்? அத்தனையையும் எழுதத் துவங்கினால் பல அத்தியாயங்களாக எழுதலாம்.

ஒரு மன நோயாளிதான் மற்றவையைக் கொண்டு நாக்காலை சப்பாத்தை நக்கப் பார்ப்பம் எண்டு நினைப்பன். முழங்காலிலை இருந்து மூக்காலை நிலத்தைத் தேய் எண்டோ, அம்மணமாக நில் எண்டோ சொல்லுவான். அது மாதிரித்தான் நீங்கள் செய்திருக்கிறியள் எண்டதைப் பேப்பரைப் பாக்க விளங்கிது. நாலைஞ்சு நாளாய் பேப்பர்ச் செய்தியளைப் பாத்தால் இன்னும் நீங்கள் திருந்தேல்லை எண்டதும் ,இனியும் திருந்த மாட்டியள் எண்டதும் நல்லாத் தெரியுது. இதெல்லாம் நீங்கள் செய்யேக்கை நீங்கள் சுய நினைவா இல்லையாம். அதோடை கக்கத்துக்கை ஒரு கிளிக்குஞ்சையும் வைச்சிருந்தனியளாம்.



செய்யிறதைச் செய்து போட்டுப் பதவியிலை இருந்து விலகி நல்ல பிள்ளை எண்டும் காட்ட வெளிக்கிடுறியள். அதோடை பதவியைத் துறக்கிறன் எண்டால் குற்றத்தை ஒப்புக்கொண்டு போறன் எண்டு தானே அர்த்தம். ஆளை விலக்குங்கோ எண்டு சனம் கெம்பி எழும்ப முன்னம் நீங்களாப் போறன் எண்டு முடிவெடுத்ததிலை கோத்தாக்குக் கொஞ்சம் தலை இடியைக் குறைச்சிருக்கிறியள். இல்லாட்டிச் சனத்துக்குத் தான் கரைச்சல். இந்தக் கொரோனாக் காலத்திலையும் தலையிலை துண்டைப் போட்டுக் கொண்டு நடு றோட்டிலை நிண்டு நீதி கேக்கிறதெண்டால்..???

நான் அப்பிடி ஒண்டும் செய்யேல்லை. மீடியாக்காரர் பொய் சொல்லினம் எண்டு நீங்கள் சொல்லுறியள். ஆனால் யுத்த வீரன் எண்டு சொல்லுற எம்.பி சரத்பொன்சேகா என்ன சொல்லுறார் எண்டு தெரியுமோ?

"பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த மாத்தையாவோடை நான் ஒண்டா வேலை செய்தனான். அவற்றை மகன் எண்டு இவரைச் சொல்லேலாது. அவர் என்ன டீசன்ரானவர். அவருக்கு இவர் கெட்டபேர் வேண்டிக் குடுப்பார் போலை கிடக்கு. விடுதலைப் புலிகளுக்குப் பயந்து எங்கையோ ஓடிப்போய் ஒளிச்சிருந்தவர் இப்ப வந்து நாட்டாமை காட்டுறார்.பதினைஞ்சு வருசமாச் சிறைக்குள்ளை இருக்கிற அப்பாவியளைப் போய் இந்தாள் இப்பிடிச் செய்திருக்கே எண்டு நினைக்க வயிறு எரியிது. இது ஒரு மனுசன் செய்யிற வேலையோ? ஒரு மனுசன் . அதுவும் தைரியமானவன் இப்பிடிச் செய்ய மாட்டான். என்னைப் பொறுத்தரை இப்பிடியான ஆக்கள் கோழையள். நான் சிறைக் கைதியளைப் பாத்து ஒரு புத்திமதி சொல்லுறன். இனிமேல் இப்பிடியானவை ஆரும் சிறைக்குள்ளை வந்து சண்டித்தனம் செய்தால் நீங்கள் எல்லாரும் சேந்து அவையின்ரை கையைக் கால உடையுங்கோ. ஆர் எவர் எண்டு பாராதையுங்கோ. மிச்சத்தைப் பாப்பம்." எண்டெல்லோ பொன்சேகா பொங்கியிருக்கிறார். ஆனால் இப்ப ஜெனீவாக் கூட்டத் தொடர் நடக்கிற நேரத்திலை நீங்கள் செய்த இந்த வேலையை வைச்சு அரசியல்வாதியள் வெவ்வேறு விதமாக் கதைக்கினம். ஒருபக்கம் கோத்தாவுக்குக் கெட்டபேரை வேண்டிக் குடுக்கத்தான் ஆரோ உங்களை ஏவிவிட்டவை எண்டு சொல்லினம். மற்றப் பக்கம் உங்களை ஏவிவிட்டு இதைச் செய்து போட்டு நாமலை விட்டு சமாதானம் பேசி ஆக்களை வெளியிலை விட்டு நல்ல பேரைக் கோத்தாக்கு ஏற்படுத்திறதுக்குத்தான் இந்த நாடகமாம். அரசியல் கைதியளை வெளியாலை விடுகிற தீர்மானத்தை எப்பவோ எடுத்தாச்சாம். ஆனால் அதையும் ஒரு அரசியல் இலாபத்தோடை விட்டால் நல்லதெல்லே...? எப்பவும் அரசாங்கத்துக்குள்ளை ஒரு ஜோக்கர் இருப்பர். இப்ப அந்த ஜோக்கர் நீங்கள் தான் போல.

இப்படிக்கு,
அப்பாவி அன்னமுத்து

# நந்தினி சேவியர்:

## கொள்கை மாறாத கலைத்துவம் மிக்க படைப்பாளி



○ அன்பினி

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நந்தினிசேவியர் 16.09.2021அன்று மறைந்துவிட்டார். உண்மையில் படைப்பாளிகள் இறந்துவிட்டார்கள் என்ற உணர்வு தோன்றுவதில்லை. அவர்களின் இயக்கம் நின்றுவிடுகின்றது என்பதுதான் உண்மை. அவர்களின் படைப்புகள் மூலமாக அவர்கள் இன்னும் இன்னும் ஆழமான உரையாடல்களை எங்களுடன் நிகழ்த்த ஆரம்பிக்கின்றார்கள். இந்த உலகத்துடன் அவர்கள் தொடர்ந்து பிணைக்கப் பட்டுக்கொண்டே இருப்பார்கள்.

தே.சேவியர் என்ற இயற்பெயரை உடைய இவர் 1967 இல் சுதந்திரன் பத்திரிகையில் எழுதிய பாரம் என்ற சிறுகதை மூலமாக இலக்கிய உலகுக்கு நுழைந்தார். அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்(1993), நெல்லிமரப் பள்ளிக்கூடம்( 2011) நந்தினிசேவியர் படைப்புகள்(2014) ஆகிய சிறுகதைத்தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. அண்மைக் காலமாக' பிடித்த சிறுகதை' என்ற தொடரை எழுதிவந்தார். வேறுபாடு பார்க்காமல் படைப்பாளிகளின் படைப்புகளுக்கு முதன்மைகொடுத்து பலரை அறிமுகப்படுத்தினார். அதன் முதலாவது பகுதி கொடகே வெளியீடாக வந்திருந்தது.(2019) அடுத்த தொகுதிகளையும் வெளியிடும் ஆர்வமும் கொண்டிருந்தார்.

இறப்பதற்கு ஒருவாரம் முன்பு வரை எழுதிக்கொண்டே இருந்தார்.

மார்க்சியத் தளத்தில் நின்று இயங்கிய ஒரு முற்போக்குப் படைப்பாளியாக விளங்கினார். ஆயினும் தனது படைப்புகளை சுலோகத்தைப் போலவோ சுவரொட்டியைப் போலவோ பிரசாரமாக்காமல் அவற்றைக் கலைத்துவம் மிக்கதாக வெளிக்கொணர்ந்தார். இதனைத்தான் ரவிக்குமார் அவர்கள் குரலை உயர்த்தாமலேயே கொதிப்பை வாசகனுக்குக் கடத்தமுடியும் என நிரூபிப்பவை இவரது சிறுகதைகள் என்று குறிப்பிட்டுள்ளார். இதே போலவே பேராசிரியர் செ.யோகராசாவும். " ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி ஓட்டம் பற்றிக் கவனிக்கும் ஒருவர் ஈழத்து முற்போக்கு அணிசார்ந்த எழுத்தாளர்கள் பலரும் பிரசாரப் பண்பு, வாய்ப்பாட்டுத்தன்மை. உருவம் அமைதி பேணப்படாமை என்ற பண்புகள் பெற்றமைந்திருப்பதை அவதானித்திருப்பர். மாறாக அதே முற்போக்கு அணிசார்ந்த நந்தினி சேவியரது சிறுகதைகள் கலாபூர்வமான சிறுகதைகளாகத் திகழ்ந்திருப்பதைக் கண்டிருப்பர் "என்று குறிப்பிடுகின்றார்.

தான் சார்ந்த கொள்கைக்காக தொடர்ந்து சிந்தித்தவர். தனது காலத்தில் தான்கண்டவற்றை, அறிந்தவற்றை சிறந்த நினைவாற்றலுடன் எழுதியும் பேசியும் வந்தவர். இலண்டனில் இருந்து வெளிவரும் சிறுகதை மஞ்சரி இதழுக்காக தனது எழுத்து அனுபவங்களை (30 பாகங்கள்) முழுமையாக எழுதி அனுப்பியுள்ளார். அவை ஈழத்து இலக்கியத்தின் அவரது சாட்சியமாகப் பதிவாகும் என நம்பலாம். கருத்து ரீதியான எதிர்வினைகளை ஆற்றக் கூடிய வாசிப்பும் பதிலை நேரேயே சொல்லக் கூடிய நேர்மையும் துணிவும் சேவியருக்கு இயல்பாகவே வாய்த்திருந்தது. அவரது சிறுகதைகள், நாவல்கள் மட்டுமல்ல அவரது அனுபவங்களும் குறிப்புகளும் ஒரு காலகட்டத்தின் வரலாற்றின் சாட்சியங்களாக எம்முடன் நிலைக்கக்கூடியன . நேத்ரா தொலைக்காட்சியில் தன்னைப் பற்றியும் தன் எழுத்துகள் பற்றியும் இவர் அறிமுகப்படுத்திய விதம் இவரது எண்ணங்கள் எங்கே எவ்வாறு உயிர்த்திருக்கின்றன என்பதை வெளிப்படுத்துகின்றது. (2007)

"சுற்றிவர ...ஒளிரும் மின் விளக்குகள் ...குசன் போடப்பட்ட மிருதுவான கதிரைகள்... குளிர்சாதனம் பொருத்தப்பட்ட ஒளிப்பதிவுக் கூடத்தில் ஒளிப்பதிவுக் கமரா .உடலில் மறைவாகப் பொருத்தப்பட்டிருக்கும் ஒலிவாங்கி, இப்படியாக ..ஒரு முப்பது நிமிடங்கள் உட்கார்ந்து ..சந்தோசமாக உங்களோடு உரையாடுகிறேன்.....இது முடிந்து வெளியில் வந்ததும்...பெரும் வீதியின் ..ஒரு கரையில் ...தனது கரத்தையில்(தள்ளு வண்டியில்) உட்கார்ந்தபடி.பார்சல் சோற்றினை விரித்து உண்ணும் ஒரு தொழிலாளித் தோழன்...... ஒரு சாதாரண மனிதன்....என்முகத்தில் ஓங்கி அறைகிறான்....இடுப்பில் இருக்கும் குழந்தையுடன் ..கையில் பிடித்திருக்கும் ஒரு சிறுமியுடன் பிச்சைக்காக கை நீட்டும் ஒரு ஏழைத் தாயை நான் எதிர்கொள்கிறேன்...இப்படி பலகாட்சிகள். பல மனிதர்கள், இவர்களை விட்டுவிட்டு என்னால் எழுதவோ , பேசவோ.... முடியாது... அரிதாரம் பூசி உட்கார்ந்திருக்கிறேன்...இது வெறும் பொய்மை ...சூழலின் யதார்த்தம் வேறாக இருக்கிறது.. இதை விட்டு என்னால் நகர முடியவில்லை....இவர்களில் ஒரு அங்கமே நான். இதைத் தவிர .வேறு எதை நான் உங்களுக்குக் கூறப்போகிறேன்."

மேகங்கள், கடற்கரையில் தென்னைகளும் நிற்கின்றன ஆகிய நாவல்களையும் ஒரு வயதுபோன மனிதரின் வாரிசுகள், தெளிவு பிறக்கிறது ஆகிய குறுநாவல்களையும் எழுதியுள்ளார். நாவல்கள் நூலுருப்பெறும்போதே சேவியரின் இன்னொரு ஆளுமையை நாம் தெரிந்துகொள்ளமுடியும். அவரின் எழுத்து அனுபவங்கள், பிடித்த சிறுகதை வெளிவராத பகுதிகளும் நூலுருப்பெறவேண்டும். புனைவு, அபுனைவு என்ற தளங்களில் தீவிரமாக இயங்கிய ஒரு படைப்பாளியை எழுத்துகளில் நீள வாழவைக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. ஆழ்ந்த இரங்கலைச் சொல்வதை அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்றே தோன்றுகின்றது. அவர் படைப்புகளை பதிப்பிப்போம், வாசிப்போம் உரையாடுவோம். மக்களுக்காக சிந்தித்த, போராடிய படைப்பாளியை மக்கள் மனங்களில் வாழவைப்போம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.ரா: நினைவுகள்

முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.



**பேராசிரியர் அ.ராமசாமி**
*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*

புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு அழைக்கப்பட்ட போது கி.ராஜநாராயணனுக்கு அளிக்கப்பட்ட பணி 'நாட்டுப்புறவியலில் ஆய்வு செய்யவேண்டும்' என்பதற்காகவே. அவரை அழைக்கும் முடிவை எடுத்தவர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் முனைவர் கி.வேங்கடசுப்பிரமணியம். துணைவேந்தராவதற்கு முன்பு கோவில்பட்டிக் கல்வி மாவட்டத்தில் பள்ளிக்கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய போது கி.ரா.வுக்குப் பழக்க மானவர்.




சிறுகதையாளராக, நாவலாசிரியராக, வட்டார வழக்குச் சொல்லகராதி தயாரித்து மொழிக்குப் பங்களிப்புச் செய்தவராக அறியப்பட்டிருந்த கி.ரா.வை 'நாட்டுப்புறவியலில் ஆய்வு' செய்ய வேண்டும் என அழைத்தது பல்கலைக்கழகம்.

அப்படி அழைத்ததற்கும் ஒரு காரணம் உண்டு. தமிழ்நாட்டுப் புறவியல் ஆய்வுக்கு முன்னோடியாக வேலை செய்திருந்தவர் பேரா.நா.வானமா மலை. தமிழக நாட்டுப்புறப் பாடல்கள் என்ற பெருந்தொகையான பாடல்களைத் தொகுத்து வகை பிரித்து வெளியிட்டவர். காதல் பாடல்கள், தொழிற்களப் பாடல்கள், சடங்குப் பாடல்கள் எனப் பலவற்றைத் தொகுத்து ஏற்கெனவே வெளியிட்டிருந்தார். அவரை மதுரைப் பல்கலைக்கழகம் 1970 களின் கடைசி ஆண்டுகளில் வருகைதரு பேராசிரியராக அழைத்து அவரிடமிருந்த நாட்டுப்புற இலக்கியங்களைப் பதிப்பிக்கும் பணியை ஒப்புடைத்தது. மதுரைப் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று வந்த நா.வா. தமிழ்நாட்டுப் புறவியலுக்கு இன்னொரு இலக்கிய வகையை அறிமுகப்படுத்தினார். ஐவர் ராசாக்கள் கதை போன்ற கதைப்பாடல்களைப் பதிப்பித்ததோடு அவற்றில் கிடைக்கும் தகவல்கள் வட்டார வரலாற்றிற்கும், நாட்டு வரலாற்றிற்கும் தகவல்களைத் தரும் ஆதார நூல்கள் என்பதை விளக்கியிருந்தார்.

திருநெல்வேலியில் தனியார் பயிற்சி நிறுவனம் ஒன்றை நடத்திக்கொண்டு, இடதுசாரி அறிவுஜீவிகளை உருவாக்கிக் கொண்டிருந்தவர். சோவியத் யூனியன் உருவான பின்பு பல்கலைக்கழகங்களில் என்னென்ன மாற்றங்கள் நடந்தன; என்னென்ன புதுப்புது ஆய்வுகள் செய்யப்பட்டன என்பதை அறிந்து அதனைத் தமிழ்நாட்டுக்கு அறிமுகம் செய்தவர். தனது ஆசிரியத்துவத்தில் ஆராய்ச்சி என்ற ஆய்விதழைத் தொடங்கித் தமிழ்ச் சிந்தனைப் புலத்திற்குப் பெரும்பங்கு ஆற்றியவர். இலங்கையின் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்ற முன்னோடித் திறனாய்வாளர்களை யொத்த திறனாய்வுகளைச் செய்தவர். மார்க்சிய இயங்கியலையும் வரலாற்றுப் பொருள் முதல்வா தத்தையும் கற்பித்ததோடு, வெகு மக்களோடு தொடர்புடைய வேலைகளைச் செய்வதற்கு அறிவுஜீவிகளுக்குப் பயிற்சிகளை வழங்கி, மக்களிடம் அனுப்பியவர்.

சோவியத் யூனியனின் உருவாக்கத்தின் போது மக்களின் கலை இலக்கியங்களைத் தொகுத்தல் பணிகளை அந்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் மேற்கொண்டன. நாட்டுப்புற இலக்கியங்களைத் தொகுத்தல், மக்களிடம் வழங்கிய சொற்களைத் தொகுத்துத் தனிச் சொல்லகராதி தயாரித்தல் போன்றவற்றைச் செய்தன. இத்தகைய பணிகளும் மக்கள் பணிகளே என்பதைத் தமிழ்நாட்டு இளைஞர்களுக்குப் போதித்த பேரா. நா.வா., புதிய சிந்தனைப் பள்ளியையே உருவாக்கினார். அவரின் சிந்தனைகளும் வேலைத்திட்டங்களும் கி.ரா.வுக்கு வழிகாட்டிய பணிகள் என்று கூடச்சொல்லலாம். கோவில்பட்டியிலிருந்து திருநெல்வேலிக்குச் சென்று நா. வானமாமலையைச் சந்தித்து மக்களிடம் இருக்கும் மொழிசார்ந்த தகவல்களைத் திரட்டும் முறைகளையும் நூல்களாக்கும் முறைகளையும் அறிந்துகொண்டதாக கி.ரா.வே சொல்லியிருக்கிறார். விவ்சாய சங்க வேலைக்காகக் கம்யூனிஸ்டுக் கட்சி அலுவலகம் சென்றபோது நா.வா.வைச் சந்தித்து அவரது ஈடுபாடுகளைத் தெரிந்து கொண்டதாகவும், பின்னர் அதுபோன்ற வேலைகளத் தானும் செய்ததாகவும் அவர் சொன்னதுண்டு. நா.வா. நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்த காலத்தில் அவருக்கு உதவியாக இருந்தவர்களில் பிரிக்கப்படாத நெல்லை மாவட்டப்பள்ளி ஆசிரியர்கள் பலருண்டு. அவர்களில் பெரும்பாலோர் தான் நெல்லை வட்டாரக்கதைகளைத் தொகுத்த கி.ரா.வுக்கும் உதவினார்கள். எஸ்.எஸ். போத்தையா, வேலுச்சாமி, கழனியூரன், பாரததேவி போன்றவர்கள் கி.ரா.வுக்கு அறிமுகமானவிதம் இந்தத் தொகுப்பு பணிகள் மூலமாகத்தான். நாட்டுப்புறக் கதைகளின் தொகுப்பை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டிருந்தது. வட்டார வழக்குச் சொல்லகராதியை அன்னம் பதிப்பகம் வெளியிட்டது.

34



நாட்டுப்புற இலக்கியங்களைத் தொகுக்கும் பணியில் கி.ரா.வின் பாணி தனித்துவமானது. மக்கள் வாழ்க்கையில் புழங்கும் மொழியில் ஒதுக்கப்படவேண்டியவை என்று எதுவும் கிடையாது. அவர்களின் பேச்சுமொழி என்ன ஓசையோடு வெளிப்படுகிறதோ, அதை எழுத்தாக்குவதே சரியானது; தேவையானது என்று வலியுறுத்தியவர். வட்டார வழக்குச் சொல்லகராதியைத் தொகுத்த போது இதனைப் பின்பற்றினார், அதேபோல் கதைகளைத் தொகுக்கும் போதும் ஏற்கத்தக்க ஒழுக்கம், இடக்கரடக்கல், மங்கல மொழி போன்றவற்றைக் கடைப்பிடிக்கக்கூடாது. எல்லாவகையான கதைகளும், அவர்களின் மொழியிலேயே எழுதப்படவேண்டும் என்றுசெயல்பட்டார். அப்படித் தொகுக்கப்பட்ட கதைகளே பின்னர் வயதுக்கு வந்தவர்களுக்கு மட்டும் போன்ற தொகுதிகளாக வெளிவந்தன.

சிறுகதைகள் எழுதுவதில் தொடங்கி, நாவலாசிரியராக மாறிய பின்னர் கோவில்பட்டி வட்டாரமக்கள் இலக்கியங்களை - குறிப்பாக கதைகளைத் தொகுக்கும் பணியில் இருந்த காலகட்டத்தில் கி.ரா.வைக் கேள்விப்பட்டவர் அந்தக் கல்வி அதிகாரி. தனது துறையில் இருக்கும் பள்ளி ஆசிரியர்கள் ஒரு எழுத்தாளரின் வேலைகளுக்கு உதவுகிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டு அவரை அவரது சொந்த ஊரான இடைசெவலுக்கே போய்ச் சந்தித்திருக்கிறார். அப்படிச் சந்தித்தவர் தான் கி.வேங்கடசுப்பிரமணியம். அவர் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் முதல்துணை வேந்தர் ஆனபோது, தற்காலப்புனைகதை இலக்கியத்தில் சாதனைகள் செய்த கி.ரா.வை நாட்டுப்புற இலக்கியத்தில் வேலை செய்பவராக அழைத்தார் . அந்த அழைப்பின் முன்மாதிரி பேரா. நா.வா. மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு அழைக்கப்பட்ட நிகழ்வுதான். புதுவைப் பல்கலைக்கழகம் தனக்கு வழங்கிய பணிகளான நாட்டுப்புற இலக்கியத் தொகுப்புகளைத் தொகுத்து வழங்கிவிட்டுப் பணியிலிருந்து வெளியேறினார்.

*(நினைவுகளும் குறிப்புகளும் தொடரும்)*

# தமிழ் அரசுக் கட்சியின்...



(08- 09ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை உரிய மூலோபாயங்களின் அடிப்படையில் கடக்கவேண்டும்.

குறிப்பாக முன்னர் சுனாமிப் பேரலை ஏற்பட்டிருந்த வேளையில் தமிழர் தேசம் எதிர்கொண்ட பாதிப்புக்களுக்கு அமைய மனிதநேய அடிப்படையில் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவது தொடர்பில் முன்னெடுப்புகள் நடைபெற்றிருந்தன. அதனை சிங்களப் பேரினவாத நீதிமன்றம் அழித்துவிட்டது என்பது வேறுகதை.

ஆனால் 2009 ஆம் ஆண்டு,பெரும் இன அழிப்பொன்றின் ஊடாக தமிழர் தேசம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி மக்கள் சொல்லொணாத் பெருந்துயரை சந்தித்திருந்த வேளையில்,மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக ஒரு பொதுக்கட்டமைப்பினை தமிழர் தரப்பு உருவாக்கியிருக்கவேண்டும். ஆனால் அதனையும் செய்யத் தவறிவிட்டோம்.

தற்போது இன்றைய கொரோனா வைரஸ் பெருந்தொற்று காலத்திலும் மக்களின் வாழ்வதார மேம்பாட்டுக்கான மனிதநேய பொதுக்கட்டமைப்பினையும் உருவாக்க தவறிவிட்டோம்.

தேர்தல்,கட்சி அரசியலைக் கடந்து தேசமாக சிந்தித்து காலத்தின் தேவைகளுக்கு அமைய மூலோபா யங்களையும், தந்திரோபாயங்களையும் வகுத்து எமது இலக்கு நோக்கி நாம் நகராதுவிட்டால், தமிழர் தேசம் நிரந்தர ஆக்கிரமிப்புக்கு மட்டுமல்ல, நிரந்தர அடிமைகளாக கையேந்திக் கொண்டிருக்கின்ற நிலைதான் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் அந்த வழிகாட்டி?

○ ம.மயூரபாலன்


உலகத்திலே பலரும் பல விஷயங்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள். சிலர் வயலின் வாசிப்பதற்கு கற்றுக் கொடுக்கிறார்கள், சிலர் நடனம் ஆடக் கற்றுக் கொடுக்கிறார்கள். நாங்களும் எதனைக் கற்றுக் கொள்ள விரும்புகிறோமோ அதனை கற்றுத்தரும் ஆசிரியர்களிடம் செல்கின்றோம். இது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. அதுபோலவே நமக்கு வாழ்விலே அமைதி .ஆனந்தம் தேவை என்றால் அதனை நமக்கு கற்றுத் தரக்கூடிய ஆசானைக் கண்டுகொள்வது மிகவும் அவசியமாகின்றது.

கோடை காலத்தில் ஆபிரிக்காவின் சில பகுதிகளில் வசிக்கும் மக்கள் தண்ணீர் இன்றி மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆனால் அங்கு வாழும் குரங்குகளுக்கு எங்கே தண்ணீர் கிடைக்கும் என்பது தெரியும். அதனாலே முதலில் குரங்கு ஒன்றைப் பிடித்து அதற்கு உண்பதற்கு உப்பைக் கொடுத்து விட்டு இரவு முழுவதும் ஓரிடத்தில் கட்டி வைத்துவிடுவார்கள். குரங்கும் மிகவும் விருப்பத்துடன் உப்பைச் சாப்பிடும். மறுநாள் காலையில் அதனை அவிழ்த்து விடுவார்கள்.

உப்பைச் சாப்பிட்ட காரணத்தினாலே குரங்குக்கு மிகவும் தாகம் எடுக்கும். அது தாகத்தினால் எங்கே தண்ணீர் உள்ளதோ அந்த இடத்துக்கு ஓடிச்செல்லும். அப்பொழுது அதன் பின்னால் செல்லும் மக்களும் அந்தத் தண்ணீர் உள்ள இடத்தை கண்டு தமது தாகத்தைத் தணித்துக் கொள்வார்கள். இங்கே மக்களின் தாகத்தை தணிப்பதற்கு ஒரு குரங்கு வழிகாட்டியாக இருக்கின்றது. அது போலவே நமது உள்ளத்தின் தாகத்தை தணிப்பதற்கு நமக்கு ஒரு வழிகாட்டி, ஒரு ஆசான் அவசியமாக உள்ளார்.

இன்றைய காலத்திலே உண்மையான ஆசானை அடையாளம் கண்டு கொள்வது என்பது மிகப் பெரிய சவாலாக உள்ளது. ஒரு நாள் அரசன் ஒருவனது காதுகளுக்கு அவனது அண்டை நாட்டில் வசிக்கும் ஒருவன் மரணத்தை வெல்வதற்கான வழியைக் கண்டு பிடித்திருக்கின்றான் எனும் ஒரு அபூர்வச் செய்தி கிட்டியது. அரசனும் தனது சேவகனை அழைத்து காலம் தாமதிக்காது விரைவாக அயல் நாட்டுக்குச் சென்று அந்த மரணத்தை வெல்லும் வழிமுறையை அறிந்து வா என அனுப்பினான். சேவகனும் உடனடியாக புறப்பட்டு அயல்நாடு சென்றான். சில நாட்கள் கழிந்த பின்னர் சேவகன் மீண்டும் திரும்பி வந்தான்.

அவன் "அரசே, நான் அங்கு சென்று அடைவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னரே அந்த மனிதன் இறந்துவிட்டான்" என்ற கெட்ட செய்தியை அரசனுக்கு தெரிவித்தான். அரசனுக்கு மிகுந்த ஏமாற்றமும் கோபமும் ஏற்பட்டது. அந்த சேவகன் தாமதமாகத் சென்ற காரணத்தினால் அந்த வழிமுறையை தன்னாலே அறிந்து கொள்ள முடியவில்லை. அதனால் அவனுக்கு கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும் என எண்ணினான். அவனுக்கு என்ன தண்டனை வழங்குவது என்பது பற்றி அரச சபையில் மிகப் பெரிய விவாதம் நடைபெற்றது. அப்பொழுது அந்த இடத்துக்கு வந்த ஞானி ஒருவர் இந்தக் குழப்பத்தைப் பார்த்து என்ன நடந்தது என அரசனிடம் கேட்டார். அதற்கு அரசனும் நடந்தவற்றை கூறினான். அதற்கு அந்த ஞானி "அரசனே ஏன் உன்னால் தெளிவான விஷயத்தைப் பார்க்க முடியவில்லை? அந்த மனிதன் உண்மையிலே மரணத்தை வெல்லும் வழியை அறிந்திருந்தால் அவன் எவ்வாறு இறந்திருக்க முடியும்?" எனக் கேட்டார். அப்பொழுதுதான் அரசனது அறிவுக் கண்கள் திறந்தன.



அந்த அரசனைப் போலவே நாமும் பல விடயங்களை எந்தவித ஆதாரமும் இன்றி நம்புகின்றோம். "உங்களது பிரச்சினைகளைத் தீர்த்து, உங்களது மன விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கு உடனடியாக அழையுங்கள்" என ஒரு விளம்பரத்தைப் பார்த்தால் அதனை உண்மையென நம்பிவிடுவோம். நம்மைத் துன்பத்தில் ஆழ்த்தும் பல விடயங்கள் மனதின் விருப்பத்தினால் ஏற்பட்ட விளைவுகள்தான் என்பது நமக்கு நாளடைவில்தான் தெரியவருகின்றது.

அதற்காக திருமூலர்,

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்.
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி
குருடும் குருடும் குழிவிழுமாறே

- என மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார். நாம் அறியாமை எனும் இருளை அகற்ற வல்ல குருவைத் தேடுவதில்லை. நமது மன விருப்பங்களைப் பூர்த்திசெய்ய உதவும் ஒரு குருவைத்தான் தேடுகின்றோம். ஆனால் குரு என்ற சொல்லை பார்த்தோம் என்றால் அது இரண்டு எழுத்துக்களால் ஆனது. 'கு 'என்பதன் அர்த்தம் இருள் 'ரு' என்பதன் அர்த்தம் ஒளி. அதாவது யார் ஒருவர் உங்களை இருளிலிருந்து ஒளிக்கு எடுத்து வருகிறாரோ அவர் தான் குரு ஆவார். கடவுள் எல்லா இடமும் நீக்கமற நிறைந்துள்ளார் என கூறுவது மிகவும் சுலபம். ஆனால் உள்ளத்திலே வீற்றிருக்கும் கடவுளை உணர வைப்பது மிகவும் எளிதான காரியம் இல்லை. ஆனால் மனிதனைப் பொறுத்த வரையில் எதுவரை அவன் அதனை அனுபவிக்கவில்லையோ, அதுவரை ஒன்றுமே நிறைவாக இருக்காது. ஒரு விடயத்தைப்பற்றி எழுதுவதாலும் படிப்பதாலும் நாம் அதனைக் கொள்கையளவில் அறிந்துகொள்ள முடியுமே தவிர அதன் அனுபவத்தைப் பெறமுடியாது. நீங்கள் சைக்கிள் ஓடக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றால் பெடலை அழுத்த வேண்டும், நேரே பார்க்க வேண்டும் என்றெல்லாம் மணிக்கணக்காக ஒருவர் கூறுவதைக் கேட்க முடியும். ஆனால் நீங்கள் ஒரு சைக்கிளில் ஏறி அமர்ந்து அதனை ஓட முயற்சிக்காதவரை அது எவ்வாறு இருக்கும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்கள். மனிதன் என்ற ரீதியில் நாங்கள் பல விடயங்களை செய்யலாம். ஆனால் நமது உள்ளத்தில் வீற்றிருக்கும் அந்த எல்லையில்லாத மெய்ப்பொருளை, இந்தப் புத்தியினால் விளங்கிக் கொள்ள முடியாத அந்த மெய்ப்பொருளை அறிந்து உணரமுடியும். அனுபவம் செய்ய முடியும். நாம் அதனை எப்பொழுது அனுபவம் செய்கிறோமோ அப்பொழுது நமது வாழ்வு பயனுள்ளதாகும். ■

# கொரோனாவை விரட்டு அன்றேல் காலமெல்லாம் இருட்டு



(கொரோனாக் காலப் பதிவுகள்)

○ வேலணையூர் சுரேஷ்

56
தகன மாகுதே தங்க உடல்கள்
தரையில் பெருகுதே கண்ணீர்க் கடல்கள்
சகலரும் கவனம் கவனம் என்றோம்
சற்றும் காதில் விழுத்தாது அலைந்தீர்
நுகரும் போது நுண்ணுயிர்க் கிருமி
நுழையும் என்றோம்; நுழையாது என்றீர்
பகரும் துயரப் படலம் பாரீர்
பதறும் தொகைச் சடலம் காணீர்

57
சும்மா இருக்கச் சொல்லிக் கேட்டா
சொல்ல வில்லை என்கிறீர் 'கோட்டா'
அம்மா(ட) கிளினிக் கொப்பி கொண்டு
அலைந்து திரிகிறீர் சேர்ந்து கூட்டா
இம்'மா' பாதகம் செய்வதைப் பார்த்தா
இப்போது ஒன்றும் சரிவர மாட்டா
அம்மளவு உயிர்களும் அழிவதற்கு ஒப்பு
அறிந்தும் அறியாது செய்கிறீர் தப்பு

58
முடக்கம் என்பது செய்தி மட்டும்
முன்போல் திரிகிறீர் இருளும் மட்டும்
அடக்கம் கொண்டு இருக்க விட்டும்
யார்தான் கேட்கிறீர் இவ்விடர் பட்டும்
இடக்கு முடக்காய் திரிந்து திரிந்து
இல்லாத இடமும் நோயைப் பரப்பி
அடக்கம் கொள்ள மாட்டீர் வீட்டில்
அடங்கப் போகிறீர் இனிச்சுடு காட்டில்

59
தொண்டை உள்ளே ஈரம் வற்றி
தொடுபவர் மீதிலும் கிருமி தொற்றி
அண்டை இடங்கள் யாவையும் சுற்றி
அந்நோய் ஆட்டம் போடுது முற்றி
மண்டையைப் போடுபவர் சாவைப் பற்றி
மனதால் உணர்ந்தால் அதுவே வெற்றி
[illegible]
தூய்மை பேணல் ஒன்றே புத்தி

60
தேவை யற்று வெளியில் வராமல்
தேடிச் சென்று நோயில் விழாமல்
சாவை இழப்பை குறைக்க என்றே
சகலரும் கவனம் கொள்வோம் இன்றே
கோவிட் நோயை கண்கள் காணாத்
தொலைவிற் கப்பால் விரட்டும் வரையில்
காவற் படைபோல் கண்ணும் கருத்தா
காத்து நிற்போம் எம்மை நாமே

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணங்களின் ரயில் 7

விறுவிறுப்பான திகில் சித்திரக் கதை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org